**Palm Print Inc.**
உங்கள் சகல அச்சுத் தேவைகளுக்கும்...
1345 Morningside ave #8, Scarborough Tel:416-284-9545



இருளிலிருந்து ஒளிக்கு...
# பூபாளம்
www.boobalam.com



Dental Clinic
Dr. Iru VIJAYANATHAN, BDS, MFDS, FAGD
General Dental Practitioner
3150 Eglinton Ave East Scarborough (Markham & Eglinton)
3151 Markham Road # 129 Scarborough (Markham & Steeles)
416.264.3232 | 416.609.2022



28 புரட்டாதி 2012 இதழ் 4


## லிபரல் கட்சியின் புதிய தலைவர்

# ஜஸ்ரின் ரூடோ?



ஜஸ்ரின் ரூடோ (Justin Trudeau?) அடுத்த கனேடியன் லிபரல் கட்சியின் தலைவர் பதவிக்கு போட்டியிடலாம் என பல செய்திகள் வெளியாகியுள்ளன. ஆனால் ஜஸ்ரின் ரூடோ இதுபற்றி அறிவிக்க இப்போது எதுவுமில்லை என பத்திரிகையாளர்க்கு கூறியுள்ளார். 1971 ஆம் ஆண்டு மார்கழி மாதம் பிறந்த ஜஸ்ரின் ரூடோ முன்னாள் கனேடிய பிரதமர் Pierre Elliot Trudeauவின் மகனாவார்.

ஜஸ்ரின் ரூடோ மொன்ரியல் McGill பல்கலைக்கழகத்தில் BA ஐயும் University of British Columbia வில் BEd ஐயும் முடித்திருந்தார். 2005 இல் மணமுடித்த இவருக்கு இரு பிள்ளைகள் உண்டு.

சிறுவயதிலிருந்தே லிபரல் கட்சியில் இணைந்து செயல்பட்ட இவர் 2008 ஆம் ஆண்டு கியூபெக் மாகாணத்து Papineau தொகுதியின் மத்திய அரசின் பாராளுமன்ற உறுப்பினராக 41.47% வாக்குகள் பெற்று தெரிவு செய்யப்பட்டிருந்தார். 2011 தேர்தலில் லிபரல் கட்சி மூன்றாம் இடத்தை அடைந்தபோதும் இவர் மீண்டும் அதே தொகுதியில் பாராளுமன்றத்துக்கு 38.41% வாக்குகள் பெற்று தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

பாராளுமன்றத்தில் Conservative கட்சியிக்கும் NDP இக்கும் பின்னால் மூன்றாம் இடத்தில் நிற்கும் லிபரல் இப்படியான ஒரு பிரபல, இலகுவில் வாக்குகளை கவரக்கூடிய நபரை தலைவராக்குவதற்கு விரும்புவர் என்பதில் சந்தேகமில்லை.

இவர் ஒரு பிரெஞ்ச் பிரசையானபடியால் கியூபெக் மக்களின் வாக்குக்களையும், வயதில் இளையவர் என்றபடியால் இளைய சந்ததியின் வாக்குக்களையும் இவர் பெற அதிகம் வாய்ப்புண்டு. அது மட்டுமன்றி இவர் பற்றி இதுவரை பாரிய குற்றச்சாட்டுகள் எதுவும் வெளிவந்திருக்கவில்லை. தற்போது முன்னிலை தலைவர்கள் எவரும் அற்ற லிபரல் கட்சியினருக்கு இவர் ஒரு அரிய வாய்ப்பாக இருக்கலாம்.

கியூபெக் பாராளுமன்ற உறுப்பினர் Denis Coderre, Ralph Goodale போன்றோரும் தலைமை பதவிக்கான போட்டியில் பங்குபற்றலாம் எனவும் நம்பப்படுகிறது. ஆனால் அவைகளும் இதுவரை முடிவுகள் எதையும் தெரிவிக்க வில்லை. லிபரல் MP John McCallum தின் கருத்துப்படி ஜஸ்ரின் ரூடோவின் வருகை மற்றைய போட்டியாளர்களை தயக்கமடைய செய்யலாம்.

தற்போதைய லிபரல் தலைவர் போப் ரே தான் எதிர்வரும் லிபரல் தலைமைக்கான போட்டியில் பங்குகொள்ளமாட்டேன் என தெரிவித்துள்ளார்.

சில லிபரல் புள்ளிகள் தற்போதைய Bank of Canada govenrnor Mark Carney யை உள்வாங்கி லிபரலில் தலைமை பதவிக்கு போட்டியிடவைக்கவும் முனைகிறார்கள். தற்போது தொழில் காரணமாக வெளிநாட்டில் இருக்கும் இவரும் உத்தியோகபூர்வமாக எதையும் தெரிவிக்கவில்லை.

## கூட்டமைப்பு இந்தியா விஜயம்

*- தாயகத்திலிருந்து விஜய்*

இந்திய மத்திய அரசு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை டில்லி வருமாறு உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுத்துள்ளது. இதன் பிரகாரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையிலான குழு எதிர்வரும் 10 ஆம் திகதி இந்தியா செல்லவுள்ளது என த.தே.கூட்டமைப்பின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தெரிவித்திருக்கிறார். இவ் விஜயத்தின் போது கூட்டமைப்பினர் இந்தியப் பிரதமர், தமிழக முதலமைச்சர், இந்திய எதிர்க் கட்சித் தலைவி சுஷ்மா சுவராஜ் மற்றும் முக்கிய தலைவர்களை சந்திப்பார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆயினும் இவ்விஜயம் தொடர்பான நிகழ்ச்சி நிரல் கூட்டமைப்பினருக்கு இன்னமும் கிடைக்கப் பெறவில்லை.

த.தே.கூட்டமைப்பின் இந்திய விஜயம் பற்றிக் கருத்து வெளியிட்டுள்ள ஜாதிக ஹெல உறுமயவின் மத்திய குழு உறுப்பினரும் தேசிய அமைப்பாளருமான நிஷாந்த ஸ்ரீ வர்த்தனசிங்க, "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு டில்லிக்கு காவடி எடுப்பதால் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிட்டப்போவதில்லை. கூட்டமைப்பினர் இந்தியாவின் பிரதிநிதிகளாக மாறியுள்ளனர்." எனத் தெரிவித்துள்ளார்.

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர, "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இந்தியாவுக்கு வருமாறு மத்திய அரசாங்கம் அழைப்பு விடுத்திருப்பது எமது நாட்டின் இறைமைக்கு விடுக்கப்பட்ட சவாலாகும். எனவே அரசாங்கம் கூட்டமைப்பைத் தடை செய்ய வேண்டும்" என்ற கோரிக்கையை விடுத்திருக்கிறார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்திய விஜயம் குறித்துக் கருத்து வெளியிட்டுள்ள


*தொடர்ச்சி 4ம் பக்கம்*




## இந்த வாரம் boobalam.com இல்...


கூட்டமைப்பின் செயற்பாடுகள் பலப்படுத்தப்படும்
இந்தியா வரும் Walmart
மூடப்படுகிறது மனிக்பாம் இடைத்தாங்கல் முகாம்





"Make Your Dream Home Come True"
Mississauga Branch
Monte Carlo Corporate Centre
7045 Edwards Boulevard, Suite 201
Mississauga, Ontario L5S 1X2
905-565-9200
Toronto Office
Morneau Sobeco Centre
895 Don Mills Rd., Ste. 202
Toronto, Ontario M3C 1W3
416-391-3232
Param Gnanaswaran
REAL ESTATE BROKER
Direct: 416 - 230 - 1107
RIGHT AT HOME REALTY INC.
REAL ESTATE BROKERAGE

Keeth Appliance & Heating, Air conditioning Services
Central Air coditioning, furnace repair and installation, Fridge/Washers/Dryers, Dishwashers/Stoves



Certified technicians! Reasonable rates! Reliable service!
Keeth
Repair Technician
416.995.3938

பூபாளத்தில் விளம்பரம் செய்ய
Tel: 416 284 4004
e-mail: boobalam@ymail.com

# மீள்குடியேற்றம்
## இடம் பெயர்ந்த மக்கள் தமது எதிர்காலத்தை தாமாகவே தீர்மானிக்க வேண்டும்

**தாயகத்திலிருந்து விஜய்**

வெள்ளமுள்ளி வாய்க்காலில் இடம் பெற்ற மீள்குடியேற்றத்தின் இறுதிக்கட்ட நிகழ்வில் கலந்து கொண்டு பேசிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்கள், "தெற்கு மக்கள் அனுபவிக்கும் அனைத்து சலுகைகளும் வடக்கில் மீள் குடியேற்றப்பட்ட மக்களுக்கும் பெற்றுக் கொடுக்கத் தயார். முள்ளிவாய்க்கால் பகுதி நாட்டின் முன்னேற்றமான பிரதேசமாக கட்டியெழுப்பப்படும்" எனக் குறிப்பிட்டிருக்கிறார்.

வன்னியில் 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற இறுதிக்கட்டப் போரின் போது, புலிகள் பிரதேசத்திலிருந்து வெளியேறிய மக்களைத் தங்க வைப்பதற்காக அமைக்கப்பட்டதே மெனிக்பாம் இடைத்தங்கல் முகாம். சுமார் மூன்று லட்சம் பேரைக் கொண்ட ஏழு பெரிய பிரிவுகளைக் கொண்ட இம்முகாம் உலகிலேயே மிகப் பெரிய அகதி முகாமாக கணிக்கப்பட்டது. முள்வேலி தடுப்பு அமைக்கப்பட்டு நடமாட்ட சுதந்திரம் கட்டுப்படுத்தப்பட்ட இந்த முகாமை அரசாங்கம் மெனிக்பாம் நலன்புரி நிலையம் என்றே குறிப்பிட்டது.

முகாமில் எஞ்சியிருந்த மக்கள் 25 ஆம் திகதியுடன் மீள்குடியேற்றம் செய்வதற்காக வெளியேற்றப்பட்டதுடன் முகாம் முடப்பட்டதாக அறிவிக்கப் பட்டது.

இதையடுத்தே 26 ஆம் திகதி மீள்குடியேற்றத்தின் இறுதிக்கட்ட நிகழ்வும் வெள்ளமுள்ளி வாய்க்காலில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டபோதே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்கள் "தெற்கு மக்கள் அனுபவிக்கும் அனைத்து சலுகைகளும் வடக்கில் மீள் குடியேற்றப்பட்ட மக்களுக்கும் பெற்றுக் கொடுக்கத் தயார்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

மெனிக்பாம் இடைத்தங்கல் முகாம் முடப்பட்டதன் பின்னர், யுத்தத்தில் இடம் பெயர்ந்தோரின் மீள்குடியேற்றத்தின் நிலை என்ன என்ற வினா எழுந்திருக்கிறது.

மெனிக்பாம் இடைத்தங்கல் முகாம் முடப்பட்டது தொடர்பாக ஐ.நா. மனிதாபிமான இணைப்பாளர் சபீனே நந்தி வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில், "2009 ஆம் ஆண்டு இலங்கையில் நடந்த மோதலின் போது இடம் பெயர்ந்தோருக்கு அமைக்கப்பட்டதும் ஒரு காலத்தில் உலகின் மிகப் பெரிய முகாமாக இருந்ததுமான மெனிக் பாம் முடப்பட்டுள்ளது. யுத்தம் முடிந்து மூன்று வருடங்கள் கடந்துள்ள நிலையில் இலங்கையில் இடம் பெயர்வு அத்தியாயத்தை முடிவுக்கு கொண்டு வருதல் எனும் இலக்கை நோக்கிய வரலாற்று முக்கியத்துவம் மிக்க நிகழ்வாக இது அமைகின்றது" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இவ்வறிக்கையில் "தமது வீடுகளுக்கு திரும்ப முடியாதுள்ள மக்கள் இன்னும் உள்ளனர். இந்தப்பிரச்சினைக்கு அவசரமாக தீர்வு காணவேண்டிய தேவையும் உள்ளது" எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

முக்கியமாக இறுதியாக மீள்குடியேற்றம் செய்ய என அழைத்துச் செல்லப்பட்ட முல்லைத்தீவு கோப்பாப் பிலவுப் பகுதியைச் சேர்ந்த 110 குடும்பங்கள் தமது சொந்த இடங்களில் குடியேற்றப்படாதிருக்கிற நிலை பற்றி கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. சபீனே நந்தி வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில், "இவர்களினால் தமது சொந்த வீடுகளுக்கு செல்ல முடியாது. இந்த வீடுகளில் இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளனர். இவர்களை அரசாங்கம், அரசுக்கு சொந்தமான வேறு காணிகளில் குடியமர்த்தி வருகின்றது. ஆனால் இடம் பெயர்ந்த மக்கள் தமது எதிர்காலத்தை தாமாகவே தீர்மானிக்க வேண்டும்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடம் பெயர்ந்த மக்களை சொந்த இடங்களில் குடியேற்ற வேண்டும் என்ற கோரிக்கையை தமிழ் அரசியல் தலைவர்கள் பலரும் முன்வைத்துள்ளனர். ஏற்கனவே கோப்பாப்பிலவு மக்கள் தங்களை சொந்த இடங்களில் குடியேற்றக் கோரி போராட்டத்திலும் ஈடுபட்டும் இருந்தனர். கோப்பாப் பிலவு போலவே திருமுறிகண்டி, பரவிப்பாஞ்சான், இரணைதீவு, முகமாலை, மருதநகர் ஆகிய கிராமங்களிலும் மக்கள் குடியெற முடியாத நிலையே உள்ளது. இம்மக்களின் அவல நிலைகளை வெளிக்கொணர எதிர்வரும் 27 ஆம் திகதி மக்கள் எதிர்ப்பு இயக்கத்தை நடாத்துவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அழைப்பும் விடுத்திருக்கிறது.

இதனை விட நண்பர்கள் மற்றும் உறவினர்களின் வீடுகளில் இன்னமும் இடம்பெயர்ந்த நிலையில் வாழ்ந்து வருபவர்கள் குறித்தும் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் குறித்து சபீனே நந்தி வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில், "வவுனியா மற்றும் யாழ்ப்பாணத்திலும் தமது உறவினர்கள் மற்றும் நண்பர்களுடன் அல்லது நலன்புரி நிலையங்களில் இன்னும் இடம் பெயர்ந்த நிலையில் வாழும் பலர் உள்ளனர். இவர்கள் பல ஆண்டுகளாக இடம் பெயர்ந்து வாழ்கின்றனர். இவர்களுக்கு நிரந்தர தீர்வு காணப்பட வேண்டும்" எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கப்பால், மீள் குடியேற்றம் செய்யப்பட்ட பகுதிகளில் அடிப்படை வசதிகள் செய்யப்படவில்லை எனவும், மீள்குடியேறியோரிற்கான வாழ்வாதார உதவிகள் போதுமானதாக இல்லை எனவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இறுதியாக குடியேற்றப்பட்ட கோப்பாப் பிலவுப் பகுதியைச் சேர்ந்த குடும்பங்கள், வற்றாப்பளை மகா வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டு, கோப்பாப் பிலவுக்கு அருகிலுள்ள சூரியபுரம் பகுதியில் குடியேற நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அங்கு காடுகள் அழிக்கப்பட்டுள்ள போதிலும் குடிநீர் உட்பட எந்த அடிப்படை வசதிகளும் செய்யப்படாமலே மீள்குடியேற வற்புறுத்துவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்கு முன்னர் மீள் குடியேற்றப்பட்ட சில பகுதிகளில் நிலைமை இன்னமும் மேசமானதாகவே காணப்படுகிறது. மீள் குடியேற்றம் செய்யப்பட்ட பல பகுதிகளிலும் அடிப்படை வசதிகள் பூரணமாக வழங்கப்படவில்லை என்றே தெரிவிக்கப்படுகிறது மீள் குடியேறி யோருக்கான இந்தியாவின் வீட்டுத்திட்டம் காலதாமதமாக்கப்பட்டுள்ளது. அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற் பாடுகளும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இதற்கப்பால் மீள் குடியேறியோரின் தொழில் மற்றும் வருமானத்திற்கான ஏற்பாடுகள் மிகவும் மேசமானதாகவே இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் தொழிலுக்கான வாய்ப்புக்கள் இன்னமும் வளர்ச்சி யடையவில்லை. பாதிக்கப்பட்ட பல குடும்பங்களில் உழைக்கக் கூடிய இளைஞர்கள் இல்லாதிருக்கின்ற நிலை பற்றியும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பல குடும்பங்கள் பெண்களைத் தலைமையாகக் கொண்ட குடும்பங்களாக உள்ளன. கணிசமானளவுக்கு அங்கவீனமானவர்களும் உள்ளனர். யுத்த அழிவினால் காணி உரிமை தொடர்பான பிரச்சினைகள் மேற்கிளம்பியுள்ளன.

இதனை விட யாழ்ப்பாணத்திலும், கிழக்கிலும் மீள் குடியேற முடியாத நிலையில் முகாம்களில் அல்லது உறவினர் மற்றும் நண்பர்கள் வீடுகளில் வாழ்ந்து வருவோரும் உள்ளனர். முக்கியமாக சம்பூர் அகதிகள் தமது சொந்த இடங்களிலேயே தங்களை மீள்குடியேற்றம் செய்ய வேண்டும் எனக் கோரி தற்போதும் அகதி முகாம்களிலேயே வாழ்ந்து வருகின்றனர். கிழக்கில் மீள் குடியேற்றப்பட்ட பல பகுதிகளில் அடிப்படை வசதிகள், பொருளாதார வாய்ப்புக்கள் குறித்து திருப்திகரமான செய்திகள் இல்லை.

அரசாங்கம் வட. கிழக்கில் உள் கட்டமைப்பு தொடர்பான பாரிய அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அரசாங்க சார்பற்ற நிறுவனங்கள் அரசாங்கத்துடன் இணைந்து புனர்வாழ்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. புலம் பெயர்ந்தோரின் உதவிகள் கிடைக்கின்றன. மக்கள் தமது வாழ்வினை மீளக்கட்டியமைக்கும் முயற்சிகளில் தீவிரமான அக்கறை கொண்டு செயற்படுகின்றனர்.

ஆனால் நிலைமைகள் வழமையான முறையிலான அபிவிருத்தித் திட்டங் களினால் இம்மக்களின் வாழ்வினை மேம்படுத்திவிட முடியாது என்பதனையே உணர்த்தி நிற்கிறது.

ஐ.நா. மனிதாபிமான இணைப்பாளர் தெரிவித்துள்ளது போல, இடம் பெயர்ந்த மக்கள் தமது எதிர்காலத்தை தாமாகவே தீர்மானிக்கக் கூடிய நிலை உருவாக்கப்பட வேண்டும். மீள் குடியேற அழைத்துச் செல்லப்பட்ட புதுக்குடியிருப்பைச் சேர்ந்த ஒருவர் "கடந்த மூன்றரை வருடங்களாக இங்கு தங்கியுள்ளோம். எவ்வித சொத்துக்களையும் கொண்டு வராது உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு வந்த எமக்கு தற்போது திரும்பிச் செல்லும் போதும் அதே நிலையிலேயே செல்ல வேண்டியுள்ளது. நாம் முகாமில் தங்கியிருந்த காலத்தில் வெளியில் சுதந்திரமாக நடமாட விட்டிருந்தால் நாம் காலத்தை வீணடிக்காது எமது எதிர்காலம் தொடர்பாக திட்டமிட்டிருப்போம். ஆனால் பல இறுக்கங்களை விதித்து எம்மை வீணடித்த நிலையே உள்ளது" எனக் குறிப்பிட்டிருக்கிறார்.

## ததேகூ இந்திய விஜயம்
### பாதுகாப்பு வலயம் குறித்தும் டெல்லி கவலை!

தமிழ் தேசிய கூட்டமைப்பு இந்திய விஜயத்தின் போது அதிகாரப்பரவலாக்கல் உட்பட பாதுகாப்பு வலயம் பற்றியும் பேச இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளது. சம்பந்தர் தலைமையில் செல்ல உள்ள தமிழ் தேசிய கூட்டமைப்பில் டெல்லி விஜயத்தின் போது இடம் பெறும் அங்கத்தவர்கள் குறித்து இதுவரை முடிவுகள் எடுக்கப்படாத போதிலும் பேச்சு வார்த்தையில் இடம் பிடிக்கக்கூடிய முக்கிய விடயங்களில் ஒன்றாக பாதுகாப்பு வலயம் இடம் பெறும் என தமிழ் தேசிய வட்டாரங்கள் தெரிவித்தன.

இருப்பினும் பேச்சு வார்த்தை பற்றிய நிகழ்ச்சி நிரல் பற்றியோ அன்றி பேச உள்ள விடயங்கள் குறித்தோ எதுவும் முடிவுகள் எடுக்கப்படாத நிலையிலும் கூட பாதுகாப்பு வலயம் பற்றி டெல்லி அதிக அக்கறை கொண்டுள்ளதை உணர்ந்துள்ள தமிழ் தேசிய அணி இது பற்றி அதிகம் கரிசனை கொண்டுள்ளதாக கொழும்பில் உள்ள தமிழ் தேசிய வட்டாரங்களுக்கு நெருக்கமானவர்கள் தெரிவித்துள்ளனர்.

டெல்லி செல்லும் அணியில் இதர தமிழ் குழுக்கள் இடம் பெறுமா என்ற கேள்விக்கு பதில் டெல்லியின் முடிவில் தங்கியிருப்பதாகவும் இவ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.


BUY, SELL or LEASE

Dinesh Jeganathan
Sales Representative



cell: 647-895-3466
email: jdinesh@live.ca
office: 416-298-3200
fax: 416-298-3440

HomeLife HIGHER STANDARDS

HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, Ontario, M1P 4S6
*each office independently owned and operated
** Not intended to solicit Buyers/Sellers under representation agreement.

# திருவிழாவில் திருட்டுக் கூட்டம்!



ஏடு இட்டோர் இயல்

எங்கள் வாழ்வில் கோயில் திருவிழாவிற்கு தனியான இடம் உண்டு. தன்னுடைய கஷ்டங்களுக்கு எல்லாம் மேலே உள்ளவன் விடுதலை பெற்றுத் தருவான் என்று நம்புகிற ஒவ்வொரு மனிதனும் கடவுளின் பெருமையை முழு ஊரோடு கூடிக் கொண்டாடுகின்ற விழாவே திருவிழா. விழாக்கோலம் என்பது போல, கோலாகலமாக இறைவனைக் கூடித் தொழுது, தேரில் வைத்து ஊரைச் சுற்றி முழு ஊரையுமே தன் அருளால் அந்த இறைவன் நிறைக்க வேண்டும் என்பதற்காகத் தான் கடவுள் நம்பிக்கையுள்ள ஒவ்வொரு மனிதனும் திருவிழாக்களில் பக்தி சிரத்தையுடன் கலந்து கொள்கிறான்.

நொந்து போயிருக்கும் ஏழை, எளியவர்களும், செல்வச் செழிப்போடு இருக்கும் செல்வந்தர்களும் வேறுபாடின்றி, இறைவன் சந்நிதானத்தில் வந்து, இறைவனைப் போற்றிப் புகழ்ந்து, தன் மனவேதனைகளையும் சொல்லி அழுது அவற்றிற்கு அந்த இறைவனிடம் இருந்து தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு தொழுகிறார்கள்.

ஆனால், திருவிழா வெறுமனே இந்தப் பக்தகோடிகள் கலந்து கொள்கிற நிகழ்வு அல்ல.

மதங்களும் கோயில்களும் மக் களை ஏமாற்றுகின்றன என்னும் சீர்திருத்த வாதிகளும், மதம் ஒரு போதைப்பொருள் என்று கூறும் தத்துவவாதிகளும், கடவுள் இல்லையென்று வாதிடுகின்ற நாத்திகர்களும் கூடத் தான் ஓரமாய் நின்று போவோர் வருவோருக்கு எல்லாம் 'உங்களை இவர்கள் ஏமாற்றுகிறார்கள், இந்த தெய்வங்களும் சாமிகளும் பொய்' என்று கூறிக் கொண்டிருப்பார்கள். தூய்மையான மனதுடன் கடவுள் மீது நம்பிக்கை வைப்போரைப் புண்படுத்தக் கூடாது என்பதற்காக, 'கோயில் கூடாது என்பதற்காக அல்ல, கொடியவர்களின் கூடாரம் ஆகி விடக் கூடாது' என்று கூறும் பகுத்தறிவு வாதிகளும் இருப்பார்கள்.

ஆனால் கடவுள் நம்பிக்கையுள்ளவர்கள் இதையெல்லாம் பொருட்டுத்துவதில்லை. தங்களையுடைய நம்பிக்கையைக் கடவுள் சிதறடிக்க மாட்டார் என்ற நம்பிக்கை அவர்களுக்கு.

இவர்களை விட, அங்கே திரளும் கூட்டத்தைப் பார்த்து வியாபாரிகள் கடை விரிக்கிறார்கள். கடவுளுக்குத் தீபம் காட்டியும் மலர் தூவியும் வழிபட, கற்பூரம் மற்றும் பூக்கள் விற்கும் வியாபாரிகள் மட்டுமன்றி, அதை ஒரு சந்தையாகவே நினைத்து சகல பொருட்களையும் விற்கும் வியாபாரிகளும் அங்கே கூடத் தான் செய்கிறார்கள். இவர்களுக்காகவே ஒதுக்கப்பட்ட இடங்களில் அவர்கள் தங்கள் பொருட்களை விற்பதால் வேண்டியவர்கள் தங்களுக்குத் தேவைப்பட்டதை அங்கே போய் வாங்கிக் கொள்ள முடியும். அவர்களின் வியாபாரம் கோயிலின் புனிதத்தைக் கெடுப்பதில்லை. வழிபாட்டுக்குரிய இடத்துக்குள் வியாபாரம் தலையை நுழைப்பதில்லை.

ஆனால் திருவிழா இந்தப் பக்தர்களையும் வியாபாரிகளையும் நாத்திகர்களையும் மட்டும் வர வைப்பதில்லை. அங்கே தீய நோக்கங்களுடன் உள்ளவர்களும் வருகிறார்கள்.

இளம் பெண்களுடன் அங்க சேஷ்டை செய்யும் வக்கிரபுத்தி கொண்ட இளைஞர்கள் வருகிறார்கள். கோயில் பிரகாரத்துக்குள் செருப்பு இருக்காது என்ற நம்பிக்கையுடன்.

கும்பலோடு கும்பலாக சன நெரிசலுக்குள் பைகளுக்குள் கை விட்டுத் திருடும் முடிச்சுமாறிகள் வருவார்கள். இந்தத் திருடர்கள் எல்லாம் கறுப்பு உடை அணிந்து முகமூடிகளுடன் வருவதில்லை. இவர்கள் எல்லாம் பக்தர்களைப் போலவே வேசம் போட்டு, பக்தர்களோடு பக்தர்களாக நெரிசலுக்குள் உருவிக் கொண்டு போய் விடுவார்கள். இங்கே கூட, கூட்டத்திற்குள் கழுத்து நகையைத் திருடும் திருடர்கள் நிறையவே திருவிழாக்களில் உள்ளனர்.

இந்தச் சிறிய திருடர்களுக்கெல்லாம் அப்பனான திருடர்களும் இருப்பார்கள். கடவுளுக்கும் தங்களுக்கும் நேரடியான தொலைபேசி இணைப்பு இருப்பதாகக் காட்டும் கூட்டம். இறைவனைத் தரிசிப்பதற்காக வரும் ஏழை, எளியவர்களுக்கு இறைவனின் அருள் தங்கள் ஊடாகத்தான் கிடைக்கும் என்று நம்ப வைக்க முயற்சிக்கும் கூட்டம்.

திறந்த மேனியராய், சந்தனம், விபூதி சகிதம் பக்திப் பழங்களாய், இறைவன் சந்நிதானத்தில் தங்களுக்குத் தான் முதலிடம், இறைவன் தங்களுக்கு எல்லாம் வரம் கொடுத்து, அருள் பாலித்து முடிந்து எஞ்சியதைத் தான் இந்த ஏழை, எளியவர்களுக்கு கொடுப்பான் என்பது போல நடிப்பவர்கள்.

ஐந்து ரூபா கொடுத்து அர்ச்சனை செய்யும் ஏழையை விட, ஆயிரம் ரூபாய் கொடுத்து யாகம் நடத்தும் பணக்காரனுக்கு அதிகமாய் அருள் பாலிக்கும் கடவுளோடு எங்களுக்கும் கூடத் தான் பிரச்சனை.

அந்த இறைவன் பக்தர்கள் கொடுக்கும் பணத்திற்குத் தகுந்தது போலத் தான் அருள் பாலிப்பான் என்று கூறுகின்ற இந்த ஆசாமிகள் உண்மையாகவே கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள்.

மனிதனுடைய கடவுள் நம்பிக்கை பயமும் சார்ந்தது. தான் செய்கின்ற அநியாயங்களுக்கும் பாவங்களுக்கும் கடவுள் தண்டனை தருவான் என்ற பயம் இருப்பது தான் இந்த உலகத்தில் நடைபெறும் அநியாயங்களை ஓரளவுக்காவது இந்த மட்டத்தில் வைத்திருக்கிறது. அப்படியாக இந்தப் பிறவியில் செய்யும் பாவங்களுக்கான தண்டனை அடுத்த பிறவியில் கிடைக்கும் என்று பயப்படுபவன் அந்தப் பாவங்களைச் செய்யத் துணியான்.

ஆனால், ஏழைகளும் அப்பாவிகளும் கடவுளை நம்பிக் கொடுக்கின்ற பணத்தைத் திருடுபவன் உண்மையிலேயே கடவுள் நம்பிக்கை இல்லாதவன். தன் பாவங்களுக்கு கடவுளிடம் தண்டனை கிடைக்கும் என்று நம்பாதவன். தான் செய்கின்ற கெட்ட காரியங்களை மேலே இருந்து ஒருவன் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்ற பயம் இல்லாதவன்.

இப்படியாகக் கடவுளை நம்பாதவன் தான் அந்தத் திருவிழாவில் பக்திப் பழமாய் வேடம் போட்டு வருவான். உள்ளத்தைப் பார்க்கிறவன் கடவுள் என்று நம்புகிறோம். அந்தக் கடவுளுக்கு இந்த வேடம் எல்லாம் புரியாமல் இருக்குமா? ஆனால் இந்தப் பக்திப் பழங்கள் வேடம் போடுவது கடவுளுக்காக அல்ல, தன்னைப் பார்க்கிற மற்றவர்களுக்காக. உன்னை விட நான் கடவுளோடு நெருக்கமானவன், என்னுடைய தோற்றம் அதற்கு சாட்சி என்பது போல கடவுளின் கர்ப்பக்கிருகத்திற்கான கதவுத் திறப்பு தன்னிடம் இருப்பது போலத் தான் இந்தப் பக்திப் பழங்கள் பாசாங்கு செய்கின்றன.

கடவுளையும் கடவுள் வாழும் அந்தக் கோயிலையும் சொந்தம் கொண்டாடி, அதில் வருகின்ற வருமானத்தை தர்ம காரியங்களுக்குப் பயன்படுத்தாமல், கடவுளைக் காட்டிச் சேர்க்கும் பணத்தை விழுங்கி ஏப்பம் விடுகிற இந்த ஆசாமிகள் அப்பாவிகளான பக்தர்களை விட, கடவுளுக்கு ஒன்றும் நெருக்கமானவர்களும் அல்ல. வேண்டப்பட்டவர்களும் அல்ல.

கடவுளின் கோபத்திற்கு ஆளாகாமல் இருக்க வேண்டும் என்றால், கடவுளுக்கு லஞ்சம் கொடுக்க வேண்டும் என்று பயத்திற்குள்ளாக்கி, அப்பாவி மக்களின் பணத்தைக் கறப்பது தான் இந்தப் பக்திப் பழங்களின் நோக்கம்.

இந்தப் பக்திப் பழங்களுக்கு எல்லாம் திருவிழாவில் தெருவோரத்தில் கடை விரிக்கும் வியாபாரிகள் மீது கோபம் இருக்காது. காரணம், அவர்களின் வியாபாரத்தில் பங்கு கிடைக்கும் என்பதால். போலிப் பொருட்களை விற்றுவிட்டு, திருவிழாவோடு திருவிழாவாக மறைந்து விடுகிற வியாபாரிகள் பற்றியும் அவர்களுக்கு அக்கறை கிடையாது. மக்கள் ஏமாந்தால் அவர்களுக்கு என்ன? தங்களுடைய பங்குப் பணம் பற்றிய கவலை அவர்களுக்கு.

இந்தக் கடவுளின் ஏகபிரதிநிதிகளுக்கு திருவிழாவில் முடிச்சுமாறும் திருடர்கள் பற்றியும் கவலை கிடையாது. இந்த ஏமாளிக் கூட்டத்தின் பணத்தைத் திருடும் இன்னொரு திருடனோடு பகைக்கக் கூடாது என்ற தொழில் தர்மம்.

ஆனால் இவர்களுக்கு ஒரு கூட்டத்தோடு மட்டும் கோபம் வரும். இறைவனின் நாமத்தினாலே அந்தக் கூட்டத்தைப் பகிரங்கமாகவே சபிப்பார்கள்.

அதுதான் அந்த பகுத்தறிவாளர் கூட்டம். காரணம் தங்கள் பிழைப்புக்கு குந்தகமாய் இருப்பவர்கள் என்பதால். பகுத்தறிவாளர்கள் கடவுளை நம்பாதது அவர்களுக்கு ஒன்றும் பிரச்சனை இல்லை. தாங்களே, கடவுளை நம்பாமல் தானே கடவுள் பற்றிய பயம் இன்றி கோயிலில் திருடுகிறார்கள்.

தங்கள் திருட்டு அம்பலமாகிறதே என்பதால் தான், முடிந்தவரைக்கும் அந்தப் பகுத்தறிவு வாதிகள் மேல் வசைமாரி பொழிவார்கள். எங்கள் மதத்தை இழிவுபடுத்துகிறார்கள், நிந்திக்கிறார்கள், அந்நிய மதத்தினர் இவர்களுக்கு எல்லாம் பணம் கொடுக்கிறார்கள் என்றெல்லாம் குற்றம் சாட்டுவார்கள்.

இந்தத் திருவிழா போன்றது தான் எங்கள் போராட்டத் திருவிழாவும்!

இந்தப் போராட்டத் திருவிழாவில், தலைவருக்கும் தங்களுக்கும் நேரடித் தொடர்பு என்று கதை விட்ட ஆசாடபூதிகள் அதிகம். கடவுளின் ஏகபிரதிநிதிகள் தாங்களே என நடிக்கும் திருட்டுக் கூட்டம் போல, போராட்டத்தை தாங்கள் மட்டுமே காப்பாற்றுவதாக நடித்து, பையை நிறைத்த முடிச்சுமாறிகள் இங்கே அதிகம்.

மதத்தின் பெயரால் கொள்ளை யடித்தவர்கள் போல, போராட்டத்தின் பெயரால் பணம் சேர்த்தவர்கள் எங்கள் சமூகத்தில் நிறைய!

போராட்டத்தின் இறுதியில் அங்கே என்ன நடக்கிறது என்று யாருக்கும் தெரியாத நிலையிலும், கப்பல் அனுப்புவோம், ஆயுதம் அனுப்புவோம், உணவு அனுப்புவோம் என்று தலைவரைக் காட்டிச் சுருட்டியவர்கள் இவர்கள்.

கடவுள் தூணிலும் இருப்பார், துரும்பிலும் இருப்பார் என்பது போல, தேசியத் தலைவர் அவர்கள் அங்கே இருக்கிறார், இங்கே இருக்கிறார் என்று பட்டப்பகலில் ஏமாற்றுவித்தை காட்டுபவர்கள் இவர்கள்.

அவர்கள் எல்லாம் இரகசியமாக கரந்துறைந்து போராட்டம் நடத்தியவர்கள் அல்ல. பகிரங்கமாகவே வந்து, கடவுளின் பிரதிநிதிகள் நாங்கள், தரப்படும் பணத்தின் அளவுக்கேற்ப அருளும் கிடைக்கும் என்று கதை சொல்லி மிரட்டிக் கறந்தவர்கள் இவர்கள். இந்தத் திருடர்கள், எல்லோரையும் எங்களுக்குத் தெரியும்.

தங்கள் பிழைப்புக்கு குந்தகமாக இருக்கும் எவரையும் பற்றி, தங்கள் குட்டை அம்பலமாக்கும் எவரைப் பற்றியும் அவதூறு சொல்ல இவர்கள் தயங்குவதில்லை. தமிழ்த் தேசியத்திற்கு எதிராக இருக்கிறார்கள், தமிழினத்தை இழிவுபடுத்துகிறார்கள், அன்னிய சக்திகளிடம் பணம் வாங்கிக் கொண்டு செயற்படுகிறார்கள் என்றெல்லாம் இந்தப் பகற் கொள்ளைக்காரர்கள் குற்றம் சாட்டுவார்கள்.

பகுத்தறிவு வாதிகள் தாங்கள் பணம் சம்பாதிப்பதற்காக கடவுள் இல்லை என்று சொல்வதில்லை. அவர்கள் இந்த அப்பாவி மக்களைத் திருடர்கள் ஏமாற்றுகிறார்கள் என்பதற்காகவே, 'கோயில் கொடியவர்களின் கூடாரம் ஆகி விட்டது' என்கிறார்கள்.

திருவிழாவில் பக்தரைப் போலவே பகல் வேசம் காட்டி, தேசியத் தலைவரின் பெயரால், போராட்டத்தின் பெயரால், இனவிடுதலையின் பெயரால், பாமர மக்களை வலையினில் மாட்டி இன்னமும் பிழைப்பு நடத்த முயலும் இந்தத் திருட்டுக் கூட்டத்தை இனம் காணுவோம்! பணத்தைக் கொடுங்கள், ஈழம் கிடைக்கும் என்று இன்னமும் கொள்ளையிட முயலும் இந்தக் கூட்டத்தை கேள்வி கேட்போம்.

கடவுளைக் காட்டு என்பது போல, தேசியத் தலைவர் எங்கே என்றெல்லாம் கேட்க வேண்டியதில்லை.

கொடுத்த பணம் எங்கே? அந்தப் பணத்திற்கு என்ன நடந்தது என்பதைத் துணிந்து கேட்போம்! இப்போது கேட்கும் பணத்திற்கு என்ன திட்டம் இருக்கிறது என்பதையும் கேட்போம்!

கடவுளின் பேரால், மதத்தின் பேரால் மக்கள் பணத்தைச் சுருட்டுபவர்கள் போல, போராட்டத்தின் பெயரால், தங்கள் இன்னுயிரை ஈந்த மாவீரர்களின் இரத்தத்தின் மேல், பணத்தைச் சுருட்டிய இந்தத் திருட்டுக் கூட்டத்தை, தன் வாழ்நாளையே விடுதலைக்காய் ஈந்த தலைவரின் உயிரைக் காப்பாற்றக் கூடப் பணத்தைக் கொடுக்காமல் சுருட்டிய இந்த பகற்கொள்ளையர்களை அடையாளம் காணுவோம்.

பூபாளம் வார இதழ் Palm Springs Newspapers Ltd நிறுவனத்தினரால் ரொறன்ரோ, கனடாவில் வெளியிடப்படுகிறது.
இந்த இதழில் வெளியாகும் ஆக்கங்களில் உள்ள கருத்துக்களுக்கு ஆக்கியோரே பொறுப்பு. அவை பூபாளத்தின் கருத்தைப் பிரதிபலிப்பனவாய் இருக்க வேண்டிய கட்டாயம் இல்லை. ஆக்கங்களின் கருத்துச் சிதைவுறாமல், மாற்றங்களைச் செய்யும் உரிமை ஆசிரியர் குழுவுக்கு உண்டு.
வெளியாகும் விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களே பொறுப்பு.
Boobalam is published by Palm Springs Newspapers Ltd.
1345, Morningside Ave #8, Scarborough, On, M1B 2T3 Tel: 416 284 4004 e-mail: boobalam@ymail.com Web:www.boobalam.com
Palm Springs Newspapers Ltd is a division of Palmgrove Media Group Inc.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினது தோல்வி என்பதின் விளைவுகள் நீண்டகால விளைவுகளாக இருக்கும்!

எஸ்.எம்.எம்.பஷீர் அவர்கள் லண்டனில் வசித்து வருகிறார். இவர் ஒரு சட்டத்தரணியாவர். இலங்கை அரசியலில் கடுமையான விமர்சனங்களை முன்வைத்து எழுதி வருபவர்.

கடந்த வாரம் ரொறன்ரோவில் நடைபெற்ற 'வாழும் மனிதம்' கருத்தரங்கிற்காக வருகை வந்தபோது, பூபாளம் சார்பில் கற்சுறா இவரைச் சந்தித்திருந்தார். அந்தச் சந்திப்பில் அவர் தெரிவித்த கருத்துக்கள் இங்கே பிரசுரமாகின்றன.



கற்சுறா: தற்போது நிகழ்ந்து முடிந்த கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் கிழக்கில் முதல் ஆட்சியமைத்த தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் ஆட்சியை அமைக்க முடியாமல் போய்விட்டது. கடந்த தேர்தலைப் புறக்கணித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த முறை வெட்கமற்றுப் போட்டியிட்டாலும் அதுவும் ஆட்சியமைக்க முடியவில்லை. ஆளும் கட்சியைச் சேர்ந்த முஸ்லீம் ஒருவரே முதலமைச்சராகியுள்ளார். இந்த நிலையில் தமிழ் மானம் போய்விட்டதாகவே கருதும் தமிழ்தேசியவாதிகள் கிழக்கின் கதை இனி முடிந்தது என்றே கவலை கொள்கிறார்கள். இனிவரும் காலங்களில் கிழக்கின் எதிர்காலம் எப்படியிருக்கும்?

பஷீர்: இந்தத் தேர்தலை விட கடந்த மாகாணசபைத் தேர்தலில் தமிழர் கூட்டமைப்பு பங்குபற்றவில்லை என்பதனால் அந்தப் பாரிய இடைவெளியை நிரப்பவே, அதாவது தமிழர் தரப்புக்குரிய வாக்கு என்ற வகையிலேயே தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளுக்குக் அதிகப்படியான வாக்கு அப்போது கிடைத்தது.

இந்த முறை தமிழர் கூட்டமைப்புப் போட்டியிட்டு அதிகப்படியான வாக்குகளைப் பெற்றதன் மூலம் அது இப்போது நிரூபணமாகி இருக்கிறது. உண்மையில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் தமது அரசியலைப் பன்முகப்படுத்தவில்லை. அவர்களது கட்சியின் பெயர் கூட புலிகள் என்பதின் தொடர்ச்சி எனத் தக்கவைத்துக் கொண்டிருப்பதனால் மக்களிடத்தில் ஒரு மாயையைத் தோற்றுவித்துக் கொள்வது என்பதை தமக்கு சாதகம் என்று அவர்கள் நம்பினார்கள். மக்கள் தம்மைப் புலிகளின் ஒருபகுதியினர் என எண்ணிக் கொள்வார்கள் எனவும் அது தமக்குச் சாதகமாக இருக்கும் எனவும் அவர்கள் நம்பினார்கள். அது ஒரு பிழையான அணுகுமுறை என நான் எண்ணுகிறேன்.

இன்னொரு புறம் வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களின் உள் முரண்பாடுகளின் வடிவமாக தங்களைக் காட்டிக் கொள்ள முற்பட்டார்கள். அது கருணாவுக்கூடாகத் தான் நடைபெற்றது. ஆனாலும் கருணாவுக்கும் சந்திரகாந்தனுக்கும் ஏற்பட்ட உள்முரண்பாடு வடக்குத் தலைமைக்கு எதிராக வடக்குத் தமிழ்த் தேசியத்திற்கு எதிரான போராட்டத்தை நலிவடையச் செய்தது. அதுமட்டுமல்லாமல் அந்த இருவரது உள்முரண்பாடுகள் இன்றுவரை தொடர்கதையாகவே இருக்கின்றன. இந்த உள்முரண்பாடுகளே அந்தக் கட்சியை மிகப்பலவீனப்படுத்தியது.

கருணாவின் தலைமயிலான அந்தக் கட்சி உள்முரண்பாடுகளற்று இருந்து இருக்குமானால் அதன் விளைவு வேறுமாதிரி இருந்திருக்கும். அவர்கள் சேர்ந்தியங்கியிருந்தால் அதன் பாதிப்பு - தாக்கம் என்பது வேறுமாதிரியானதாகவே இருந்திருக்கும். அந்த உள்முரண்பாட்டால் கட்சி நலிவடைந்து போனதையும் அதன் விளைவையும் நாம் இப்போது தேர்தல் வடிவில் பார்க்கிறோம்.

தேசிய அரசியலுக்குள் தமிழ் மக்களைக் கொண்டு போவது என்பது இலகுவான காரியமல்ல. ஏனென்றால் கடந்த 60 வருடகாலப் போராட்டத்திலே ஆட்சியமைத்த ஐக்கிய தேசியக் கட்சியாகட்டும் சிறீலங்கா சதந்திரக் கட்சியாகட்டும் அவற்றை தமிழ்க் கட்சிகள் ஆதரித்தால் மாத்திரமே மக்கள் ஆதரவும் அவர்களுக்குச் சார்பு நிலையும் இருக்கும். மற்றப்படி தனித்துவமாக மக்கள் ஆதரித்த வரலாறு இல்லை. களநிலை இல்லை. அந்த வகையிலே கருணா அவர்கள் தேசியக் கட்சியான சுதந்திரக்கட்சியில் இணைந்ததின் மூலம் தனது அரசியல் அபிலாசைகளை அடைந்திருக்கிறார் என்பதும், அதனூடாக மக்களை தேசிய அரசியலுக்குள் உள்வாங்கிக் கொள்ளலாம் என்ற அவரது எதிர்பார்ப்பு என்பதும் பாரியளவு வெற்றியைத் தந்திருக்கிறதா என்று கேட்பதன் மூலம் தனித்துவமாகவே வடக்கிலிருந்து பிரிந்து கிழக்கு மக்களுக்கான கட்சியாக ஸ்தாபித்து கிழக்கு அரசியலை முன்னெடுத்த சந்திரகாந்தன் வெற்றியளித்திருக்கிறாரா என்பதையும் இந்தத் தேர்தலுக்கூடாக நாம் பார்க்கவேண்டும்.

சந்திரகாந்தனுடைய தலைமைத்துவத்திற்கு அப்பால் கட்சியினுடைய மொத்தச் செயற்பாடும் அதாவது கிழக்குத் தழுவிய அரசியற் செயற்பாட்டில் அவர்களது அரசியல் ஆழுமை என்பதில் பலவீனமாகவே இருந்திருக்கிறார்கள்.

அந்தவகையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் வழக்கம் போலவே சமூகத்தின் பிரபலங்களை சமூக சேவகர்களை முன்னாள் ஆசிரியர்களை கல்விமான்கள் போன்றோரைக் கொண்டே தமது அரசியலை முன்னெடுத்து வருகிறார்கள். அதனூடாகவே அவர்கள் பலவெற்றிகளைப் பெறக்கூடியதாக இருந்திருக்கிறது.

அந்த சமூக ஆழுமை மிக்க பிரதிநிதிகளைப் பெறுவதிலே தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் தவறி விட்டார்கள். அவர்களைப் பொறுத்தளவிலே சந்திரகாந்தன் என்ற

**தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முஸ்லீம் முதலமைச்சரைத் தாமே முன்வந்து வழங்குவதாகச் சொன்னார்கள். அவ்வாறு வழங்குவதூடாக அரச எதிர்ப்பு, சிங்களப் பேரினவாதம், சுயாட்சி, தன்னாட்சி, அல்லது வடக்குக்கிழக்கு இணைப்பு என்ற தங்களது பலவேறுபட்ட நிகழ்ச்சி நிரலை, தங்களது அரசியல் செயற்திட்டங்களை தங்களுக்கூடாகவே செயற்படுத்தவதற்கு ஒரு முஸ்லீம் முதலமைச்சரை தாம் நிமிக்கத் தயாராய் இருப்பதாகச் சொன்னார்கள். அந்தக் கனவில் பாரிய இடி விழுந்திருக்கிறது.**

தனிமனிதனைச் சார்ந்ததாகவே அவர்கள் பலம் இருந்திருக்கிறது என்பனை இந்தத் தேர்தல் புலப்படுத்தியிருக்கிறது. மற்றைய அங்கத்தவர்களைப் பொறுத்தளவில் மற்றய மாவட்டங்களில் போட்டியிட்ட வேட்பாளர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் போட்டி போடக்கூடிய தகுதிகளைப் பெற்றிருக்கவில்லை என்பதையும் இந்தத் தேர்தல் பலப்படுத்தியிருக்கிறது.

ஆகவே திட்டமிட்டவகையில் கட்சியின் கட்டமைப்புக்கள் பலப்படுத்தப் பாடாமையும் தேர்தலுக்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படாமையும் அந்த அரசியல் அனுபவங்களிலேயே அவர்கள் கற்றுக்குட்டிகளாக காணப்பட்டமையும் இந்தத் தோதலின் தோல்விக்கான காரணமாகப் பார்க்கப்படவேண்டும்.

## கூட்டமைப்பு இந்தியா விஜயம்...

ஜாதிக ஹெல உறுமயவின் மத்திய குழு உறுப்பினரும் தேசிய அமைப்பாளருமான நிசாந்த ஸ்ரீ வர்த்தனசிங்க, "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு டில்லிக்கு காவடி எடுப்பதால் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிட்டப்போவதில்லை. கூட்டமைப்பினர் இந்தியாவின் பிரதிநிதிகளாக மாறியுள்ளனர்." எனத் தெரிவித்துள்ளார்.

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர, "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இந்தியாவுக்கு வருமாறு மத்திய அரசாங்கம் அழைப்பு விடுத்திருப்பது எமது நாட்டின் இறைமைக்கு விடுக்கப்பட்ட சவாலாகும். எனவே அரசாங்கம் கூட்டமைப்பைத் தடை செய்ய வேண்டும்" என்ற கோரிக்கையை விடுத்திருக்கிறார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்திய விஜயம் குறித்துக் கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் தினேஷ் குணவர்த்தனா, "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழர் விடுதலை முன்னணி என்பன இந்தியாவுக்குச் சென்று பேச்சு வார்த்தைகளில் ஈடுபடுவது புதியவிடயமல்ல. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியாவிற்கு சென்று அந்நாட்டின் தலைவர்களுடன் என்னதான் பேச்சு வார்த்தை நடாத்தினாலும் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் எமது நாட்டின் பாராளுமன்றத்திடமே வரவேண்டும். யதார்த்த பூர்வமான தீர்வைக் காணவேண்டுமானால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவுக் குழுவில் பங்கேற்க வேண்டியது அவசியமாகும்" என தெரிவித்திருக்கிறார்.

பாராளுமன்றத் தெரிவுக் குழு குறித்துக் கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் ராஜித சேனாரட்ண, பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் ஊடாக தேசிய பிரச்சினைக்கான தீர்வுத் திட்ட அறிக்கை ஆறு மாதங்களில் வெளியிடப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ள நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதில் இடம் பெறத் தயக்கம் காட்டுவது ஏன் என்று புரியவில்லை எனக் கருத்தத் தெரிவித்திருக்கிறார்.

இவ்விடயம் குறித்துக் கருத்து வெளியிட்டுள்ள ஐ.தே.கட்சியின் கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல, யுத்தம் இடம் பெற்ற போது அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமய மற்றும் தேசிய சுதந்திர முன்னணியுடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ யுத்தம் வெற்றி பெற்ற பின்னர் 13வது திருத்தம் இரத்துச் செய்யப்படுமென்றும் அதிகாரப் பரவலாக்கல் மேற்கொள்ளப்பட மாட்டாதெனவும் உடன்படிக்கை செய்து கொண்டுள்ளார். இது மீறப்பட்டால் ஆட்சி கவிழும் எனத் தெரிவித்திருப்பதுடன், அரசாங்கத்திற்குப் பெரும்பான்மைப் பலம் உள்ளது. எனவே தீர்வை வழங்குவதற்கு தெரிவுக் குழு அவசியமில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தனிப்பட்ட வகையிலே மட்டக்களப்பு மாவட்டத்தில் சந்திரகாந்தன் 22000 வாக்குகளைப்பெற்று வெற்றி பெற்றிருக்க முடியும் என்றால். அவருடைய ஆளுமை இங்கு புலப்படுகிறது. ஒரு தனிமனிதனாக 60ஆண்டுகால தேசிய அரசியலுக்குச் சவால் விட்டு கிழக்கிலே தனிமனிதனாக ஈட்டிய வெற்றியை நாம் சும்மா மதிப்பிட முடியாது.

வடகிழக்கு என்றும் தமிழ்த் தேசியம் என்றும் சொல்லி வந்த தமிழத்தேசியக் கூட்டமைப்பு முதலாவது கிழக்கு மாகாணத் தேர்தலைப் புறக்கணித்து விட்டு இன்று 5 ஆண்டுகால இடைவெளிக்குப்பின் கிழக்கு மாகாணத்திற்கு அங்கீகாரம் வழங்குமாப்போல் தேர்தலில் போட்டியிட்டாலும் அவர்களின் நீண்டகால அரசியற் கோட்பாட்டை முன்நிறுத்தி, தமது அரசியல் பலம், ஆளுமை பலம், அரசியல் கருத்துப்பலம் என்பவற்றை முன்நிறுத்தித் தேர்தலில் நின்றாலும் அதற்கெதிராக மட்டக்களப்பு மாவட்டத்தில் 22000 பேர் வாக்களித்திருக்கிறார்கள் என்பது மிக முக்கியமான விடயம்.

அதுவும் அவர்களைப் பொறுத்தளவில் சிங்களப் பேரினவாத அரசுடன் நின்று கொண்டு ஒரு துரோகியாக ஒரு காட்டிக் கொடுப்பாளனாக தமிழ்த் தேசிய விரோதியாகக் காட்டப்பட்ட ஒருவருக்கு 22000 வாக்குகளை அதுவும் அதிகப்படியான வாக்குகளை மக்கள் அளித்திருக்கிறார்கள் என்பதும் தமிழத் தேசியத்துக்கெதிராக தமது கிழக்கின் மகனாக மக்கள் அங்கீகரித்து அவரை வெற்றியடைய வைத்திருக்கிறார்கள் என்பதும் அந்தளவில் சந்திரகாந்தன் தனிமனிதனாகவும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் தலைவனாகவும் இருந்து கிழக்கில் மகிப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறார் என்பது மறக்க முடியாத உண்மையாகும்.

ஆனால் இந்தத் தனிமனித வெற்றி தமிழ்மக்கள் விடுதலைப்புலிகளின் தலைமையின் வெற்றி என்பது எப்படி எதிர்காலத்தில் கிழக்கு மாகாணத்தில் மூலதனமாக்கப்படப் போகின்றது என்பது நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும். தொடர்ந்தும் கட்டுக் கோப்பற்ற அரசியல் கட்டுமானமற்ற கட்சியாக தமது கட்சியைத் தொடர்ந்து பேணுவார்களாக இருந்தால் மீளவும் தனிமனித வெற்றிகளாகவே இருக்குமே ஒழிய கிழக்கு மக்களின் கட்சியாக முதல் பதிவு செய்யப்பட்ட கிழக்கு மாகாணக் கட்சியாக இருக்குமா என்பது கேள்விக்குறியே.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தளவில் இம்முறை போட்டியில் ஈடுபடுத்தப்பட்டவர்கள் சமூக முக்கியஸ்தர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், கடந்த காலத்தில் தமிழத் தேசியவாதத்தினையே ஊட்டி வளர்ந்தவர்கள். என்னைப் பொறுத்தளவில் அவர்கள் பாரிய வெற்றியை ஈட்டவில்லை என்றே சொல்வேன். அரசு சார்பாகக் கேட்ட கணிசமான வேட்பாளர்கள் தோல்வியுற்றாலும் பாரியளவு வாக்குகளைப் பெற்றிருக்கிறார்கள்.

அந்தவகையில் தமிழத்தேசியக் கூட்டமைப்பின் மாயையை, அதாவது "கூட்டமைப்பினர் பெருமளவு வெற்றியீட்டியிருக்கிறார்கள், தமிழ்மக்கள் முழுப்பேரும் அவர்களுக்கு வாக்களித்திருக்கிறார்கள், கிழக்கு மக்களில் தாம் செல்வாக்குச் செலுத்துகிறார்கள்" என்ற பொய் விம்பத்தை அது தகர்த்திருக்கிறது.

*இந்தச் சந்திப்பின் முழுவடிவத்தையும் பூபாளம் இணையத்தளத்தில் பார்வையிடலாம்*

# கிழக்கு மாகாண சபை அமைப்பதில் தமிழ் மக்களின் நன்மதிப்பை இலங்கை அரசு இழந்து விட்டது?

*சிவா ஈஸ்வரமூர்த்தி*

அண்மையில் நடைபெற்று முடிந்த மாகாண சபைத் தேர்தலில் கிழக்கு மாகாண சபைத் தேர்தல் முடிவுகளை சர்வதேசம், உற்று நோக்கியது. குறிப்பாக தமிழ் மக்களின் உரிமைகள் என்ற விடயத்தின் அடிப்படையில் தமிழ் மக்களும், சர்வதேச நாடுகளும் அமையும் மாகாண அரசை அவதானித்து வந்தன. இலங்கை அரசு விரும்பியது போல் தமிழ் தேசியக் கூட்டமைப்பால் பெரும்பான்மை பெற்று ஆட்சி அமைக்க முடியவில்லை. அதே வேளை இலங்கை அரசு தனது கூட்டணிக் கட்சிகளுடன் முஸ்லீம் காங்கிரஸை இழுத்துப் போட்டுக் கொண்டு ஆட்சியை அமைத்திருக்கின்றது. இதன் மூலம் கிழக்கு மாகாணத்திலும், மூவினமக்கள் மத்தியிலும் தமக்கே ஆதரவு அதிகம் இருக்கின்றது என்று இலங்கை அரசால் நிறுவ முடித்திருக்கின்றது.

ஒரு ஜனநாயக நாட்டில் நடைபெற்ற தேர்தலில் தேர்தல் முடிவுகளை ஏற்று மரியாதை கொடுத்து செயற்பட வேண்டியது அந்நாட்டு பிரஜைகளின் கடமை. இந்த வகையில் கிழக்கு மாகாண சபைத் தேர்தல் முடிவுகளை நாம் எல்லோரும் அங்கீகரித்து செயற்படவேண்டியது அவசியம் ஆகின்றது. எமது விருப்புகளுக்கு மாறாக தேர்தல் முடிவுகள் இருந்தாலும் வேறு வழியின்றி அடுத்த தேர்தல் வரைக்கும் இதனை ஏற்றுத்தான் ஆக வேண்டும்.

இலங்கை தற்போது பல்லினமும் இணைந்து வாழும் நாடு என்று இலங்கையின் ஜனாதிபதி பிரகடனப்படுத்தியுள்ளார். இதுவும் நல்ல விடயமே. இலங்கையில் போருக்கு பின்னரான நிலமைகள் ஒரு பல்லின நாட்டிற்குரிய முடிவுகளையே எமக்குள் திணிக்கப்பட்டிருக்கின்றது. பாரம்பரிய பிரதேசம் என்ற விடயங்கள் மெல்ல மெல்ல அருகிவரும் விரும்பத்தகாத நிகழ்வுகள் 1986 களில் அடிக்கல் நாட்டப்பட்டு விட்டது என்பது அரசியல் வல்லுனர்களின் ஆய்வுகளின் முடிவு.

விரும்பியோ விரும்பாமலோ நாம் இலங்கை ஒரு பல்லின மக்களின் நாடு என்பதை ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும். இதற்குள் ஒவ்வொரு இனமும் யார் பலமான இனம் என்பதை நிறுவ ஐக்கியத்துடன் ஆரோக்கியமான போட்டியுடன் செயற்படவேண்டும். மாறாக குத்து வெட்டுக்குள் புகுதல் கூடாது. மேலாதிக்கம் செலுத்தக் கூடாது. சமத்துவமாக வாழும் பொறி முறைகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

ஆனால் அண்மையில் நடைபெற்று முடிந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தலின் பின்பு அமைந்துள்ள கிழக்கு மாகாண சபை அமைச்சரவையில் நான்கு முஸ்லீம் அமைச்சர்களும், ஒரு சிங்கள அமைச்சருமாக மொத்தம் 5 அமைச்சர்கள் பொறுப்பேற்றுள்ளனர். மாகாண சபை சட்ட மூலத்திற்கு அமைய முதல் அமைச்சர் உட்பட 5 அமைச்சர்கள் மட்டும் கொண்ட அமைச்சர் அவையே மாகாணசபையில் அமைக்கப்படலாம்.

கிழக்கு மாகாணத்தில் தமிழர், முஸ்லீம்கள், சிங்களவர் என மூவின மக்களும் முறையே 35 வீதம், 35 வீதம், 29 வீதம் என்ற சனத்தொகைப் பரம்பலைக் கொண்டுள்ளர். சனத்தொகைப் பரம்பலின் விகிதாசார அடிப்படையில் பார்த்தால் மாகாண சபையில் இரண்டு தமிழர்கள், இரண்டு முஸ்லீம்கள், ஒரு சிங்களவர் என்ற வகையில் அமைச்சரவை அமைந்திருத்தல் வேண்டும். இது இனங்களுக்கிடையிலான சமத்துவத்தையும், சந்தேகங்களை நீக்கவும் ஏதுவாக இருந்திருக்கும். இதனை இலங்கையை ஆளும் பொது ஜன ஐக்கிய முன்னணி செய்திருக்க வேண்டும்.

மாறாக ஒரு தமிழரும் அல்லாத 4 முஸ்லீம் அமைச்சர்கள், ஒரு சிங்கள் அமைச்சர் என்ற வகையில் அமைச்சரவையை அமைத்தது மேலும் தமிழர்களை இலங்கை அரசிடம் இருந்து அந்நியப்படும் நிகழ்வாக அமைந்து விட்டது.

இதனை ஏன் இலங்கையின் ஜனாதிபதி கருத்தில் கொள்ளவில்லை என்பது கேள்விக்குறியே. இலங்கை அரசுடன் நல்ல உறவில் உள்ள கருணா, பிள்ளையான். ஆறுமுகம் தொண்டமான் போன்றவர்கள் இவ்விடயத்தில் அதிக சிரத்தையுடன் விடாப்பிடியாக செயற்பட்டு கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தை அமைச்சரவையில் உறுதிப்படுத்தியிருக்க வேண்டும். இதன் மூலமே இலங்கை அரசு தமிழ் மக்கள் விடயத்தில் சரியான செயற்பாட்டையே செய்ய முயலும் என்பதை நிறுவி இருக்க முடியும்.

கிழக்கு மாகாணத்தில் பொது ஜன ஐக்கிய முன்னணி சார்பில் ஓரே ஒரு தமிழர் மட்டும் வெற்றி பெற்றிருக்கும் நிலையில் எவ்வாறு இரண்டு அமைச்சர்கள் சாத்தியம் என்று வாதத்தை முன்வைக்கலாம். சரி ஒரு அமைச்சர் பதவியை வழங்கி, அதனை ஏற்று செயற்படுமாறு வேண்டுதல் விடுத்திருக்க வேண்டும். பிள்ளையானும் இதனை ஏற்று நடந்திருக்க வேண்டும். கடந்த அமைச்சரவையில் முதல் அமைச்சராக இருந்த நான் எப்படி சாதாரண அமைச்சராக இருக்கலாம் என்று கிழக்கு தமிழ் மக்களுக்கான சேவையை கருத்தில் கொண்டு பிள்ளையான் மறுப்பு தெரிவிக்கக் கூடாது. மேலும் இன்னொரு அமைச்சருக்கான இடத்தை போனஸ் ஆசனத்திற்கு ஒரு தமிழரை பொது ஜன ஐக்கிய முன்னணி நியமிப்பதன் மூலம் நிரப்பியிருக்க முடியும்.

இவ்வாறு செய்யாது விட்டது மீண்டும் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு இலங்கை அரசு தமிழ் மக்களுக்காக செயற்படும் அரசு இல்லை என்பதை நிறுவுவதற்கு வாய்ப்கை அளித்தாக அமைந்து விட்டது. புலிகளை அழித்தொழிப்பதிலும், யுத்த நிறுத்த மீறல்கள் என்ற குற்றச்சாட்டிலிருந்து தன்னை மீட்டுக் கொள்வதிலும் இலங்கை அரசு காட்டிய "திறமை" கிழக்கு மாகாண அமைச்சரவை விடயத்தில் நழுவ விட்டுவிட்டது என்பதே அரசியல் நோக்கர்களின் பார்வையாகும்.

முதலாவது கிழக்கு மாகாண சபையில் தேர்தல் வெற்றி நியாயப்படி முஸ்லீம்களுக்கு முதல் அமைச்சர் பதவி வழங்க வேண்டிய நிலையிலும் தமிழர் ஒருவருக்கு முதல் அமைச்சர் பதவியை வழங்கி தமிழ் மக்களின் "நன்மதிப்பை" பெற முயற்சித்த மகிந்த அரசு இம்முறை ஏன் இதனைக் கோட்டை விட்டு நிற்கின்றது? மேலும் கடந்த முறை தமிழர் ஒருவர் முதல் அமைச்சராகவும், மேலும் ஒரு தமிழரை அமைச்சராகவும், இரண்டு முஸ்லீம் அமைச்சர்கள், ஒரு சிங்கள அமைச்சர் என்று சரியான கணக்கைப் போட்ட மகிந்த அரசு தற்போது கேள்விக் குறிக்கு உள்ளாகியிருக்கின்றது.

1987 ம் ஆண்டு ஏற்பட்ட இலங்கை. இந்திய அரசுகளின் அனுசரணையுடன் அமைந்த முதலாவது இணைந்த வடக்கு கிழக்கு மாகாண சபையில் 3 தமிழர்கள். ஒரு சிங்களவர், ஒரு முஸ்லீம் என மக்கள் விகிதாசாரக் கணக்கு அடிப்படையில் மாகாண அமைச்சரவையை அமைத்து மூவின மக்களின் நன்மதிப்பை பெற்ற தீர்க்கதரிச செயற்பாட்டை இனிவரும் காலங்களிலும் இலங்கை அரசு தொடர முயல வேண்டும். இதற்கான செயற்திட்டங்களை இலங்கை அரசுடன் நல்ல உறவில் இருக்கும் தமிழ் அரசியல்வாதிகள் உறுதி செய்தல் வேண்டும். இதன் மூலமே இலங்கை அரசு மட்டும் அல்ல இலங்கை அரசுடன் இணக்கப்பாட்டு அரசியல் நடத்தும் தமிழ் அரசியல் பிரமுகர்களும் தமிழ் மக்கள் மத்தியில் மேலும் நன்மதிப்பை பெற முடியும். தமிழ் மக்களுக்கு மேலும் சிறந்த சேவையாற்ற முடியும். இலங்கை அரசும் அதன் கூட்டாளி தமிழ் அரசியல் வாதிகளும் இதனைக் கருத்தில் கொள்வார்களா...?

இதே போலவே சப்ரகமுவ மாகாணத்தின் அமைச்சரபையிலும் தமிழ் மக்களின் சார்பில் ஒரு அமைச்சர் நியமிக்கப்பட ஆறுமுகம் தொண்டமான போன்ற இலங்கை அரசுடன் நெருக்கமான உறவில் உள்ளவர்கள் ஆவன செய்திருக்க வேண்டும். இப்படியான செயற்பாடே இலங்கை பல்லின மக்களும் இணைந்து சம உரிமையுடன் வாழுவதை இலங்கை அரசு வெறும் வார்த்தைகளில் இல்லாமல் உண்மையாக செயற்பாட்டுக்குரியதாக்க விரும்புகின்றது என்பதை நிறுவ முடியும்.

மூவின மக்களும் சமத்துவத்துடனும், சகோதரத்துவத்துடனும், சமபலத்துடனும் வாழ்வை உறுதிப்படுத்துவதற்கான நல் சமிக்கைகளை இலங்கை அரசு காட்ட வேண்டும். அன்றேல் மீண்டும் இளைஞர்கள் கிராமங்களை நோக்கி வகுப்பு எடுக்கப் போவதை தவிர்ப்பது இயலாமல் போய்விடும்.

*உங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ள...*

**பூபாளத்தின் முற்றவெளி**

முகப்புத்தகத்தின் உள்நுழை அடையாளத்துடன் boobalam.com இல் நீங்கள் நுழைந்து உங்கள் கருத்துக்களை சுதந்திரமாய் தெரிவிக்கலாம். முகப்புத்தக அடையாளம் இல்லாதோர் உங்கள் விபரங்களை boobalam@ymail.com என்ற மின்னோலை விலாசத்திற்கு ஓலை அனுப்புங்கள்.

**உங்கள் சமூக நிகழ்வுகளை பூபாளம் இணையத் தளத்தில் இலவசமாய் விளம்பரப்படுத்துங்கள்!**

*பழைய மாணவர்களின் ஒன்று கூடல்களா? ஊர்ச் சங்கங்களின் ஆண்டு விழாவா?சமுக அமைப்புகளின் கலந்துரையாடலா?*

அந்த நிகழ்வுகள் பற்றிய விபரங்களை boobalam@ymail.com என்ற விலாசத்தில் எங்களுக்கு அனுப்பி வையுங்கள். அவற்றை நாங்கள் பூபாளம் இணையத் தளத்தில் இலவசமாகப் பிரசுரிப்போம்.

# கவனம்! கவனம்!! கவனம்!!!

## சூதாட்டத்தின் அரசன் (அரக்கன்) ஊருக்குள் வருகிறான்!

சுல்பிகா




சூதாட்டத்தின் அரசானாக இன்று தென் அமெரிக்கா முழுவதிலும் வெற்றி வாகை சூடியிருக்கும் ஸ்லொட் இயந் திரத்தை (slot machine) றொறண்டோ விலுள்ள எல்லாச்சந்தைத் தொகுதிகளிலும் நிறுவுவதற்கு ஒன்ராறியோ மாகாண சபை முடிவு செய்திருக்கின்றது. சூதாட்டத்திலிருந்து அரசுக்குக் கிடைக்கும் வருமானத்தில் 35-40 சத வீதமானது இவ்வியந்திர விளையாட்டிலிருந்தே கிடைக்கின்றது. அதாவது இச்சூதாட்டத்திலேயே எல்லா வயதினரும் ஏறக்குறைய 2 பில்லியனுக்கு மேற்பட்ட பணத்தை வருடாந்தம் இழந்திருக்கின்றனர். சிறுவர்கள் முதல் முதியோர்கள் வரை யாவரும் இதில் விழக்கூடிய ஆபத்திலுள்ளனர்.

இதனை "மக்களுக்கு மகிழ்ச்சியை வழங்குவதன் மூலம் பெறுகின்ற வருவாய்" என்றும், அதன் மூலம் அரசின் வரவு செலவுத்திட்டத்தின் நிதிக்குறைவுகளை பூரணப்படுத்த முடியும் என்றும், தொழில்வாய்ப்புக்களை வழங்கவும், அபிவிருத்தியை மேற் கொள்ளவும் முடியும் என்றும் அரசு நியாயப்படுத்துகிறது. அத்துடன் மக்கள் தங்கள் வருமானத்தின் ஒரு சிறு பகுதியையே இதில் செலவிடுகின்றனர் என்றும், இது அவர்களை உற்சாகப்படுத்துகின்ற உடல் ஆரோக்கியத்திற்கு அவசியமான மீள் உருவாக்க செயற்பாடாகும் என்றும், அது அவர்களுக்கு வெற்றி யையும் கொடுக்கக்கூடியது என்றும் வாதிடப்படுகின்றது. மேலும் இது தகவல்களை அறிந்த பின் மக்கள் மேற்கொள்ளுகின்ற (informed choice) தெரிவு என்று அரசும் அந்த வியாபாரத்தில் ஈடுபடுகின்ற தனியார் தாபனங்களும் வாதிடுகினறனர்.

எனினும், ஆய்வுகளின் படி, விளையாடுபவர்கள் தாங்கள் எதிர் பார்ப்பதிலும் பார்க்க பலமடங்கு இழக்கின்றனர். இயந்திர சூதாட்ட வருமானத்தில் மிகப் பெரும்பகுதி, பணக்காரர்களிடமிருந்து கிடைப்ப தில்லை, வருமானம் குறைந்த நபர்களின் இழப்பினாலேயே கிடைக்கின்றது. இவர்கள் மகிழ்ச்சி க்காகவோ, உடல்ஆரோக்கிய மீள் உருவாக்கத்திற்காகவோ விளையாடு வதில்லை. "பணம் உழைப்பதற்காகவோ அல்லது விளையாடுவதற்காக விளையாடுதலாகவே" விளையாடு கினறனர். மேலும் மாதாந்த வருமானத்தில் பெருமளவை அல்லது அதற்கும் மேலதிகமாக இவர்கள் விளையாடுகின்றனர். நிதிப்பிரச்சினை, குடும்பப்பிரச்சினை, சமூகப்பிரச்சினைகள் பலவற்றிற்கும் இவர்கள் ஆளாகி இருப்பதுடன் உடல்உள ரீதியாக நோயாளிகளாகவுமுள்ளனர்.

எனவே இவ்வியந்திர சூதாட்ட விளையாட்டுப் பற்றிய விடயங்களை மக்கள் சரியாக அறிந்து கொள்வது அவசியமாகும்.






ஸ்லொட் இயந்திர சூதாட்டம் என்பது கணணி மயப்படுத்தப்பட்ட முற்றுமுழுதாக நிகழ்தகவை அல்லது வாய்ப்பை (probablity அல்லது chance) அடிப்படையாகக் கொண்ட விளையாட்டாகும். ஆரம்பகால ஸ்லொட் இயந்திரங்கள் கையால் இயக்குகின்ற ஒன்றாக இருந்ததால் இயங்குவதற்கும் விளையாடுவதற்கும் நேரம் எடுக்கும். இதனால் பந்தயத் திற்குரிய வாய்ப்புக்களின் எண்ணிக்கை குறைவானது. எனவே தோல்வி ஏற்பட்டால் இழக்கும் பணத்தின் அளவும் குறைவாகவே இருக்கும். ஆனால் தற்போதுள்ள உள்ள இயந்திரங்கள் மின்சாரத்தினால் இயக்கப்படுவன. உதாரணமாக ஒரு சத ஸ்லொட் விளையாட்டு இயந்திரம் ஒரு நிமிடத்திற்கு 1200 பந்தய வாய்ப்புக்களை வழங்குகின்றது. அதாவது ஒரு பந்தய வாய்ப்புக்கு 3 செக்கன்கள் மாத்திரமே எடுக்கும். அவையும் தன்னிச்சையாகவே வந்து கொண்டே இருக்கும். நினைக்க முன்பே ஒரு நிமிடத்துள் 1200 வாய்ப்புக்கள் சென்று முடிந்துவிடும். இங்கு இழப்பு வாய்ப்புக்களும் இழப்பின் வேகமும் அதிகரிக்கப்பட்டிருக்கின்றது. இதுவே நினைப்பதிலும் பார்க்க பல மடங்கு இழப்பதற்குக் காரணமாகும்.

இயந்திர விளையாட்டு போதை வஸ்துக்கள் போன்று சூதாட்ட போதையை உண்டாக்குமா? என்று வினவப்படுகின்றது. ஸ்லோட் இயந்திர சூதாட்டம் மிக ஆபத்தான சூதாட்டப் போதையை உருவாக்கக்கூடிய தன்மையுடையது என விஞ்ஞானரீதியான ஆய்வுகள் மூலம் நிருபிக்கப்பட்டுள்ளன.

கனடாவின் வாட்டலூ பல்கலைக் கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்று ஸ்லொட் இயந்திர சூதாட்டத்தின்போது எவ்வாறான உடற்றொழில், நரம்பியல் செயற்பாடுகள் தூண்டப்படுகின்றன என்பது பற்றி விரிவாக விளக்குகின்றது. பந்தய வாய்ப்புக்கள் ஒவ்வொன்றும் போதை வஸ்துக்கள் போன்று தொழிற்படுவதாகவும் வெற்றிகளின் பொது எழுப்பப்படுகின்ற ஆரவாரங் கள், கைதட்டு ஒலிகள், வெற்றி மகிழ்ச்சியைப் பெரிது படுத்திக்காட்டும் வீடியோக் காட்சிகள் போன்றன உணர்ச்சி அருட்டல்களையும் கிளர்ச்சியையும் ஏற்படுத்துகின்றன, போதையூட்டுகின்றன. அதாவது வெற்றி பற்றிய கற்பனைகளையும், ஆவாக்களையும் ஆர்வத்தையும் ஏற்படுத்தி நிலைப்படுத்துகின்றன.

சூதாட்ட ஆய்வாளர் பேராசிரியர் நட்டாசா, ஸ்லொட் இயந்திரப் போதை உருவாக்கவதற்குரிய காரணங்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகின்றார். 1) மிகப்பாரிய அருட்டல்களை (excitement) வழங்கும் தன்மை

2) குறுகிய நேர இடைவெளியில் அதிக அருட்டல்களை ஏற்படுத்தும் தன்மை

3)தடங்கல்கள், தாமதம் இன்றி தொடர்ச்சியாக அருட்டல்களை ஏற்படுத்தும் தன்மை

தற்கால இயந்திரங்கள், விளையாடு வோரை அருட்டல்களை ஏற்படுத்தி ஊக்குப்படுத்துவதற்குரிய பல்வேறு உத்திகளைக் கொண்டிருக்கின்றன. இவ்வுத்திகள் போதை வஸ்து IV சொட்டுக்களுக்கு ஒப்பானது என 3300 நோய் நிலைமைக்குரிய சூதாட்டப் போதைக்குள்ளானவர்களுக்கு பரிகாரமளிக்கும் அமெரிக்க வைத்தியர்களான MIT பேராசிரியர் களான கலாநிதி றொபர்ட் கிரீன், கலாநிதி ஹென்றி றுசேரோ குறிப்பிடுகின்றனர். வேகமான இயங்கும் பந்தய வாய்ப்புக்களும் (நிமிடத்திற்கு 1200 சொட்டுக்கள்) வெற்றி குறித்த ஆரவாரங்களும் இரத்தக்குழாயினூடாக செலுத்தப்படும் போதை வஸ்துச் சொட்டுக்கள் போன்று இயங்கி போதையை அதிகரிக்கும் தன்மை வாய்ந்தன என விளக்குகின்றனர்.

சிறிய வெற்றி வாய்ப்புக்கள் கூட, அது பெரிய இழப்பின் பின்னரும் ஏற்பட்ட போதும், அது பெரிய விடயமாகவே சூதாடுபவர்களால் உணரப்படும். இந்த வெற்றிக்களிப்பு தொடர்ச்சியாக விளையாடுவதற்கான ஊக்கத்தையும் வழங்குகின்றது. போதை ஏறிய பின்னர் மனிதர்களின் ஆத்மாவையும் மனிதாபிமானத்தையும் சொத்துக்களையும் அது கொள்ளை யிடுகிறது.

# சியற்றில் செவ்விந்திய குலத்தலைவரின் எண்ணங்கள்

*தமிழில் பொ.சிவஞானம், இலங்கை*



*1854ம் ஆண்டில், பூர்வீக அமெரிக்கக் குடிமக்களுக்கு (செவ் விந்தியர்களுக்கு) உரித்தான நிலத்தின் பெரும் பகுதியை அவர்களுக்கே மீண்டும் வழங் குவதற்கு வொசிங் டனில் இருந்த வெள்ளையினத் தலைமை அதிகாரி முன்வந்ததுடன், அவர்களுக்கான ஒரு "விசேட ஒதுக்கீட்டுத் திட்டத்திற்கும்' வாக்குறுதியளித்திருந்தார். இது தொடர்பிலான அவரின் அழைப்பிற்கு, சியற்றில் செவ்விந்திய குலத்தலைவர் வழங்கிய பதிலின் ஒரு பகுதி இங்கே பிரசுரிக்கப்படுகின்றது. கருத்தை ஈர்ப்பதும், ஆழ்ந்த சிந்தனையைத் தூ ண்டுவதுமான வாசகங்களில் ஒன்றாக இது வர்ணிக்கப்பட்டு வந்துள்ளது.*

"நாம் இப்பூவுலகின் ஓர் அங்கம். அது எம்மில் ஓர் அங்கம். மணங்கமழும் இம்மலர்கள் எமது சகோதரிகள். மான், குதிரை, பெருங்கழுகு இவை எமது சகோதரர்கள். மலைச்சிகரங்கள், பசும்புல் வெளிகளில் உள்ள உயிர்க்கூறுகள், மட்டக்குதிரையின் உடற்சூடு, மனிதனின் உடற்சூடு ..., அனைத்துமே ஒரே குடும்பத்திற்கு உரித்தானவை.

நதிகள் எமது சகோதரர்கள். அவை எமது தாகத்தைத் தணிக்கின்றன. இந்த நதிகள் எமது படகுகளை எடுத்துச் செல்கின்றன. எமது சிறார்களுக்கு உணவூட்டுகின்றன. நாம் எமது நிலத்தை உங்களுக்கு விற்றால், இந்த நதிகள் எங்களதும் உங்களதும் சகோதரர்கள் என்பதை நினைவிற் கொள்வதுடன், அதைப் பற்றி உங்களுடைய சிறுவர்களுக்குப் போதிக்கவும் வேண்டும், உங்களுடைய சகோதரருக்கு நீங்கள் காட்டும் கனிவை இப்போதிலிருந்தே அந்நதிகளுக்கும் காட்ட வேண்டும்.'

எமக்கு இந்த நிலம் புனிதமானது. அருவிகளிலும் நதிகளிலும் ஓடுகின்ற பளபளப்பான நீர், வெறும் நீரல்ல. அது எமது மூதாதையரின் இரத்தமாகும். நாம் எமது நிலத்தை உங்களுக்கு விற்றால், அது புனிதமானது என்பதை நீங்கள் நினைவிற்கொள்ள வேண்டும். அத்தோடு, அது புனிதமானது என்பதையும், ஏரிகளின் தெளிந்த நீரில் தெரிகின்ற நிழலுருவம், எனது மக்களின் வாழ்க்கை நிகழ்வுகளையும் நினைவுகளையும் கூறுகின்றது என்பதையும் உங்களுடைய சிறுவர்களுக்குப் போதிக்கவும் வேண்டும். இந்த நீரின் சலசலப்பு, எனது பாட்டனின் குரலாகும்.'

உங்களுடைய சிறுவர்களின் பாதங்களை தாங்கும் தரை, எமது பாட்டன்மாரின் சாம்பல்கள் என்பதை அவர்களுக்கு நீங்கள் போதிக்க வேண்டும். உங்களது சிறுவர்கள் இந்த நிலத்திற்கு மதிப்பளிக்கும் பொருட்டு, எமது குலத்தவராலேயே அது செழுமையாக உள்ளது என்பதை அவர்களுக்குக் கூறுங்கள். இந்நிலம் எமது தாய் என்பதை, நாம் எமது சிறுவர்களுக்குக் கற்பித்துள்ளோம் என்பதையும் உங்களுடைய சிறுவர்களுக்குப் போதியுங்கள். இந்நிலத்துக்கு எது நேர்கின்றதோ, அதுவே இந்நிலத்தின் மகன்மாருக்கும் நேர்கின்றது. மனிதன் தரைமீது எச்சில் உமிழ்ந்தால், அவன் தன்மீதே எச்சில் உமிழ்கின்றவனாகிறான்.'

விலங்குகள் இன்றி மனிதன் எவ்வாறு வாழ முடியும்? அனைத்து விலங்குகளும் அழிந்துவிட்டால், தனிமையினாலேயே அவன் இறந்துவிடுவான். விலங்குகளுக்கு எது நடக்கின்றதோ, மனிதனுக்கும் அதுவே மிக விரைவில் நடக்கும். எல்லா விடயங்களுமே ஒன்றுடனொன்று பின்னிப்பிணைந்துள்ளன.'

இந்நிலம் மனிதனுக்கு உரித்துடையதல்ல. மனிதனே இப்பூலோகத்திற்கு உரித்துடையவன் என்பதை நாம் அறிவோம். குடும்பத்தை ஒன்றுபடுத்தும் இரத்த பந்தம் போன்று, அனைத்துமே ஒன்றுடனொன்று பின்னிப்பிணைந்துள்ளன. ஆம் அனைத்துமே ஒன்றுடனொன்று பின்னிப்பிணைந்துள்ளன.'

மனிதன், வாழ்க்கை வலையைப் பின்னுவதில்லை. அதில், அவன் ஓர் இழை மாத்திரமே. அவ்வலைக்கு அவன் எதைச் செய்தாலும், அது தனக்குத்

# சேரனிலிருந்து மேனன் வரை...



## சிவதாசன்

எனக்கு சில நாட்களாக... வருடங்களாக என்றும் சொல்லலாம் - ஒரு கவலை. ஈழப் போரில் நாம் தோற்றுப் போனதற்கு இந்தியாவைக் குறிப்பாக மலையாளிகளைக் குற்றம் சாட்டுகிறோமே. எமது மூதாதையர்களே மலையாளிகளாக இருக்கும்போது ஏன் அவர்கள் எங்களைப் பழிவாங்கினார்கள்? எங்களுக்கும் மலையாளிகளுக்குமிடையோன இரத்த உறவைவிட அவர்களுக்கும் ராஜீவ் காந்திக்குமிடையோன அரசியல் உறவு அத்தனை அத்தனை முக்கியம் பெற்றுவிட்டதோ? அதுவும் தலைவரது பூர்வீகமே கேரளமாகவிருந்தும் கூட அவரையாவது விட்டு வைக்கவில்லையே இந்த மலையாளிகள்? தயவு செய்து மலையாளிகளை இழிவுபடுத்துவதாகக் கருத வேண்டாம். அப்படியானால் நீங்கள் உங்களையே இழிவுபடுத்துவதாகவே இருக்கும்.

அதெப்படி ஈழத் தமிழரை மலையாளிகளோடு உறவு கொண்டாடுவது என்று நீங்கள் பொருமுவது தெரிகிறது. எல்லாம் இந்த பொதுமைப்படுத்தல் தத்துவத்தின் பாதிப்புத்தான்.

நாங்கள் யூதர்களைப் போன்று மூளைசாலிகள் என்கிறோம். இந்தியாவில் அதிகம் படித்தவர்கள் மலையாளிகள் என்பதையும் ஒத்துக் கொள்கிறோம். யூதர்களுக்கும் மலையாளிகளுக்கும் இரத்த உறவுகள் இருப்பதாக வரலாறு கூறுகிறது. காலனி ஆட்சிக்காரருக்கு ஆலோசனை வழங்கிய எம்மைப் போலவே மலையாளிகளும் மத்தியில் எந்த ஆட்சி நடைபெற்றாலும் அவ்வாட்சியினருக்கு ஆலோசனை வழங்குபவர்கள். பிறகென்ன வேண்டிக் கிடக்கிறது?

இதையெல்லாம் விட இன்னுமொரு பொதுமைதான் எமக்கும் மலையாளிகளுக்குமிடையேயுள்ள உறவை மிகவும் வலுவானதாக ஆதாரம் காட்டி நிற்கிறது. நாமும் அவர்களைப் போலவே மடையர்கள். நீர் விரும்பினால் மடையனாக இருந்துவிட்டுப் போ. அதற்கு எங்களை ஏன் இழுக்கிறாய் என்கிறீர்களா?

எனக்கும் அந்தப் பயமுண்டு. ஒரு நாள் நித்திரையால் எழும்பும்போது நானும் ஒரு மடையனாக மாறிவிடுவேனோ என்று. என் உடம்பிற்குள் ஒரு மலையாளி சிறைப்பட்டிருக்கிறானோ என்றொரு பயம் தான். நான் பிறந்த ஊர் அப்படி.

சமையல்காரரை மடையர் என்று அழைக்கும் வழக்கு இருந்தது ஒரு காலத்தில். எனக்குத் தெரிந்து எங்கள் ஊரிலேயே முதலாவது சாப்பாட்டுக் கடை நடாத்தியது ஒரு மலையாளி. யாழ்ப்பாண நகரம் தொடக்கம் வெள்ளவத்தை வரையில் மலையாளிகளின் சாப்பாட்டுக் கடை இல்லாது தமிழர் வாழ்ந்திருக்க முடியாது. அவர்கள் உள்ளூரில் கல்யாணம் கட்டியிருந்தாலும் கள்ளத் தோணிகளாக் காட்டிக் கொடுக்கப்பட்டு... ஆஹா அந்தக் காலத்திலுங் கூடவா? - அனுப்பப்பட்ட பின்னர் அம் மடைகளின் மனேஜ்மென்ட் ஒரு வகையில் exclusive ஆக எனது ஊர்க்காரரிடம் கை மாறியது வரலாறு.

சரி நாம் மலையாளிகளேதான் என்பதற்கு இன்னுமொரு ஆதாரம் வெளிநாடுகளில் எங்கள் மக்களில் பெரும்பாலோர் இன்னும் மடையர்களாவே இருந்து வருகிறார்கள் என்பது. அது எமது மரபணுவில் நிரந்தர வதிவிடம் பெற்றுக் கொண்டுவிட்டது. சில வருடங்களுக்கு முன்னர் ரொறோன்டோவிலிருந்து சென்ற ஒரு புத்திசீவி தமிழ்நாட்டில் ஒரு மாநாட்டில் பேசியபோது இவ் விடயத்தை மிகவும் காத்திரமாக உறுதிப்படுத்தியிருக்கிறார். அதாவது கனடாவில் வசிக்கும் பெரும்பாலான தமிழர்கள் உணவுச்சாலைகளில் பணிபுரிவார்கள் அல்லது டாக்சி ஓட்டுவார்கள் என்று அவர் பேசியிருக்கிறார்.

> *ரொறொன்டோவிலிருந்து சென்ற ஒரு புத்திசீவி தமிழ்நாட்டில் ஒரு மாநாட்டில் பேசியபோது இவ் விடயத்தை மிகவும் காத்திரமாக உறுதிப்படுத்தியிருக்கிறார், அதாவது கனடாவில் வசிக்கும் பேரும்பாலான தமிழர்கள் உணவுச்சாலைகளில் பணிபுரிவார்கள் அல்லது டாக்சி ஓட்டுவார்கள் என்று அவர் பேசியிருக்கிறார்.*

சரி எனது ஆய்வுக்கு முத்தாய்ப்பு வைப்பதுபோல் இன்னுமொன்றையும் சொல்லி விடுகிறேன். மடைத் தொழில் நீங்கள் நினைப்பதுபோல் அவ்வளவு இழிதொழிலல்ல. எங்கள் குலத் தொழில் எனச் சங்கநூல்களே விதந்துரைக்கின்றன. புறநானூற்றில் முரஞ்சியூர் முடிநாகராயர் என்னும் புலவர் சேர மன்னன் ஒருவனைப் (மலையாளி) புகழ்ந்தேத்திப் பாடிய பாடல் ஒன்றில் "குருசேத்திரத்தில் நடந்த பாரதப் போரில் பாண்டவர் கௌரவர் ஆகிய இரு சேனைகளுக்குமே போர் நடந்த நாட்களில் உணவளித்த சேர மன்னனை மூதாதையராகப் பெற்ற பேறு படைத்தவனல்லவா நீ" என்று புகழ்கிறார் புலவர்.

அப்போதே பல்லாயிரம் கல் தொலைவில் நடைபெற்ற ஒரு event இற்கு நாம் on site delivery... அதுவும் இரண்டு எதிராளிக் கட்சிகளுக்கும் - catering செய்திருக்கிறோம். இத்தனை ஆயிரம் வருடங்கள் கழிந்தும் இத்தனை ஆயிரம் மைல்கள் கடந்தும் இன்னும் மெருகோடு அதே தொழிலைச் செய்து வருகிறோம். நினைக்கவே மயிர்க்கூச்செறிகிறது.

சோழர்களைப் போல் சேரர்கள் நாடுகளை வெற்றி கொள்ளவில்லைத் தான். ஆனால் நன்றாக சமைத்துப் போட்டிருக்கிறார்கள் அக்கால சேரன் தொடக்கம் இக்கால மேனன் வரை. தமிழ்நாட்டில் அம்மா கட்சிக்கும் ஐயா கட்சிக்கும் ஏக காலத்தில் catering செய்வதென்பது பாரதப் போரில் படித்ததாய் இருக்க வேண்டும்.

என்ன நம்ம நாட்டிலும் அதுதானே நடக்கிறது என்கிறீர்களா? நாம் யார்? எமது பூர்வீகம் என்ன?

## அசை

தானே செய்வதாகும்.'

வெள்ளை இனத்தவரின் இறைவன், அவனுடன் சேர்ந்து நண்பனைப் போல கூடிக்குலாவினாலும் கூட, யாவருக்கும் பொதுவான விதியிலிருந்து அவ்வெள்ளை இனத்தவனுக்கு விலக்களிக்கப்படுவதில்லை. அது எவ்வாறாகவேனும் இருந்துவிட்டு போகட்டும், நாம் நண்பர்களாக இருப்போம் .... எமது கடவுளும் வெள்ளையினக் கடவுளும் ஒரே கடவுள்தான் என்பதை, ஒரு நாள் வெள்ளையினத்தவர் உணரக்கூடும். எமது நிலத்தை நீங்கள் உடைமையாக்கிக் கொள்ள விரும்புவதைப் போல, இறைவனையும் உடைமையாக்கிக் கொள்ள விரும்பக்கூடும். ஆனால் அது உங்களால் முடியாது. அவன் உண்மையான மனிதனுடைய கடவுள். அவனுடைய கருணை, செவ்விந்தியனுக்கும் வெள்ளையினத்தாருக்கும் சமமானதே. இறைவனைப் பொறுத்தவரை இப்பூமி பெருமதிப்பு வாய்ந்தது. இப்பூமிக்குத் தீங்கிழைப்பது, அதைப் படைத்தவனை இகழ்வதாக அமையும். வெள்ளையினத்தாரும் மரணிக்கின்றனர். ஒரு வேளை ஏனைய இனக்குழுக்களை விட, வெள்ளையர்கள் விரைவாக மரணிக்கக்கூடும். படுக்கையை மாசுபடுத்தும் வெள்ளை இனத்தவனாகிய நீ, உனது சொந்த அழிவுக்கேட்டிலேயே ஓர் இரவில் மூச்சுத் திணறி இறந்துவிடுவாய்'

எருமைகள் கொல்லப்படும் வேளையில், காட்டுக் குதிரைகள் வசப்படுத்தப்படுகின்றன, மிகுதியான நறுமணத்துடன் கூடிய வனப்பகுதிகளும் குன்றுகளின் எழில்மிகு இயற்கைக் காட்சியும் தொலைத்தொடர்பாடல் கம்பிகளால் கறைப்படுத்தப்படுகின்றன என்பதையெல்லாம் எம்மால் புரிந்துகொள்ள முடியாமல் உள்ளது. இந்த ஊழ்விதி எமக்கு ஒரு மர்மமாகவே உள்ளது.'

புதர்க்காடு எங்கே?, கழுகு எங்கே? அவை யாவும் அழிந்து போய்விட்டன. எமது வாழ்கை முடிந்துவிட்டது. தப்பிப்பிழைத்தல் ஆரம்பமாகியுள்ளது

மக்கள் வங்கி வெளியீடான பொருளியல் நோக்கு (ஏப்பிரல், மே, 2010) சஞ்சிகைக்காக இக்கட்டுரையாசிரியரால் மொழிபெயர்க்கப்பட்ட ஆக்கத்தின் திருத்திய வடிவம். இவ்வாக்கத்தின் ஆங்கில வடிவத்தை கீழுள்ள தொடுப்பின் ஊடாகப் பார்க்க முடியும்.(http://www.kyphilom.com/www/seattle.html)


மிக முக்கியமானதும் முன்னுரிமையானதும்

உங்கள் குடும்பத்தின் பாதுகாப்பே...

Individual Life Insurance, Mortgage Insurance,
Disability Insurance, Critical Insurance,
Non-Medical Insurance, Travel Insurance

Registered Education Saving Plan (RESP)
Registered Saving Plan (RRSP)

Call

**Ravi Ponnudurai**

(Insurance Advisor)

Direct: 647-868-6475

*Even During Tough Times,*
*Life Insurance Offers Peace of Mind*



Get the right
Super Visa Insurance
best suited for your needs!

Super VISA

MEGA Financial Group
"Foundation of your financial freedom"

PH28 - 4168 Finch Aveune. E.
Scarborough, ON
M1S 5H6
Bus: 416-293 5559
Fax: 416-293 9409
www.megafinancial.ca

# வாருங்கள் கண்டு களிப்போம் கிரிக்கட் திருவிழா!

**சிவா ஈஸ்வரமூர்த்தி**

கிரிக்கெட் இன்று எம் எல்லோராலும் போற்றப்படும் நுணுக்கங்கள் நிறைந்த விளையாட்டு ஆகும். இந்திய உப கண்டத்தில் பட்டி, தொட்டியெல்லாம் விளையாடப்படும் விளையாட்டு. இந்தியா, பாகிஸ்தான் இடையே நடைபெறும் போட்டி இவ்விரு நாடுகளுக்கிடையே யுத்தம் ஒன்று நடைபெறுவது போன்ற உணர்வலைகளை அந்நாட்டு ரசிகர்கள் மத்தியில் ஏற்படுத்துகின்றது என்றால் மிகையில்லை.

கிரிக்கட் விளையாட்டு நம் ஊரில் எல்லை என்று நாம் பட்டி தொட்டியெல்லாம் விளையாடும் ஒரு வகை பந்தை மட்டையால் அடித்து ஓட்டங்கள் பெறும் தமிழர் விளையாட்டில் இருந்து ஆரம்பிக்கப்பட்டது என்றும் கல்தோன்றா காலத்து போட்டியென்றும் நாம் கயிற விட முடியவில்லை. காரணம் இவ் விளையாட்டு 16ம் நூற்றாண்டில் இங்கிலாத்தில் முதலில் விளையாடத் தொடங்கப்பட்டது. இவ் வளையாட்டு 18ம் நூற்றாண்டில் இங்கிலாந்தின் தேசிய விளையாட்டாக பரிணாமம் பெற்றது. 19ம் ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் சர்வதேசப் பேட்டியாக பரிணாமம் பெற்று சர்வதேசத் தரத்தில் முதல் போட்டி நடாத்தப்பட்டது. ஆரம்ப காலங்களில் இங்கிலாந்து, ஆவுஸ்திரேலிய ஆகிய இருநாடுகளுக்கும் இடையிலான போட்டியாக பரிணாமம் அடைந்திருந்தது.

உலகம் முழுவதும் தனது ஒரு குடையின் கீழ் என்ற இங்கிலாந்து சாம்ராஜ்யத்தின் படையெடுப்பும், அதனைத் தொடர்ந்த காலணி ஆதிக்கமும் இவ் விளையாட்டு உலகம் பூராக பரவுவதற்கு ஏதுவாக இருந்தது. ஆங்கில மொழிப் பரம்பலும், கத்தோலிக்க மதப் பரம்பலைப் போலவே இவ்விளையாட்டும் தேயிலை பயிற் செய்கையும் பரம்பல் அடைந்து கொண்டது. இதனால் இவ்விளையாட்டு தென் ஆபிரிக்கா, மேற்கு இந்திய தீவுகள், சிம்பாப்பே. இந்தியா, பாகிஸ்தான், இலங்கை போன்ற நாடுகளில் பற்றிக் கொள்வதற்கு ஏதுவாக அமைந்தது. இது அன்று இந்திய உபகண்டத்தின் திருவிழா விளையாட்டு என்ற அளவிற்கு மற்றைய எந்த விளையாட்டையும் விட பிரபல்யம் அடைந்திருக்கின்றது.

ஆரம்ப காலத்தில ஒவ்வொரு அணியிலும் 11 பெயர்களைக் கொண்ட வகையில் இரு குழுக்கள் அமைக்கப்பட்டு 5 நாள்கள் தொடர்ச்சியாக (இடையில் ஒரு நாள் விடுமுறை நாள் உட்பட ஆறு நாட்கள்) என்று முறையில் விளையாடப்பட்டு வந்தது. ஒவ்வொரு காலகட்டத்திலும் உலகத்தின் ஒவ்வொரு அணி கொடி கட்டி பறந்ததே வரலாறு. ஒரு காலத்தில் இங்கிலாந்து அணியை யாரும் வெல்ல முடியாது என்று இருந்தது. இன்னொரு காலத்தில் மேற்கு இந்திய தீவு அணியை யாரும் வெல்ல முடியாது என்ற நிலையும் நீடித்து இருந்தது. பிறிதொரு காலத்தில் தென் ஆபிரிக்க அணியை யாரும் வெல்ல முடியாது என்ற நிலைமைகளை அவ் அணி கொண்டிருந்தது. அண்மைக் காலங்களில் அவுஸ்திரேலியாவை யாரும் வெல்ல முடியாது என்ற நிலையும் இருந்திருக்கின்றது.

ஆனாலும் இந்திய உபகண்ட அணிகள் இலங்கை இந்தியா, பாகிஸ்தான் போன்ற அணிகள் இடையிடையே உலகை தம் பக்கம் திருப்பும் சர்வதேச வெற்றிகளை பெற்றும் வந்திருக்கின்றன.

கிரிக்கெட்டின் ஆரம்ப காலங்களில் 5 நாட்கள் போட்டி என்ற Test போட்டி வகைகள் மட்டும் அறிமுகப்பட்டிருந்தன. இவ்வகைப் போட்டிகளில் போட்டியின் இறுதி நாளான 5 நாளில் கூட போட்டி வெற்றி தோல்வியை நிர்ணயிக்க முடியாத வகையில் முடிவுறாத போட்டிகளினால் கிரிகட் ரசிகர்கள் மத்தியில் இப் போட்டியின் மீதான ஆர்வம் குறைய ஆரம்பித்தது. இதன் தொடர்சியாக 50 ஓவர்களைக் கொண்ட மட்டுப்படுத்தப்பட்ட போட்டி முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இப்போட்டிகள் ஒரு முழு நாளில் முடிவடைந்து விடும். அது மட்டும் அல்லாது நாள் முடிவில் நிச்சயமாக போட்டியின் முடிவு வெற்றி தோல்வி தெரிந்து விடும் என்ற நிலைமை இருக்கின்றது. எனவே இது கிரிக்கெட் ரசிகர்கள் மத்தியில் அதிகம் வரவேற்பை பெற்றது. இதற்கான முதல்தர கிரிக்கட் விளையாடும் நாடுகளின் உலகக் கிண்ணப் போட்டி 4 வருடங்களுக்கு ஒரு முறை நடைபெற்றும் வருகின்றது.

கிரிக்கட் ஆர்வலர்கள்
Boobalam.com இல்
இக்கட்டுரையின் தொடரை
வாசிக்கலாம்.


## உங்கள் நினைவுகளை நிரந்தரமாக்க...

கொடாக் நிறுவனத்தின் நவீன புகைப்பட அச்சு இயந்திரங்களில் உங்கள் புகைப்படப் பிரதிகளை அச்சிட்டுக் கொள்ளுங்கள்.




நூறு வருடங்களுக்கு மேல் பாதுகாக்கப்படக் கூடிய பிரதிகள்!

8 x 10 அளவிலான பிரதிகளை நீங்களே அச்சிட்டுக் கொள்ளலாம்.

உங்கள் படங்களுடன் கூடிய கலண்டர்கள், வாழ்த்துக்கள், அழைப்பிதழ்கள்

உங்கள் கமெராக்களில் உள்ள மெமரி கார்ட்களிலிருந்தும், உங்கள் செல்லிடப் பேசியிலிருந்து Bluetooth மூலமாகவும் படங்களை அச்சிடலாம்.

உங்கள் படங்களிலிருந்தும் நேரடியாக பிரதிகளைப் பெறலாம்.

**Palm Print Inc.**

**1345 Morningside Ave #8 Tel:416 284 9545**





# விஸ்வரூபம் எடுப்பாரா கமல்?

உலக நாயகன் கமல்ஹாசனுக்கு வரும் நவம்பர் ஏழாம் தேதி ஐம்பத்திஏழு வயதாகின்றது. பல மொழித் திரைப்படங்களையும் சேர்த்து ஏறத்தாழ இருநூற்றிநாற்பது திரைப்படங்களுக்கும் மேல்நடித்துவிட்டார் அண்மைக்காலமாக அவர் எடுக்கும் திரைப்படமான "விஸ்வரூபம்" பற்றி செய்திகள் கசிந்து கொண்டிருக்கிறது.

இத்திரைப்படம் எப்போ வெளிவரும் என கோலிவுட் திரையுலகமும், தமிழ் ரசிகர்களும் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அனேகமாக 2013 ஜனவரி வெளிவரலாம் என ஊடகங்கள் தெரிவித்திருந்தாலும், கமலின் நிறுவனமான ராஜ்கமல் சரியான தகவல்களை விரைவில் அறிவிக்கும் எனக் கூறப்படுகிறது.

தென்னிந்திய திரையுலகில் கமல் ஒரு Evergreen Star என்று சொல்லலாம். ஏதோ ஒருவகையில் அவரைப் பற்றிய செய்திகள் வெளிவந்து கொண்டேயிருக்கும் அதற்கு பல காரணங்கள் உண்டு. அவரது சர்ச்சைக்குரிய குடும்ப வாழ்க்கை, நடிப்பு, திரைப்படத் தயாரிப்பு, கவிதை, மகள் சுருதி ஹசானின் திரையுலகப் பிரவேசம், தென்னிந்திய திரையுலகிற்கு அறிமுகப்படுத்தும் தொழில்நுட்பங்கள் என அடுக்கிக் கொண்டே போகலாம். கமல்ஹாசன் ஒரு நாத்திகவாதி. அவருக்கு அரசியலில் ஈடுபாடு இல்லை. அதனால் அவர் எந்த அரசியல் சர்ச்சைகளுக்குள்ளும் சிக்குவதில்லை. ஒவ்வொரு தனிமனிதனுக்கும் சமூகத்தின் மேல் அக்கறை இருக்கவேண்டும் அதைக் கடைப்பிடித்தாலே போதுமானது எனக் கூறுவார்.

இந்தியாவில் முறையாக வரி கட்டுபவர்களில் கமல்ஹாசனும் ஒருவர். தனது ரசிகர் மன்றங்களை நற்பணி மன்றங்களாக மாற்றியவர். அவரது தயாரிப்பில் உருவாகும் விஸ்வரூபம் திரைப்படம் தென்னிந்திய திரையுலகில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. இப்படம் தயாரிப்பில் இருக்கும்போது இந்து மக்கள் கட்சி விஸ்வரூபம் என்ற தலைப்பு படத்திற்கு வைக்கக்கூடாது என்றும் அது சமஸ்கிருத சொல் ஆகவே பெயரை மாற்ற வேண்டும் என்று விவாதங்கள் நடத்தியதாக கூறப்படுகிறது. இதேபோல் முன்பும் கமலஹாசன் எடுத்த விருமாண்டி, தசாவதாரம், மன்மதன் அம்பு திரைப்படங்களுக்கும் இந்துமக்கள் கட்சி எதிர்ப்பு தெரிவித்திருந்தார்கள்.



படத்தயாரிப்பு அறுபது கோடியில் தொடங்கி இப்போ நூற்றியம்பது கோடிக்கு வந்துவிட்டதென ஊடகங்கள் தெரிவிக்கின்றன. நாயகிகளாக ஆண்ட்ரியா, பூஜாகுமார் ஆகியோர் நடித்துள்ளனர், படத்தின் முக்கியமான பாகம் நியூயார்க் நகரில் எடுக்கப்பட்டிருக்கிறது, கமலஹாசனின் இந்நாள் மனைவி கௌதமி திரைப்படத்திற்கான ஆடைகளை வடிவமைத்துள்ளார். மேலும் கமலஹாசனின் இரண்டாவது மகளான அக்சரா உதவி தயாரிப்பாளராக அறிமுகமாகிறார். பாடல்களை வைரமுத்து எழுதியுள்ளார்.

சங்கர்-எசான் லாய் என்பவர் இசை அமைத்துள்ளார். இத்திரைப்படத்தில் ஒலியமைப்பில் விசேச தொழில்நுட்பம் பயன்படுத்தபட்டுள்ளது அதாவது Auro 3D இத்தொழில் நுட்பம் திரைப்படம் பார்ப்பவர்களை அதன் ஒலி மேலும் அடுத்த கட்டத்திற்கு எடுத்துசெல்லும். இந்த AURO 3D தொழில்நுட்பம் முதன் முதலாக ஆங்கில திரைப்படமான "RED TRAIL" இல் அறிமுகப்படுத்தப்பட்டது, அதன் பின் இந்திய சினிமாவில் முதன் முதலாக விஸ்வரூபம் திரைப்படத்தில் அறிமுகப்படுத்தப்படுகின்றது.

அத்துடன் இத்திரைப்படம் தமிழ், இந்தி இரு மொழிகளிலும் ஒரே நேரத்தில் வெளிவர இருக்கின்றது. இத்திரைப்படத்தின் கதை என்ன என்பதை பலரும் பலவாறாக யூகித்தாலும் முக்கியமாக திரைப்படத்தின் புகைப்படங்களை பார்க்கும்போது அது ஏதோ தீவிரவாதிகளுக்கு எதிரான திரைப்படம் என்று தோன்றுகிறது.

எதுஎப்படியோ விஸ்வரூபம் எடுக்கும் கமலஹாசன் இத்திரைப்படத்தின் மூலம் (OSCAR)ஆஸ்கருக்கு ரோடு போடுவாரா? அல்லது ? பொறுத்திருந்து பார்ப்போம். மேலும் வரப்போகும் அவரது பிறந்த நாளுக்கும், விஸ்வரூபம் திரைப்படம் வெற்றி பெறவும் வாழ்த்துவோம்.

**சங்கமி**

# அட்டக்கத்தி



## சுமதி

அறிமுக இயக்குனர் பா.ரஞ்சித். நாயகனும், நாயகியும் புதுமுகங்கள். இப்படிப் புதுசுகள் ஒன்று சேர்ந்து பேசப்படும்படியாக ஒரு திரைப்படத்தைத் தருவதென்பது தற்போது தமிழ்நாட்டுச் சினிமாவிற்கு ஒன்றும் புதிதல்ல. போர்முலா திரைப்படங்களைப் பார்த்துப் பார்த்துச் சலித்துப் போன மக்கள் மனதிற்கு மாற்றங்கள் தேவைப்படுகின்றன என்பதை அட்டக்கத்தி போன்ற மிக இயல்பான திரைப்படங்கள் வெற்றி பெறுவதிலிருந்து அறிந்துகொள்ளக் கூடியதாக உள்ளது.

ஒரு கிராமத்தைச் சுற்றி அதன் குணாம்சத்தை மையப்படுத்தி வெளியாகி வெற்றி பெற்ற திரைப்படம் சீனு ராமசாமியின் தென்மேற்குப் பருவக்காற்று. அதே போல் அட்டக்கத்தி திரைப்படத்தின் திரைக்கதை படத்தின் நாயனைச் சுற்றியும் அவனது குணாம்சத்தை மையப்படுத்தியும் அமைக்கப்பட்டிருக்கின்றது. திரைப்படமென்றால் நாயகனின் நேர்மறையான குணாம்சங்களே வெளிப்படுத்தப்படல் வேண்டும் என்றொரு சினிமாக்காலமும் இருந்தது. எதிர்மறைக் குணாம்சங்களை ஒருவன் கொண்டிருந்தால் அவன் திரைப்படத்தில் வில்லனாக மட்டுமே தோன்றமுடியும். எதிர்மறைக் குணாம்சத்தைக் கொண்ட ஒருவன் திரைப்படத்தின் கதாநாயகனாகத் தோன்றும் பட்சத்தில் படத்தின் இறுதியில் அவன் இறந்து போவான், இல்லை திருந்தி விடுவான். இதுதான் தமிழ் சினிமாவின் பல ஆண்டு போர்முலாவாகவிருந்தது. இந்த போர்முலாவைக் கடந்து வெளிவந்து வெற்றி பெற்ற திரைப்படம் இயக்குனர் சற்குணத்தின் களவாணி மிக இயல்பாக ஆர்ப்பாட்டமின்றி ஒரு இளைஞனின் தனித்தன்மையை மையப்படுத்தி அவனது வாழ்வைச் சொல்லிச் சென்றது அத்திரைப்படம். அதே போன்று சதாரணமாகச் சென்னையில் சந்திக்கக் கூடிய சென்னைப்புற நகரில் வாழும் ஒரு இளைஞனின் கதையை அவன் மொழியிலேயே சொல்லி நிற்கின்றது அட்டக்கத்தி.

அனைத்து மனிதருக்குமே ஒரு தனித்தன்மையான குணாம்சம் இருக்கத்தான் செய்கின்றது. ஆனால் அதனை உன்னிப்பாகக் கவனி த்துக் கலப்படமின்றிச் செதுக்கி கலை வடிவத்தில் கொண்டு வருவதென்பதுதான் ஒரு சிறந்த கலைஞனின் சிறப்பம்சம். அந்த வகையில் இயக்குனர் ரஞ்சித் மிகவும் நேர்த்தியாகப் பாத்திரங்களை வடிவமைத்திருக்கின்றார்.

ஒரு பெண் தன்னைப் பார்த்துச் சிரித்துவிட்டால் அவள் தன்னைக் காதலிப்பதாகக் கற்பனை பண்ணுவதும், அவளுக்காக வழிவதும், அவள் பின்னால் சுத்துவதும், பின்னர் அவள் தன்னைக் காதலிக்கவில்லை என்று தெரிந்த பொது அதற்காகப் பெரிதாக அலட்டிக்கொள்ளாமல் அடுத்துத் தன்னைப் பார்த்துச் சிரிக்கும் பெண்ணிற்குப் பின்னால் அதே சிரிப்பும், வழிதலும், பெண்களோடு கதைக்க முயலும் போது தடுமாறும் அவரின் கொன்னை தட்டும் தடுமாற்றமுமென்று புதுமுக நாயகனின் நடிப்பு மிகவும் யதார்த்தம்.

அவன் நண்பர்கள் அனைவரும் தங்களுக்குத் தகுந்தாற் போல் ஒருத்தியைக் காதலித்துக் கொண்டிருக்கும் போது தன்னை மட்டும் ஒருத்தியும் லவ் பண்ணுகின்றாள் இல்லையே என்று திடீர் ஞானம் வந்து பெண்கள் பக்கம் திரும்பியும் பார்க்கப் போவதில்லை என்ற முடிவோடு காலேஜிற்குள் நுழைவதும், பள்ளிக்காலத்தில் தான் காதலித்து, அவளால் அண்ணா என்று கூறி நிராகரிக்கப்பட்ட பெண் அதே காலேஜிற்கு வந்து அவனோடு சகஜமாகப் பழகத் தொடங்க விட்ட இடத்திலிருந்து தன் காதலைத் தொடரலாம் என்ற எண்ணத்தோடு அசட்டுத்தனமாக மீண்டும் தனது அதே வழிதலைத் தொடங்கிக் குப்புற விழுகின்றார் கதாநாயகன். ஒருவனின் குணாம்சம் ஒருபோதும் மாறப் போவதில்லை என்பதை அட்டக்கத்தி அழகாகக் காட்டியிருக்கின்றது.

பெண்களுக்கு இப்படத்தில் அதிகம் இடமில்லையென்றாலும் அட்டக்கத்தியால் காதலிக்கப்படும் அத்தனை பெண்களும், தமக்குக்கிடைத்த சொற்ப நேரங்களை முறையாகப் பயன்படுத்தி தம்மை அடையாளப்படுத்தி இருக்கின்றார்கள். இவற்றை விட அட்டக்கத்தியின் குடிகாரத் தகப்பன், அவரை அதட்டி உருட்டி அன்பு காட்டும் அட்டக்கத்தியின் தாயார் என்று எவருமே நடிப்பில் செயற்கைத் தனமில்லாமல் திரைப்படத்தை சோர்வின்றிக் கொண்டு செல்ல உதவியிருக்கின்றார்கள்.

படத்தில் ஓரிரு சண்டைக் காட்சிகள் இருந்தாலும் கதையோடு ஒத்துப் போவதால் செயற்கைத் தனமற்றிருக்கின்றது. அதேபோல் ஆடம்பரப்பாடல் காட்சிகளற்று ஒரு தமிழ்சினிமா திரையரங்கிற்கு வந்து மக்களின் மனதில் இடம்பிடிக்கலாம் என்பதையும் அட்டக்கத்தி திரைப்படம் நிரூபித்திருக்கின்றது. மொத்தத்தில் தமிழ் சினிமா என்பது மக்களோடு மக்களாகக் கலந்துவிட்டதென்று கூறலாம்.

# சுப்பர் எட்டு ஆட்டங்கள் ஆரம்பம்!



## பரதன்

இருபது இருபது கிரிக்கெட் ஆட்டங்கள் அனைவரும் எதிர்பார்த்தபடியே ICCதரவரிசையில் முன்னிற்கும் எட்டு அணிகளும் அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

மழையால் சில ஆட்டங்கள் நின்றதும், சில ஆட்டங்கள் நேரம் குறைக்கப்பட்டதும் குறிப்பாக மேற்கிந்தியத்தீவுகள் எதிர் அவுஸ்திரேலியா ஆட்டம் பல ரசிகர்களை ஏமாற்றத்திற்கு உள்ளாக்கியதும் உண்மை. இருப்பினும் கிரிக்கெட் ரசிகர்கள் முக்கிய ஆட்டங்களும் அடுத்த சுற்றும் எப்போ தொடங்கும் என்று எதிர்பார்த்து இருக்கின்றார்கள்.

முதல் சுற்றை ஆட்டங்களை பார்க்குமிடத்து இந்தியா அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா பாகிஸ்த்தான் அணிகள் எந்த ஒரு ஆட்டத்திலும் தோற்காமலும் சிறி-லங்கா,மேற்கிந்திய தீவுகள், நியுசிலாந்து,இங்கிலாந்து அணிகள் ஒவ்வொரு ஆட்டங்களில் தோற்ற நிலையிலும் சுப்பர் எட்டுக்குள் வந்துள்ளன

இதில் ஒரு குளறுபடி என்னவென்றால் சுப்பர் எட்டுக்கு தெரிவாகும் அணிகள் இரண்டு பிரிவுகளாக(A ,BA,இன்ன அணிதான் Bஎன முடிவு செய்யப்பட்டிருக்கும். இதனால் இம்முறை சுப்பர் எட்டு ஆட்டங்களில் அனைத்து ஆட்டங்களும் வென்ற நான்கு அணிகளும் ஒரு பிரிவிற்குள் முடக்கப்பட்டு விட்டன. எனவே இதிலிருந்து இரண்டு அணிகள் மட்டுமே அரைஇறுதிக்கு போக வேண்டிய கட்டாயம் ஏற்படுள்ளது.

இந்த விதிமுறை பார்வையாளர்களின் வசதிக்காக ஏற்படுத்தபட்ட ஒன்றாகும். தூர நாடுகளில் இருந்து ஆட்டங்களை பார்க்க வருபவர்களுக்கு தமது அணி எந்த மைதானத்தில் விளையாட இருக்கின்றது என்பதற்காகவும் அவர்கள் முன் கூட்டியேநுழைவு சீட்டுக்களை வாங்கவும் ஏற்படுத்தபட்டது.

இதுதான் அந்த விதிமுறை

The identities of A1, A2, B1, B2, C1, C2, D1 and D2 were decided according to seedings and were in place before the group stage began. So India Was A2 and England A1 no matter what position they finished in as long as both qualified. Among other reasons, this helps travelling fans know at which venue their team will play in the Super Eights. Had Afghanistan beat both India and England and qualified first, they would have taken the identity of the team that did not make it from Group A: A2 if India had failed to qualify, and A1 had England been knocked out..

2007ல் இருந்து அதாவது முதலாவது உலகக்கிண்ணப் போட்டியில் இருந்து இதே முறைதான் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. போட்டிக்கான குழுக்களை தெரிவு செய்யும் போது சென்ற உலகக்கிண்ணப் போட்டியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து A1ஆகவும், இறுதிப் போட்டியில் தோற்ற அவுஸ்திரெலியா B1ஆகவும் தெரிவு செய்யப்பட்டது. அரை இறுதிப்போட்டிக்கு சென்ற சிறிலங்கா C1ஆகவும், பாகிஸ்தான் D1ஆகவும் பிரிக்கப்பட்டது. A1, C1, B2, D2ஒரே சுப்பர் 8ல் ஒரே அணியாக விளையாடும்.

முதல்சுற்று ஆட்டங்களில் அதிக கூடிய ரன்கள். B.McCullum-New Zealand மொத்தம் 155 ரன்கள். இதில் பங்களாதேசுக்கு எதிரான ஆட்டத்தில் 123 ரன்கள் குவித்து உலக சாதனை புரிந்தார். இவர் மாத்திரமே இருபது இருபது போட்டிகளில் இரண்டு சதம் அடித்த ஒரே வீரர் ஆவார். இவருக்கு அடுத்து இங்கிலாந்தை சேர்ந்த J.Wright105 ரன்களுடன் இரண்டாம் இடத்தில் இருக்கின்றார். இவர் அப்கானிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் 99 ரன்களை ஆட்டமிழக்காது எடுத்திருந்தார்.

முதல் சுற்று ஆட்டங்களில் ஆக கூடிய விக்கெட்டுகளை சிறி-லங்காவை சேர்ந்த அஜந்தா மென்டிஸ் பெற்றுள்ளார். இவர் சிம்பாவேயிற்கு எதிராக தான் விளையாடிய ஒரு ஆட்டத்தில்மட்டும் ஆறு விக்கெட்டுக்களை பெற்றுள்ளார்.அடுத்த இடங்களில் ஐந்து விக்கெட்டுக்களை பெற்று கலிஸ், சவுத்தி, ஸ்ரர்க், வாட்சன் ஆகியோர் இருக்கின்றார்கள். இவர்கள் அனைவரும் இரு ஆட்டங்கள் ஆடியே இதனை பெற்றார்கள்.

சுப்பர் எட்டு ஆட்டங்களையும் மழை குழப்பாமல் இருந்தால் இனி வரும் ஆட்டங்கள் மிக மிக விறுவிறுப்பாக இருக்கும். கிரிக்கெட் ரசிகர்கள் பாடும் கொண்டாட்டமாக இருக்கும்.

சுப்பர் எட்டு ஸ்கோர் விபரங்களுடன் அடுத்த வாரம் சந்திப்போம்.

# தி(சி)ரிப்பு

## செய்தியும் திரிப்பும்

### கனடாத் தமிழ் ஊடகவியலாளர் கலக்கம்!

திருட்டு வீடியோ பற்றி நிறையக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் திருட்டு ஊடகவியலாளர் பற்றி ஒருவரும் அலட்டிக்கொள்வதில்லை. எவ்வாறாயினும் இந்த வாரம் கனடா ஊடகங்களில் வந்த செய்தியொன்று தமிழ் ஊடகவியலாளரை ஒரு உலுக்கு உலுக்கி விட்டது. வேறொரு பத்திரிகையில் வந்த ஒரு வசனத்தை அதை எங்கிருந்து எடுத்தது என்று போடாது தனது சொந்த வசனமாகப் போட்டதற்காக குளோப் அண்ட் மெயில் பத்தி எழுத்தாளர் மார்கரெட் வென்ரே தண்டிக்கப்பட்டார் என்பதே அந்தச் செய்தி.

"ஒரு வசனத்திற்கே இவ்வளவு தண்டனை என்றால் முழுச்செய்திகளையும் வெட்டி ஒட்டி ஈயடிச்சான் பிரதி செய்யும் எங்களுக்கு என்ன தண்டனையோ! டொலர் எண்ணிய நாங்கள் இனி கம்பி எண்ண வேண்டியதுதான்! என்று தமிழ் ஊடகவியலாளர்கள் ஆடிப்போனார்கள்.

காட்டுத்தீ போல்பரவிய இச்செய்தி கேட்டு தமிழ் ஊடக உலகம் நடுக்கம் எடுக்கத் தொடங்கியது. ஒருவருக்கொருவர் தொலைபேசி எடுத்தார்கள். அந்தரத்தில் சிலர் தெரியாத நம்பர்களுக்கெல்லாம் கூட டயல் பண்ணினார்கள். "அவைதான் கூடவெட்டி ஒட்டுகினம். இவர்தான் அப்படியே களவெடுக்கிறார். அவர்தான் முதல் சிறைக்குப் போவார். இவர்தான் கம்பி எண்ணப்போகிறார்" என்று தங்களுக்குள் தீர்ப்பு வழங்கிக் கொண்டார்கள்.

"மற்றக் களவுகள் செய்தால் இலங்கைப் பிரச்சினையாலை மனஉளைச்சலில் பிழையைச் செய்து போட்டம் என்று சொல்லி தப்பித்துக்கொள்ளலாம். ஊடகத்துறையோ புனிதமான தொழில். ஊடகவியலாளர் மனஉளைச்சலில் பிழையைச் செய்து போட்டம் என்றால் சுகமில்லாதனிங்கள் எல்லாம் ஏன் பத்திரிகையை தொடங்கினிங்கள் என்று கேட்பார்கள்" என்று ஒருவர் அழுதார்.

இவற்றையெல்லாம் பொறுமையாகக் கேட்ட அனுபவம் வாய்ந்த ஊடகவியலாளர் ஒருவர் சிரித்துவிட்டு நிதானமாகச் சொன்னார் "ஒன்றிற்கும் யோசிக்காதையுங்கோ. ஊடக தர்மம் எல்லாம் ஏனையமொழி ஊடகங்களுக்குத்தான். தமிழ் ஊடகம் தனித்துவமானது. மற்றவர்களின் எழுத்தைத் திருடுவதற்குத் தண்டனை என்றால் நாங்கள் எல்லோரும் இப்போது சிறையிற்றான் இருக்கவேண்டும். இன்னும் ஒன்றை யோசியுங்கோ. நதிமூலம் ரிசிமூலம் காணமுடியாது. எங்கே எடுத்தோம் என்று நாங்கள் எப்படிப் போடுவது? நாங்கள் பிரதி எடுக்கும் ஊடகக்காரர் வேறு எங்காவது திருடியிருப்பார். இவ்வாறான நிலையில் உரிமையாளனை நாங்கள் எங்கே தேடுவது"

இந்தப்பதிலில் திருப்தி கொண்ட வேதாளம் மீண்டும் கொம்பியூட்டர் மரத்தில் ஏறி வெட்டி ஒட்டும் விளையாட்டைத் தொடங்கியது.

### அமெரிக்காவுக்கு வைகோ கடும் எச்சரிக்கை!

#### இந்து சமுத்திரத்திற்கு விரையும் அமெரிக்கப் போர்க்கப்பல்கள்

நபிகள் நாயகத்தை இழிவுபடுத்தும் படம் சம்பந்தமாக வைகோ அமெரிக்காவுக்கு கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார். இதனையடுத்து அமெரிக்கா தனது படைகளை உசார் நிலையில் வைத்துள்ளது. வைகோவிற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கான தீர்மானம் ஒன்றை அமெரிக்கா ஐ.நா பாதுகாப்புச்சபையில் கொண்டு வந்தது. வழக்கமாக அமெரிக்கா கொண்டு வரும் எந்தத் தீர்மானத்தையும் எதிர்க்கும் சீனாவும் ரசியாவும் கூட இந்தத் தீர்மானத்தை இரு கைகளையும் உயர்த்தி ஆதரித்துள்ளன. ஏனெனில் ஏற்கனவே சீனாவையும் ரசியாவையும் யுத்தத்திற்கு வருமாறு சவால் விட்டிருந்தார். அமெரிக்கா வைகோ மீது இராணுவ நடவடிக்கை எடுக்கப் போவதாக அறிவித்துள்ளது. ஈரானை நோக்கியிருந்த அமெரிக்க போர்க்கப்பல்கள் அரபிக்கடலுக்கு நகர்வதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இக்கப்பல்கள் ரொமகோக், குறூஸ் ஏவுகணைகளைக் கொண்டுள்ளன.

#### ஒபாவைப் பதவிக்குக் கொண்டுவந்தவர் வைகோ!

கடந்த தேர்தலில் ஒபாமாவை ஆதரித்தவர் வைகோ. அவர் தமிழில் ஒபாமா பற்றி ஒரு புத்தகம் எழுதி தேர்தலுக்குமுன் தானே அதனை அமெரிக்காவில் வெளியிட்டார். இதன்பின் ஒபாமாவின் செல்வாக்கு கிடுகிடு என்று ஏறி அவர் தேர்தலில் வெற்றி பெற்றார். இப்போது வைகோ ஒபாமாவிற்கு எதிராகக் கருத்துக் கூறியவுடன் ஒபாமாவின் செல்வாக்கு சரியத் தொடங்கியுள்ளது. எல்லோரையும் பதவியில் ஏத்திவிட்டு பின்பு பதவியிறக்குவது தான் வைகோவின் வேலையாய் போய்விட்டது என்று சலித்துக் கொண்டார் வைகோவின் முந்நாள் தளபதி ஒருவர். முன்பு கருணாநிதியையும் ஜெயலலிதாவையும் பதவியேற்றி இறக்கியதை இங்கு அவர் சுட்டிக்காட்டினார்.

#### யாரை ஆதரிப்பது! உலகத்தமிழர் குழப்பம்!

வைகோ-ஒபாமாப் போரில் யாரை ஆதரிப்பது என்று உலகெங்கும் உள்ள தமிழரும் சினிமாக்காரரும் குழம்பியுள்ளனர். வைகோவிற்காக அமெரிக்காவை பகைக்க முடியுமா என்பதுதான் அவர்களின் பிரச்சினை. எனினும் ஒபாமாவிற்கான தமிழர் அமைப்பு ஒபாமாவிற்கு ஆதரவைத் தெரிவித்துள்ளது. இலங்கை சென்றுவந்த சினிமா நடிகை அசினும் ஒபாமாவிற்குத் தான் ஆதரவு தெரிவித்துள்ளார். " தமிழ் உப்புத் தின்று வளர்ந்தவன்" என்றுபாடகர் உன்னி கிருஸ்னன் வைகோவுக்கு ஆதரவாக அறிக்கை விட்டிருக்கிறார்.

#### அமெரிக்க இராணுவ ஆய்வாளர் கருத்து!

வைகோவிடம் 3 ஆயிரம் பேர் கொண்ட 3 டிவிசன்கள் இருக்கின்றன. வைகோவிடம் இருந்த பல தளபதிகள் தமது படையினருடன் சமீப காலத்தில் கருணாநிதி படையணியுடன் சேர்ந்துள்ளனர். எவ்வாறாயினும் இருக்கின்ற இந்த 3 டிவிசன்களும் இலங்கை, முல்லைப்பெரியாறு, காவிரி, கூடங்குளம் போன்ற போர்களில் ஈடுபட்டு யுத்த அனுபவம் நிறைந்தவை. தொடக்கத்தில் ஏவுகணைகள் வீசப்பட்டாலும் தரைப்படையை இறக்காமல் கலிங்கப்பட்டியை அமெரிக்கா வெல்லமுடியாது. இலங்கை, கேரளா, கர்நாடகம், ஆந்திரா ஊடாகவே அமெரிக்கா தனது தரைப்படைகளை நகர்த்த முடியும். இலங்கையுடன் சேர்ந்து உலகத்தமிழரின் கோபத்திற்குள்ளாக அமெரிக்கா ஒருபோதும் விரும்ப மாட்டாது. இந்திய வெளியுறவுத்துறையிலுள்ள கேரளாக்காரர் தமிழருக்குச்செய்யும் துரோகம் பற்றி வைகோ அடிக்கடி கூறிவருகிறார். வைகோ கேரளாக்காரருடன் தினமும் சண்டையிடுவதால் அமெரிக்கப்படைகள் கேரளா வழியே கலிங்கப்பட்டி வர நிச்சயமாக வாய்ப்பிருக்கிறது. அத்துடன் காவிரிப் பிரச்சினை காரணமாக கர்நாடகமும் அமெரிக்காவுக்கு உதவ முன்வரலாம். வைகோ கம்மா நாயுடு என்பதால் ஆந்திரா அமெரிக்காவுடன் சேரமாட்டாது என எதிர்பார்க்கப்படுகிறது. எவ்வாறாயினும் உள்ளே வரவிட்டு சிவகாசி வெடித்தொழிற்சாலைகள் பற்றவைக்கப்பட்டால் ஏற்படும் விளைவுகள் பற்றி அமெரிக்கா மிகவும் கவலையாக இருக்கிறது. மேற்கண்டவாறு அமெரிக்க இராணுவ ஆய்வாளர் ஒருவர் கருத்துத் தெரிவித்தார்.

#### 13 மணி நேரம் வைகோ ஆவேசப் பேச்சு!

யுத்தம் வெடிக்க இருக்கும் இந்த நேரத்தில் கலிங்கப்பட்டியில் தனது படையினருக்கு வைகோ நீண்டநேரம் பேசிக்கொண்டிருந்தார். சிரியா, சூடான், சோமாலியாப் பிரச்சினைகளுக்குக் கலைஞர் குடும்பம்தான் காரணம் என்று வைகோ பகிரங்கமாகக் குற்றஞ் சாட்டினார். தனது பேச்சில் வைகோ அவ்வையாரிலிருந்து ஆப்பிரகாம் லிங்கன் வரை மேற்கோள்காட்டிப் பேசினார். இதுமட்டுமன்றி கொங்கோ, கொலம்பியா, கொரியா எனப் பல போர்களின் யுத்த தந்திரோபாயங்களைப் பற்றி ஆய்வு செய்தார். அத்துடன் இலங்கைப் பிரச்சினையை தான் ஜனாதிபதி கென்னடிக்கு 3 மணி நேரம் விளக்கியதாக கூறினார். இவர் என்ன பேசுகிறார் என்று தெரியாத படையினர் பலர் நித்திரை செய்து குறட்டை விடுவதாகச் நமது இராணுவ நிருபர் யுத்தமுனையிலிருந்து தெரிவிக்கின்றார். பேசும்போது வைகோ அடிக்கடி மூக்கைத் தடவியும் துண்டைத் தூக்கித் தோளில் போட்டுக்கொண்டும் இருந்தார். இது கூட்டத்தில் இருந்த அமெரிக்க புலனாய்வாளர்களை மேலும் குழப்பத்தில் ஆழ்த்தியது. இது தமது படையினருக்கு வைகோ வழங்கும் ஏதாவது குறியீடாக இருக்குமோ என்று அவர்கள் பயந்துள்ளனர்.

கடைசிச்செய்தி! உசார் நிலை வாபஸ்!

வைகோவின் பேச்சை விடிய விடியக் கேட்ட அமெரிக்க புலனாய்வாளர் ஒருவர் அரைத்தூக்கத்தில் கொடுத்த பிழையான தகவலின் அடிப்படையிலேயே உசார் நிலை பிரகடனப்படுத்தப்பட்டதாக செய்திகள் கூறுகின்றன. தற்போது உசார் நிலை மீளப் பெறப்பட்டுள்ளதாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவிக்கின்றன. வைகோவின் ஆதரவுடன் மீண்டும் தாம் பதவிக்கு வரலாம் என்ற நம்பிக்கையுடன் ஒபாமா தமது வழக்கமான பணிகளுக்குத் திரும்பியுள்ளார்.

குளோப் பத்திரிகை பத்தியாளர் தண்டிக்கப்பட்டது, வைகோ பேசியது இரண்டையும் தவிர மற்றச் செய்திகளில் உண்மை எதுவுமில்லை என்பதை மிகுந்த மனவருத்தத்துடன் அறியத் தருகிறோம். செய்திகளுக்கு உப்புப் புளி சேர்க்கும் ஊடகவியலாளர்களுக்கு இது சமர்ப்பணம்.

**மகேஸ்**


## வகைபடு சிறு விளம்பரங்கள்

நீங்கள் வீடு வாடகைக்கு கொடுக்கிறீர்களா? கணனி விற்பனைக்கு உள்ளதா? வியாபார நிலையம் விற்பனைக்கு உண்டா? கார் விற்பனைக்கு உண்டா? வருமான வரி சேவைகள் வழங்குகிறீர்களா?

விற்பனைக்கு உள்ள பொருட்கள், வழங்கும் சேவைகள் எதுவாயினும், பூபாளம் பத்திரிகையிலும் இணையத் தளத்திலும் விளம்பரம் செய்யுங்கள். ஒரே கட்டணத்தில் பத்திரிகையிலும், இணையத்திலும் விளம்பரம் செய்யலாம்.

*416 284 4004*

*www.boobalam.com* *boobalam@ymail.com*

## For Rent

very very comfortable 3 bedroom bungalow
or 3 vast single rooms available!

Family or bachelors

416 289 0003 416 836 7760

## Private Tuition Classes

Math: Grade 9, 10, 11 and 12
Physics: Grade 11 and 12

Siva

**416 271 8467 416 265 9138**

# சீனாவின் முதலாவது விமானந்தாங்கிக் கப்பல்



கடந்த செவ்வாய்க்கிழமை (2012:09:25) அன்று சீனா Liaoning என்ற பெயர் கொண்ட தனது முதலாவது விமானந்தாங்கி கப்பலை உத்தியோகபூர்வமாக சேவையிலிட்டது. சீனாவின் வடகிழக்கே உள்ள டாலிஅன் (Dalian, இந்த துறைமுகம் இருக்கும் மாகாணத்தின் பெயரே Liaoning) துறையில் நடந்த இந்த விழாவில் சீன தலைவர்கள் ஹூ ஜின் ராஒ (Hu JinTao), வென் ஜியா பாஓ (Wen JiaBao) உட்பட பலரும் பங்குகொண்டிருந்தனர்.

சோவியத் யூனியனால் 1985 ஆம் ஆண்டில் Varyag என்ற பெயரில் உருவாக்க தொடங்கப்பட்ட இந்த விமானந்தாங்கி கப்பல் 1992 இல் கட்டுமான வேலைகளை பூர்த்தி செய்திருந்தது. ஆனால் அப்போது இதில் இலத்திரனியல் பாகங்கள் மற்றும் ஆயுதங்கள் பொருத்தி இருக்கப்பட்டிருக்கவில்லை. சோவியத்யூனியன் உடைந்த போது இது உக்ரெய்ன் வசமாகி பின் ஏலத்துக்கு விடப்பட்டது.

1998 இல் இதை Hong Kong நிறுவனமான Chong Lot Travel Agency US$ 20 மில்லியன் கொடுத்து வாங்கியது. அப்போது இந்த கப்பலை ஒரு மிதக்கும் ஹோட்டலாக Macau இல் பாவிக்கப்போவதாக கூறியிருந்தனர். 2001 ஆம் ஆண்டு கார்த்திகை முதலாம் திகதி இயந்திரமற்ற இந்த கப்பலை ஆபிரிக்க கண்டத்தை சுற்றி, இந்து சமுத்திரத்தின் ஊடாக கட்டியிழுக்க தொடங்கினர். 2002 பங்குனியில் இது Dalian துறையை அடைந்தது. சில வருடங்களின் பின் அங்கு இது விமானம் தாங்கி கப்பலாக அமைக்கப்பட்டது.

சுமார் 300 மீட்டர் நீளமும் 55,000 தொன் எடையுமுள்ள இதில் 30 யுத்த விமானம்கள் வரையும் 24 ஹெலிகொப்டர்கள் வரையும் உள்ளடக்கலாம். ஆனால் இதில் பாவிக்கப்பட போகும் விமானங்கள் பற்றி சீனா உத்தியோகபூர்வ முடிவுகள் எதுவும் இதுவரை வெளியிடப்படவில்லை. தற்போது இதை பயிற்சிகளுக்காகவே பயன்படுத்தப் போவதாக கூறப்பட்டுள்ளது.

தற்போது அமெரிக்காவிடமே மிகப்பெரிய விமானம் தாங்கி கப்பல்கள் உள்ளன. 1961 இல் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட USS Enterprise சுமார் 340 மீட்டர் நீளமானதும் 93,000 தொன் பாரமானதும் ஆகும். இது அணுச்சக்தியை பயன்படுத்தும் கப்பலாகும். இதை அடுத்த வருடம் ஓய்வு பெற திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன் அமெரிக்காவிடம் மேலும் 10 விமானம் தாங்கி கப்பல்கள் உண்டு. இவையும் சுமார் 330 மீட்டர் நீளமானவையும் 100 ,000 தொன்வரை எடையுள்ளவையும் ஆகும். இவற்றில் 80 முதல் 90 வரையான யுத்த விமானங்களை உள்ளடக்கலாம்.

இத்தாலியும் ஸ்பெயினும் தலா இரு விமானம் தாங்கிகளையும் பிரித்தானியா, பிரான்ஸ், ரஸ்யா, பிரேசில், தாய்லாந்து, இந்தியா போன்றன தலா ஒரு விமானம் தாங்கிகளையும் கொண்டுள்ளன. சுமார் 28,000 தொன் எடைகொண்ட இந்தியாவின் விமானம் தாங்கி 1953 யில் சேவையில் இடப்பட்ட முன்னாள் பிரித்தானிய விமானம் தாங்கியாகும். இதை இந்தியா 1987 இல் கொள்வனவு செய்து சேவையில் இட்டது.


இளவழகன்

# பரத்தையர் சித்தாந்தம்

## பரம் ஜி பார்வையில்....

நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அரசியல்வாதிகளற்ற ஒரு மனித வாழ்க்கை இவ்வுலகில் இருக்க முடியாது என்றே சொல்ல வேண்டும். அவர்கள் சம்பந்தப்படாத வகையில் எமது வாழ்க்கையை இம்மண்ணில் நாம் அமைத்து கொள்ள முடியாதா என சிலவேளைகளில் எண்ணுவதும் உண்டு. காரணம், மக்களின் வாழ்வாதாரமாக இருக்கவேண்டிய அரசியல் துறையில், ஜனநாயகம் என்ற போர்வையில், மக்கள் சேவை என்ற பெயரில், அம்மக்களையே பகடைக்காய்களாக்கி, மனிதராக இருக்க தகுதிகளற்ற சில பிறவிகள் அரசியல் பதவிகளை கைப்பற்றி அதிகாரங்களை துர்ப்பிரயோகங்கள் செய்வதும், அவர்களின் பின்னால் ஒருகூட்டம் கை கட்டி வாய் பொத்தி கூழைக்கும்பிடு போட்டு போலியாக பல்லிளித்து வால்பிடித்து இலாபங்கள் சம்பாதிக்க அலைவதும், முடிவில் அரசியல் பதவிகளை பெறுவதற்கு காரணமாக இருந்த அப்பொதுமக்களின் வாழ்க்கையே இவர்களின் கண்மூடித்தனமான போக்குகளால் சீரழிக்கப்படுவதையும் அடிக்கடி பார்த்ததன் பலனாக அரசியல்வாதிகள் மேல் உண்டான வெறுப்பின் வெளிப்பாடே இவ்வாரத்தின் பரத்தையர் சித்தாந்தம் எனும் இப்பகுதியாகும்.

உலகில் முதல் தொழில் விபச்சாரம் எனப் பொதுப்படையாக சொல்லப்படுகின்றது. அதனை உண்மையென எடுத்துக்கொள்வதற்கு போதிய ஆதாரங்கள் எம்மிடம்



இல்லாதிருக்கின்ற போதும், இன்றைய நிலையில் நாட்டுக்கு நாடு மக்களால் தெரிவு செய்யப்படும் ஜனாநயக ஆட்சி முறைகளில் தம்மை முன்னிறுத்தி அரசியல் பதவிகளை அடையவும் அதிகாரங்களை அனுபவிக்கவும் முனையும் பல அரசியல்வாதிகளின் சந்தர்ப்பவாத போக்குகளையும் செயற்பாடுகளையும் உற்று நோக்குகையில் அவை பெருமளவில் தமது உடலை விற்று விபச்சாரம் செய்யும் பரத்தையர்களின் செயற்பாடுகளுக்கு ஒப்பாக இருப்பதனை வெகுவாக நாம் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. அதாவது விலை மாதுக்கள் தமது தொழிலின் மூலம் நல்ல வருமானங்களை தேடிக்கொள்வதற்காக கையாளும் தந்திரங்களுக்கு ஒப்பாக அரசியல்வாதிகளின் போக்குகளும் இருப்பதனால் அது பற்றி சிந்தித்ததன் விளைவே இந்த பரத்தையர் சித்தாந்தம்.

அதென்ன பரத்தையர் சித்தாந்தம்? பொதுவாக முதலாளித்துவ அல்லது பொது உடமை சித்தாந்தங்களை முன்வைத்து அரசியற் களமிறங்கி வெற்றி பெற்று மக்களின் நலன்களுக்காக பாடுபட்டு உழைத்து நாட்டை முன்னேற்றுவதன் மூலம் தாமும் முன்னேறி மற்றவர்களும் முன்னேறும் வழிகளை அரசியல்வாதிகள் உருவாக்கி விடுவதை விட்டு, விபச்சாரம் செய்து பணம் சம்பாதிக்கும் விலைமகள் பாணியில், அதாவது தன்னை நம்பி தேடி வந்தவர்களை தனிமையில் வைத்து காரியங்களை முடித்து காசுகள் பார்ப்பவர்கள் நடந்துகொள்வது போல நடந்து கொண்ட ஒரு அமெரிக்க அரசியல்வாதியின் பொட்டுக்கேடு அந்நாட்டு ஊடகங்கள் வழியாக சென்ற வாரம் வெளிக்கொணரப்பட்டது. அவரது செயல் தனது குடியரசு கட்சி முன்வைக்கும் முதலாளித்துவ சித்தாந்தங்களை சாராமல், விரைவாக காரியங்களை சாதித்து கொள்வதற்காக ஒரு விலைமகள் கையாளும் போக்கினை ஒத்திருக்க, அதாவது பரத்தைக்கென்று ஒரு சித்தாந்தம் இருந்து அதன்படி அவள் செயற்பட்டால் எப்படி இருக்குமோ அப்படி இருந்தது அவரது செயற்பாடும்.

வருகின்ற நவம்பர் மாதம் வரவிருக்கும் ஐக்கிய அமெரிக்காவின் அதிபர் பதவிக்கான தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி பராக் ஒபாமாவினை எதிர்த்து குடியரசு கட்சி சார்பில் போட்டியிடும் மிட் ரொம்னி அவர்கள் தனது ஆதரவாளர்களிடம் இருந்து தேர்தல் நிதி சேகரிக்கும் வைபவமொன்றில் பேசிய உரையின் விடியோ பதிவே அவரது உண்மை தன்மையை எடுத்து உரைத்தது. அவ்வீடியோ பதிவு அவருக்கு தெரியாத வகையில் இரகசியமாக சுடப்பட்டு வெளியில் கசிய விடப்பட்டிருந்தமையே அவரது அரசியல் வாழ்க்கைக்கு முடிவுகட்ட காரணமாகி இருக்கின்றதோ என எண்ணவும் தோன்றுகின்றது. ஒரு அரசியல்வாதி தருணத்திற்கு தகுந்தவாறு எவ்வாறு பச்சோந்தி தனமாக நடந்து கொள்ளுகிறான் எனபதனை அப்பட்டமாக அவ்வீடியோ படம்பிடித்து காட்டியிருந்தது.

உலகின் தலைசிறந்த ஜனநாயக அமைப்பினை கொண்ட ஐக்கிய அமெரிக்காவின் ஜனாதிபதி பதவியினை கைப்பற்றுவதற்கு போட்டியிடும் இரண்டு முக்கிய அரசியல் கட்சிகளான ஜனநாயக கட்சியும் குடியரசு கட்சியும் நான்கு வருடங்களுக்கு ஒரு முறை தேர்தல் கோதாவில் குதிப்பதுண்டு. அதில் குடியரசு கட்சியின் ஆதரவாளர்களாக இருப்பவர்கள் பெருமளவில் பணபலமும் வசதிகளும் படைத்த தனவந்தர்கள். முக்கியமாக பெரும்பான்மை வெள்ளையின காக்கேஸியர்கள். ஜனநாயக்கட்சி ஆதரவாளர்களாக இருப்பவர்கள் மத்தியதரக் குடும்பங்களை சார்ந்தவர்களும் கருப்பினத்தவர்கள் போன்ற பல சிறுபான்மை இனத்தவர்களும் ஆகும்.

எந்தக்கட்சியை சார்ந்தவர் வெற்றி பெற்றாலும் அவர் அனைத்து மக்களுக்கும் பொதுவான ஜனாதிபதியாகவே செயற்பட வேண்டும். குறைந்த படசம் வெளியில் அவ்வாறாக காட்டி நடந்து கொள்ள வேண்டும். அவர்கள் அப்படி நடந்து கொள்ள வேண்டிய முக்கிய காரணம் என்னவெனில், தொடர்ந்து வரவிருக்கும் இரண்டாவது தவணை பதவிக்காலத்தை காப்பாற்ற வேண்டும் என்பதற்காகதான் என்றே நாம் எடுத்து கொள்ள வேண்டும். ஆனால் ஜனாதிபதியாக வருபவர் பெருமளவில் தான் ஜனாதிபதி பதவியை அடைவதற்கு காரணமாக இருந்த கட்சியை சார்ந்தவர்களின் நலன்கள் பற்றி பார்த்து கொள்ளுவதே முக்கிய கடமையாக செயற்படுவர் என்பதே உண்மையுமாகும்.

அமெரிக்க பொருளாதாரம் ஒபாமா வின் தலைமையில் அதல பாதாளத்தை நோக்கி போய்க் கொண்டு இருப்பதாகவும் அதனால் தமது நாட்டில் தலை தூக்கியுள்ள வேலையில்லா திண்டாட்டத்தை ஒழித்து அனைத்து மக்களின் விடிவுக்காக பாடுபடப் போவதாகவும் தேர்தல் வாக்குறுதிகளாக பிரசாரங்களில் சூளுரைத்து வந்த குடியரசு கட்சி வேட்பாளர் மிட் ரொம்னி, தனது ஆதரவு தேர்தல் நிதியாக தலைக்கு ஐம்பதினாயிரம் டாலர்கள் செலுத்தி வந்திருந்த செல்வந்தர்கள் கலந்து கொண்ட ஒரு பிரத்தியேக விருந்துபசார சந்திப்பில் பேசிய போது, அந்த நாட்டில் உள்ள 47 சதவிகித மக்கள் வரிப்பணம் செலுத்துவதில்லை எனவும் அரசிடம் கையேந்தி பிச்சையை எதிர்பார்ப்பவர்கள் என்றும் அவர்கள்தான் ஒபாமாவின் ஆதரவாளர்கள் எனவும் கேலியாக கூறியதுடன் அவர்களைப்பற்றி தான் அக்கறைப்பட போவதில்லை என்றும் ஏளனமாக சொல்லி இருக்கின்றார். ஒரு வேளை அச்சந்திப்பில் சமூகமளித்திருந்த பணமுதலைகளை குறிப்படுத்தும் நோக்கத்துக்காக மட்டும்தான் அவர் அதனை சொல்லி இருந்தாலும் அவரது அப்பேச்சு, அவரின் ஜனாதிபதி கனவுகளுக்கு சாவு மணி அடித்து விட்டது என்று எண்ண வைக்கும் வகையிலேயே நிலைமைகள் காணப்படுகின்றன.

ஐக்கிய அமெரிக்கா கனடா போன்ற நாடுகள் எவ்வளவுதான் நாகரிகத்தில் முன்னேறி சிறந்த ஜனநாயக ஆட்சி முறைகளை தம்மகத்தே கொண்டிருந்த போதும் அதில் இருக்கின்ற அரசியல்வாதிகள் மட்டும் எந்த வித மாற்றங்களும் இல்லாமல் பதவிகளை கைப்பற்றுவது மட்டுமே நோக்கமாக தேவைக்கேற்றபடி பலவகை சித்தாந்தங்களையும் கடைப்பிடிக்க தயங்கமாட்டார் என்று நாம் நிச்சயம் எதிர்பார்க்கலாம்.

பார்வைகள் தொடரும்...

எந்தக்கட்சியை சார்ந்தவர் வெற்றி பெற்றாலும் அவர் அனைத்து மக்களுக்கும் பொதுவான ஜனாதிபதியாகவே செயற்பட வேண்டும். குறைந்த படசம் வெளியில் அவ்வாறாக காட்டி நடந்து கொள்ள வேண்டும். அவர்கள் அப்படி நடந்து கொள்ள வேண்டிய முக்கிய காரணம் என்னவெனில், தொடர்ந்து வரவிருக்கும் இரண்டாவது தவணை பதவிக்காலத்தை காப்பாற்ற வேண்டும் என்பதற்காகதான்

# மறதிக்கெதிரான நினைவின் போராட்டம்

• அறம் • அரசியல் • இலக்கியம் | உரைகளும் கருத்தமர்வுகளும்

• கலாநிதி இ. பாலசுந்தரம் • பா. தேவகாந்தன் • தீபன் சிவபாலன் • ஜெனிற்றா நாதன் • கிருத்திகன் குமாரசாமி • வின்சன்ட் போல் சந்தியாப்பிள்ளை • இரா சிவரட்ணம் • பா. அ. ஜயகரன் • பால சுகுமார் • விஜய் சவரிமுத்து • ராம் சர்வேந்திரன் • பொன்னி அரசு • சுதர்சன் துரையப்பா • சதா விவேகானந்தன் • கலாநிதி பார்வதி கந்தசாமி • த. அகிலன் • கலாநிதி சுல்பிகா ஸ்மாயில் • கலாநிதி உ. சேரன் • அமரநாத் அமரசிங்கம் • ர:.மான் ஜான்

**ஆகியோர் ஆய்வுக் கருத்துக்களை வழங்கவிருக்கிறார்கள்**

## 1ம் நாள் நிகழ்வுகள்

**October 6th, 2012 9:00 A.M**

**Scarborough Civic Centre**

150 Borough Drive
(North-west corner of McCowan Rd. and Ellesmere Rd.)
Scarborough (Toronto), ON. Canada
M1P 4N7

### அமர்வு:1

- த. அகிலன், தீபச்செல்வன், யோ. கர்ணன் எழுத்துக்களுக்கூடாக போரும் அதன் தடங்களும்
- புலம்பெயர் இலக்கியம் - ஈழத்து இலக்கியம் ஒரு ஒப்புநோக்கு
- ஈழத்து நாட்டார் வழமைகளும், செவி வழி இலக்கியமும்

### அமர்வு: 2

- கனடாவில் தமிழ் பெண்கள், குடும்ப வன்முறை
- “யானும் இட்ட தீ“ - தமிழ் முதியோர் வாழ்வு

### அமர்வு: 3

- சாதீயம்: போர் - இடப்பெயர்வு - புலம்பெயர்வு
- ஈழத்தமிழர் மத்தியில் சாதீயப் பரம்பல்
- அனுபவப் பதிவு

### அமர்வு: 4

- கனேடியத் தமிழ் நாடகங்கள்
- வன்னியில் திரைப்பட முன்னகர்வுகள்
- ஈழத்து மரபுவழி நாடகங்கள்

### சிறப்புரை:

**மலையக இலக்கியம்**
**மு. நித்தியானந்தன்**
(முன்னாள் விரிவுரையாளர் - இலங்கைப் பல்கலைக்கழகம்)

**ஜெய் பீம் தோழர்**
**டாக்டர் அம்பேத்கார் பற்றிய விபரணத் திரைப்படம்**
**இயக்கம்: ஆனந்த் பட்வர்தன்**

TAMIL RESOURCE CENTRE
தமிழர் வகைதுறைவள நிலையம்

## 2ம் நாள் நிகழ்வுகள்

**October 7th, 2012 2:00 P.M**

**The Church of St. Columba**

2723 St.Clair Avenue East
East York (Toronto), ON. Canada
M4B 1M8

### அமர்வு: 1

- பால் - பால் அடையாளம் - பாலியல் தேர்வு
- தமிழ் இலக்கியத்தில் பாலின வேறுபாடுகள்

### அமர்வு: 2

- போரும் பெண்களும், போருக்கு பின்னரான பெண்கள் வாழ்வு
- கனடாவில் குழு வன்முறை
- கனடாவில் தமிழர்கள்

### அமர்வு: 3

- தமிழ் தேசியம்
- இலங்கையில் தேசிய இனங்களுக்கிடையான நல்லிணக்கணமும் சவால்களும்
- இலங்கை இடதுசாரி அமைப்புகளின் இனப்பிரச்சினை தொடர்பான பார்வை

### சிறப்புரை

**தேசிய இனப்பிரச்சினையில் முஸ்லீம் மக்களின் நிலைப்பாடும் மற்றும் முஸ்லீம் மக்களின் இனத்துவம் தொடர்பான மதிப்பீடும்**

பேராசிரியர் இம்தியாஸ்
Dr. A.R.M. Imtiyaz, Ph.D
Asian Studies/Political Science
Temple University, Philadelphia

**அனைவரையும் தோழமையுடன் அழைக்கின்றோம்!**

மேலதிக விபரங்களுக்கு

thedakam@gmail.com, www.facebook.com/thedakam
647•891•8597, 416•731•1752, 647•702•8603

# எகிப்திய ஜனாதிபதி காண்பது பகல் கனவா?

எகிப்திய ஜனாதிபதி மொகமட் மோர்சி (Mohamed Morsi) அண்மையில் New York Times என்ற பத்திரிகைக்கு ஒரு பேட்டி கொடுத்துள்ளார். இது அமெரிக்க பத்திரிகையாளர்க்கு மோர்சி கொடுத்த முதல் பேட்டியாகும்.

அந்த 90 நிமிட பேட்டியில் அரபுலகுடன் அமெரிக்கா நல்லுறவு வளர்க்க தேவையான அறிவுரைகளையும் அவர் பட்டியலிட்டுள்ளார். மோர்சியின் கருத்துக்கள் ஆணித்தரமானவையாயும் நியாயமானவையாயும் இருந்தன. ஆளால் அமெரிக்க அரசியலில் அவற்றுக்கு இடம் உள்ளனவா என்பது கேள்விக்குறியே.

இந்த பேட்டியில் மோர்சி முக்கியமாக குறிப்பிட்டது பாலஸ்தீனியர் விடயம். அமெரிக்கா 1979 இல் கைசாத்திட்ட Camp David உடன்படிக்கையில் உத்தரவாதம் அளித்தபடி பாலஸ்தீனியர்களுக்கு உரிமைகளை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுள்ளார். ஆனால் அது நடக்குமா?

அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி காட்டர் தலைமையில் அப்போதைய எகிப்திய தலைவர் அன்வர் சதாத்துக்கும் இஸ்ரேலிய பிரமருக்கும் இடையில் 1979 ஆம் ஆண்டு இரண்டு உடன்படிக்கைகள் உருவாக்கப்பட்டன. முதலாவது பாலஸ்தீனியர்களுக்கு உரிமையுள்ள ஒரு அரசு அமைப்பது. இரண்டாவது இஸ்ரேலுடன் எகிப்து நல்லுறவு பேணுவது. இதில் இரண்டாவதை நடைமுறைப்படுத்த அமெரிக்காவும் இஸ்ரேலும் கொண்டிருந்த ஆர்வம் முதலாவதில் இருந்திருக்கவில்லை. கடந்த 30 வருட இஸ்ரேலிய நடவடிக்கைகளை பார்க்கும்போது அவர்கள் உண்மையில் முதலாவது விடயத்தை இரண்டாவது விடயத்தை நடைமுறைப்படுத்த ஒரு பொறியாக பயன்படுத்தினரோ என எண்ணத் தோன்றுகிறது.

கடந்த 30 இற்கும் மேலான ஆண்டுகளில் இஸ்ரேல் பாலஸ்தீனியர்களை சிறிது சிறிதாக விரட்டி அவர்களின் நிலங்களை தம் மயப்படுத்தி வருகின்றனர். இதை அமெரிக்க அரசியல் தடுப்பதோ அல்லது தவறென்று சொல்லுவதோ இல்லை. இதற்கான காரணத்தை காண அமெரிக்க-இஸ்ரேல் அரசியலை கவனிக்க வேண்டும்.

அமெரிக்க அரசியலின் "மெக்கா" இஸ்ரேல். இந்த அமெரிக்க அரசியலின் மெக்காவுக்கு கணிப்பிடக்கூடிய பாதிப்பை உண்டுபண்ணும் அமெரிக்க அரசியல்வாதி மட்டுமல்ல இந்த மெக்காவை மனதளவில் நோகடிக்கும் அரசியல்வாதியும் அமெரிக்க அரசியலில் அழிவது நிச்சயம். இது எல்லா அமெரிக்க அரசியல்வாதிகளுக்கும் நன்கு தெரியும். வரும் கார்த்திகையில் நடக்கவுள்ள அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் ஒபாமாவும், ராம்னியும் கூட தேர்தல் பிரச்சாரங்களை ஆரம்பிக்க முன் இந்த மெக்கா சென்று வந்திருந்தனர்.

மற்ற எல்லா நாடுகளிலும் அந்தந்த நாடுக்கு உட்பட்ட விடயங்கள் உள்நாட்டு அரசியாலாயும், நாட்டுக்கு வெளிப்பட்ட விடயங்கள் வெளிநாட்டு அரசியலாயும் இருக்கும். ஆனால் அமெரிக்காவில் இஸ்ரேலிய வெளிநாட்டு அரசியலானது அமெரிக்காவின் உள்நாட்டு அரசியல். எந்தவொரு அமெரிக்க அரசியல்வாதியும் இஸ்ரேலின் பாலஸ்தீனியம் உட்பட்ட வெளியுறவு அரசியல் நடவடிக்கைகளை கேள்விகள் கேட்காது அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும். தவறின் அவரின் அமெரிக்க அரசியல் வானம் மறுகணமே இருண்டுவிடும். அதை செவ்வனே செய்ய பலமான பிரச்சார வலையமைப்பு அமெரிக்காவில் உண்டு. மாற்று இனங்களின் சனத்தொகை அமெரிக்காவில் பெரியளவில் அதிகரிப்பதால் இஸ்ரேலிய ஆதரவு படிப்படியாக குறைந்தாலும் தொடர்பு சாதனகளின் மத்தியில் நிலைமை இன்னமும் மாறவில்லை.

இதுவரை மத்திய கிழக்கில் இருவகை தலைவர்களே இருந்தனர். ஒன்று மொத்தமாக முட்டிமோதுவது மற்றது முற்றாக அடிபணிந்து தம்குடும்பத்தை மட்டும் வளர்ப்பது. இதுவரை அமெரிக்க அரசியல் முட்டிமோதியதை அடியோடு அழித்தது. அடிபணிந்ததை வளமூட்டி வளர்த்தது. ஆனால் மோர்சி இதுவரை ஆணித்தரமாகவும் நியாயமாகவும் செயல்படும் தலைவர் போல் உள்ளார். இவ்வகையை அமெரிக்க அரசியல் எவ்வாறு கையாளும் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். மோர்சி நியாயத்தை நிலைத்து நின்று வளர்ப்பார, மெல்ல அடிபணிந்து பொம்மையாவார, அல்லது முட்டிமோதி அழிவாரா என்பதையும் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

அமெரிக்காவும் இஸ்லாமிய உலகும், குறிப்பாக அரபுலகும் ஒட்டி உறவாடுவது இஸ்ரேலுக்கு நல்லதல்ல என்பது இஸ்ரேலிய ஆதரவாளர்க்கும் நன்கு தெரியும். அவர்கள் முடிந்தவரை இந்த உறவு உருவாகாமல் தடுப்பார்கள்.

எகிப்தில் 1951 ஆம் ஆண்டு கைரோவின் வடபகுதியில் பிறந்த மோர்சி கைரோ பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை முடித்தபின் அமெரிக்காவிலுள்ள தென் கலிபோர்னிய பல்கலைக்கழகத்தில் (University of Southern California) Ph.D. யையும் பூர்த்தி செய்திருந்தார் என்பதுவும் இங்கு குறிப்பிடக்கூடியது. இவர் எகிப்திய ஜனாதிபதியாகமுன் இவர் முஸ்லிம் சகோதரத்துவத்தின் (Muslim Brotherhood) தலைவராக இருந்தவர்.

இளவழகன்

# ரே நாட்களும் மக்கின்ரித் திங்கள்களும்

தர்சன்



பொருளாதாரம் வளரும்போது பெரும்பாலானவர்கள் கூடியவரை நல்லவர்களாக இருக்கிறார்கள்.

பானையில் உணவிருக்கும். ஆன்மாவுக்கு கலையிருக்கும்.

அரச திறைசேரிகள் நிரம்பிக் கொண்டிருக்கும். ஆட்சியிலிருப்ப வர்களும் சந்தோசமாக ஆட்சியை நடத்திக் கொண்டிருப்பார்கள்.

பொருளாதாரம் வீழ்சியடையும் போது தான் பிரச்சனையே உருவாகிறது.

உண்ண உணவுக்கும், உடுக்க உடைக்கும், உறங்க உறையுளுக்கும் பெரும்பான்மையான மக்கள் போராட வேண்டிய நிலை உருவாகிறது.

அரச திறைசேரிகள் வற்றிக் கொண்டு போக ஆட்சியாளார்களுக்கு வில்லங்கம் வந்து சேருகிறது.

டோல்ற்றன் தலைமையிலான ஒன்ராறியோ மாகாண அரசுக்கும் இப்படியானதொரு வில்லங்கமே வந்து சேர்ந்திருக்கிறது.

2003ம் ஆண்டில் டோல்ற்றன் மக்கின்ரியின் லிபரல் கட்சி ஆட்சியைக் கைப்பற்றியபோது அரசின் நிதி நிலை இப்போதைய நிலைமையுடன் ஒப்பிடும்போது மோசமாக இருக்கவில்லை. இருப்பினும், அப்போதைய பொருளாதார நிலமை நன்றாக இருந்தும் மைக் ஹரிஸ் ஆட்சிக் காலவரிவிலக்குகளால் அரசின் வருமானம் போதியளவாக இருக்கவில்லை.

1995ல் ஒன்ராறியோவில் ஆட்சியைப் பிடித்த மைக் ஹரிஸ் தலைமையிலான மாகாண அரசு அப்போதைய கடன் சுமையைக் காரணமாக முன்வைத்து பொதுநலத் திட்டங்களை முழுமையாக நிறுத்தியது அல்லது சுகாதாரம், கல்வி, சுற்றுச்சூழல், சமூகநலன் முதலிய துறைகளுக்கு அரசு செலவிடும் தொகையினைக் குறைத்தது.

இவையெல்லாம் போதாதென்று பொருளாதாரம் சீரடையத் தொடங்க ஹரிஸ் அரசு வரிவிலக்குகளை வழங்க ஆரம்பித்தது. வரிவிலக்குகள் ஒன்றும் அரசின் வருமானத்தைக் கூட்டவது கிடையாது என்று எப்படித்தான் வலியுறுத்தினாலும் மைக் ஹரிஸ் மற்றும் தற்போதை மாகாண கென்சேவேடிவ் கட்சித் தலைவர் ரிம் ஹூடாக் போன்ற வலதுசாரிகள் செவி சாய்ப்பது கிடையாது.

விளைவு, பொருளாதாரம் சீரடையத் தொடங்கியும் அரச பொதுநலத்திட்டங்கள் சீரடையத் தொடங்கவில்லை. பெரும்பாலான ஒன்ராறியோ மக்களின் வாழ்வும் சீரடையவில்லை.

ஹரிஸ் அரசின் காலத்தில்தான் வோக்கற்றன் நகரில் மாசுபட்ட நீரை அருந்தியதால் சிலர் உயிரிழந்தனர். சுற்றுசூழல் துறைக்கு ஹரிஸ் அரசு நிதியைக் குறைத்தமையினாலேயே இந்தத் துன்பகரம் நடந்ததாக நம்பப்பட்டது.

ஆசிரியர்கள், சுகாதார மற்றும் பொதுத்துறை ஊழியர்கள் பொருளாதார நெருக்கடிக் காலத்திலிருந்த தமது நிலமையை சீர்ப்படுத்த ஹரிஸ் அரசுடன் பொருளாதாரம் வளரத் தொடங்கிய காலத்திலும் போராட வேண்டியிருந்தது.

இந்த நிலமையில்தான் ஒன்ராறியோ மக்கள் ஒக்டோபர் மாதம் 2003ல் டோல்ற்றன் மக்கின்ரி தலைமையிலான லிபரல் அரசைத் தெரிவுசெய்தனர்.

மைக்கின்ரி ஆட்சியைக் கைப்பற்றியதும் அரசின் வருமானத்தை சுகாதார வரி மூலம் கூட்டினார். கல்வி, சுற்றுச் சூழல், சுகாதாரம் முதலிய பொதுத்துறைக்கான நிதி கூட்டப்பட்டது. பொதுத்துறை ஊழியர்களுடனான அரசின் உறவு சுமூகமானது.

இந்த சுமூகமான உறவு இப்போது சீரழியத்தொடங்கியுள்ளது.

தற்போதைய பொருளாதார மந்தநிலை அரசுக்கு நிதிநெருக்கடியினை ஏற்படுத்தியுள்ளது. அரசின் கடன் தொகையும் கூடிக்கொண்டுபோகிறது. ஆகவே, செலவுகளைக் கட்டுப்படுத்த மக்கின்ரி அரசு முனைகிறது. இதனடிப்படையில், பொதுத்துறை ஊழியர்களின் சம்பளங்களை இரண்டு வருடங்களுக்கு தற்போதைய நிலையில் வைத்திருப்பதற்கான சட்டவரைவை அரசு முன்வைத்துள்ளது.

இந்த நடவடிக்கை தொழிற் சங்கங்களைக் கோபப்படுத்தியுள்ளது. தொழிற் சங்கங்களுடனான உரையாடல்கள் ஊடாக உடன்படிக்கைகளைப்பெறாமல் அரசு தன்னிச்சையாக செயற்படுகிறது. தொழிலாளர்களின் உரிமைகளைப் பறிக்கிறது. இவையே தொழிற் சங்கங்களின் குற்றச்சாட்டு.

இதில் உண்மையில்லாமல் இல்லை. பொதுப்பாடசாலை ஆசிரியர் சங்கத்துடன் ஒரு உடன்படிக்கைக்கு வராத மக்கின்ரி அரசு ஆசிரியர்கள் ஈடுபடாத வேலைநிறுத்ததுக்கு தடைவிதிக்கும் சட்டத்தை கென்சேவேடிவ் கட்சியின் ஆதரவுடன் அமுலுக்குக் கொண்டு வந்திருக்கிறது.

இந்த நடவடிக்கையால், இப்போது பொதுப்பாடசாலை ஆசிரியர்கள் கல்விக்கு அப்பாற்பட்ட எந்தத் தொண்டு வேலைகளிலும் தாம் திங்கட் கிழமைகளில் ஈடுபடப்போவதில்லை என்று அடம்பிடித்து வருகின்றனர். இந்த நாட்களை "மக்கின்ரித் திங்கள்" என்று வேறு அழைக்கிறார்கள். இந்த நடவடிக்கையால் பாதிக்கப்படப்போவது பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகளே. ஆசிரியர்களின் இந்த நடவடிக்கை ஏற்புடையதல்ல. இந்த நடவடிக்கை பெற்றோர்கள் மத்தியில் பொதுத்துறை ஊழியர் பற்றிய பிழையான விம்பத்தை உருவாக்கும்.




மக்கின்ரி அரசின் தன்னிச்சையான நடவடிக்கைகள் ஆரோக்கியமானதல்ல. ஆனால், தற்போதய பொருளாதாரச் சூழலில் பொதுத்துறைத் தொழிலாளர் களுக்கான சம்பள உயர்வை இரண்டு வருடங்களுக்கு கட்டுப்படுத்துவது ஏற்கத்தக்கது.

ஊழியர் சங்கங்கள் இதனைப் புரிந்துகொள்ளாமல் தமது குரல்களை உயர்த்துமாயின் பாதிக்கப்படப்போவது சங்கங்களின் அங்கத்தவர்களே.

தொண்ணூறுகளின் ஆரம்பத்தில் பொப் ரே தலைமையிலான என்.டி.பி அரசு "சமூக ஒப்பந்தம்" என்னும் சட்டத்தை அன்றைய பொருளாதாரச் சூழலில் அமுலுக்குக் கொண்டு வந்திருந்தது. அதனடிப்படையில் வருடத்தில் பத்து நாட்கள் சம்பளமில்லாத கட்டாய ஒய்வு தொழிலாளர்களுக்கு கொடுக்கப்பட்டது. இந்த நாட்களை "ரே நாட்கள்" என்று தொழிற்சங்கங்கள் நக்கலாக அழைத்தன. ரே அரசை விளங்கிகொள்ளாமல் பெரும் போராட்டங்கள் நடத்தின.

விளைவு, ஜூன் 1995ல் தொழிலாளர் நலனுக்கு எதிரான ஹரிஸ் அரசு ஆட்சியைக் கைப்பற்றியது.

இந்த வரலாற்றை தற்போதைய தொழிற்சங்கவாதிகள் நினைவில் வைத்தி ருப்பார்கள் என்றே நம்புகின்றேன்.

# யாருக்குச் சொல்லியழ? 4

இளவழகன்

ஈரான் நாட்டை சார்ந்த, ஆனால் ஈரானிய அரசை எதிர்க்கும் MEK (Mujahadin-e Khalq) என்ற ஆயுத குழுவை அமெரிக்க அரசு அதன் பயங்கரவாதிகள் பட்டியலில் இருந்து நீக்கி போராளிகள் பட்டியலில் உள்ளடக்க தீர்மானித்துள்ளது. இந்த குழு 1970 களில் அமெரிக்க அரசியலின் பொம்மையாக இருந்த ஈரானிய தலைவர் மன்னர் சாவை எதிர்த்து வன்முறைகளில் இறங்கியிருந்தது. பின் ஈரான்-ஈராக் யுத்தத்தின் போது இது சதாமின் உதவியுடன் ஈராக்கில் இருந்து ஈரான் மீது தாக்குதல்கள் நடாத்தியிருந்தனர். இந்த குழுவை 1997 இல் அமெரிக்க அரசியல் தமது பயங்கரவாதிகள் பட்டியலில் இட்டது. பின் 2003 இல் அமெரிக்கா சதாமின் அரசை கவிழ்த்தபோது இக்குழு அமெரிக்கா பக்கம் தாவியது.

கடந்த சில வருடங்களாக இந்த குழுவை பயங்கரவாதிகள் பட்டியலில் இருந்து நீக்க அமெரிக்காவின் பெரும் அரசியல் புள்ளிகளான James Woolsey, Porter Gross (CIA), Tom Ridge (முன்னாள் homeland security secretary), Louis Freeh (FBI) போன்றோர் அரசியல் பிரச்சாரம் (lobbying) செய்து வந்துள்ளனர். இவர்களின் உள்நோக்கு பிரான்சில் தலைமையகத்தை கொண்டுள்ள இந்த குழுவை ஈரான் அரசுக்கு எதிராக பயன்படுத்துவதாக இருக்கலாம்.

அப்படியானால் அமெரிக்க அரசியலில் பயங்கரவாதி என்ற சொல்லுக்கான வரைவிலக்கணம்தான் என்ன?

இவ்வகை கபடங்களுக்கு இன்னுமொரு உதாரணம் துருக்கி, சிரியா, ஈராக், ஈரான் போன்ற நாடுகளுள் பரந்து வாழும் மக்களாகிய Kurds. இவர்களின் சனத்தொகை துருக்கியில் சுமார் 15 மில்லியன், சிரியாவில் சுமார் 2 மில்லியன், ஈராக்கில் சுமார் 5 மில்லியன், ஈரானில் சுமார் 7 மில்லியன் என உள்ளது. இவர்களுள் PKK, KDP, PUK என பல குழுக்கள் விடுதலை போராட்டங்களை ஆரம்பித்திருந்தன (அத்துடன் தங்களுக்குள்ளும் பல தடவைகள் முட்டி மோதினர்). இவற்றுள் KDP, PUK போன்ற குழுக்கள் பிரதானமாக ஈராக்கின் எல்லைக்குள் இருந்து ஈராக்கிற்கு எதிராக போராடின. சதாம் அமெரிக்க நண்பனாக இருந்தபோது இந்த இரு குழுக்களும் அமெரிக்க அரசியலுக்கு எதிரியான ஈரானுடன் உறவை வைத்திருந்தன. பின் சதாம் அமெரிக்க எதிரியானபோது இவ்விரு குழுக்களும் அமெரிக்கா உட்பட்ட மேற்கின் மனிதநேய பார்வையில் போராளிகள் ஆயினர். அதனால் ஈராக்கிற்குள் "மட்டும்" உட்பட்ட Kurds இவ்விரு குழுக்களின் தலைமையில் அமெரிக்க மற்றும் மேற்கு அரசியல் விடுதலை பெற்றுக் கொடுத்தனர்.

ஆனால் அமெரிக்க அரசியலின் நீண்டகால நண்பனான துருக்கியுடன் அந்த நாட்டு எல்லைக்குள்ளிருந்து விடுதலை போர் தொடுத்த PKK என்ற குழு அமெரிக்கா உட்பட்ட மேற்கு அரசியலின் மனிதநேய பார்வையில் பயங்கரவாதி ஆயினர். அத்துடன் அமெரிக்க அரசியல் நோக்கில் துருக்கியின் எல்லைக்குட்பட்ட Kurds விடுதலைக்கு அருகதை அற்றவர்களும் ஆயினர்.

உலக அரசியல் அரங்கில் பயங்கரவாதி terrorist) என்ற சொல்லும் போராளி (rebel) என்ற சொல்லும் அந்தந்த நாடுகளின் அரசியல் வசதி சார்ந்ததா? ஒருவர் ஒரு பயங்கரவாதி என்பதற்கு அவரின் பயங்கரவாத நடவடிக்கைகள் மட்டும் தானே காரணமாகும். அவர் யாருக்கு நண்பன் யாருக்கு எதிரி என்பது இங்கு முக்கியமில்லைதானே. ஆனால் உலக அரங்கில் மனிதநேயம், பயங்கரவாதம் எல்லாமே அரசியல் தான். ஆயுத குழு உலகில் "எனக்கு எதிரானவன் பயங்கரவாதி, என் எதிரிக்கு எதிரானவன் போராளி".

## கனடிய மோட்டார் வாகனத் தொழிற் சங்கம் இணக்கப்பாடை எட்டியுள்ளது!.

கனடிய மோட்டார் வாகனத் தொழில் சங்கம் வாகன தொழில் நிறுவனமான Chrysler உடன் இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது. இதன் மூலம் மோட்டார் வாகனத் துறையில் ஏற்படவிருந்த வேலை நிறுத்த நடவடிக்கைகள் தவிர்க்கப்பட்டதாக இத் தொழில் சங்கம் அறிவித்திருக்கின்றது.

ஏனைய நிறுவனங்களான போர்ட், ஜி எம் உடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையை ஒத்த உடன்படிக்கை களை அடிப்படையாக வைத்தே இந்த ஒப்பந்தம் அமையும் என தொழிலாளர் சங்கம் அறிவித்துள்ளது.

இரு பகுதியினரும் உடன்படிக்கையை வரவேற்றுள்ள போதிலும் இதை பற்றி மேலதிக செய்திகளை வெளியிட மறுத்துள்ளனர்.






## ரொறொண்டோ நகர பிதா ரொப் போர்ட் மீண்டும் சிக்கலில்!

டொரோண்டோ நகர பிதா ரோப் போர்ட் இம்முறை புதிய சிக்கல் ஒன்றில் மாட்டியுள்ளார். நகர சபை நிர்வாகத்திற்குரிய சபைகளுக்கும் இதர பொறுப்புகளுக்கும் புதியவர்களை நியமிக்கும் பட்சத்தில் நகர பிதா தனிப்பட்ட முடிவுகளை எடுத்து வருவதாக நகரின் முறைகேள் அதிகாரி விசனம் தெரிவித்துள்ளார்.

முறைகேள் அதிகாரியின் இவ் அறிக்கையானது பாரிய அதிருப்திகளை சம்பாதித்துள்ள ரோப் போர்ட் டை மீளும் பாதிக்கும். ரோப் போர்ட்ட்டுக்கு நேருக்கமானவர்களும் நகரத்தின் இன விகிதாசாரத்தை பிரதிபலிக்கும் கொள்கைகளும் இவ்வாறான நியமனங் களில் இடம் பெறத் தவறியதும் பாரிய தவறுகளாக காட்டப்பபட்டுள்ளன.

என் எண்ணத்தில் இருந்து...

# மாறிவரும் குடிவரவுக் கொள்கைகளும் ஆதரிக்கின்ற தமிழ் குடிவரவாளர்களும்!

## நாம் தமிழர்கள் மட்டுமா? நாம் கனடியர்களா? எம்மை நாமே கேட்கின்றோம்!

நமு பொன்னம்பலம்



கனடிய மத்திய அரசினால் நடை முறைப் படுத்தப்படும் பல் கலாச்சார பன்முகத்துக்கு எதிரான கொள்கையை, அதன் பாதிப்புக்களை எமது சமூகத்துக்கு மத்தியில் பிரச்சாரமாய் எடுத்துச் செல்ல புதிய குடிவரவாளர்கள் ஆகிய நாம் கனேடியர்களாக முகம் காட்ட முன்வர வேண்டும். அதே போல ஹார்பர் அரசின் வலது சாரி தன்மையுள்ள அரசியலை ஆதரிக்கின்ற தமிழ் பிரமுகர்கள் பல்கலாச்சார பன்முகத்துக்கும், கனடிய அடிப்படை ஸ்திர தன்மைக்கும் எதிராக இவ் அரசானது எடுத்து வரும் திட்டங்கள் எமது எதிர் கால சந்ததியை இங்கு வளர விடாது தடுக்கின்ற ஓர் முயற்சி என்பதை ஏற்று, இதற்கு எதிராக செயல்பட முன்வர வேண்டும்.

பெற்றோர்களுக்குரிய நிரந்தர வதிவிட உரிமை ரத்து, அகதிகளுக்கு எதிரான பல்வேறு தடைகள் போன்ற திட்டங்கள் கனடிய பல் கலாச்சார பன்முகத்துக்கு எதிரான திட்டங்களாகும். இந்த கனடிய மத்திய அரசு குடிவரவுத் துறையில் செய்து வரும் மாறுதல்கள் பாரிய மாறுதல்களை எதிர்காலத்தில் காலத்தில் உருவாக்கும். ஓர் தெளிவற்ற பார்வையுள்ள தலைமையை நம்பி புதையுண்ட நமது மக்கள் கனடாவில் தங்கள் நிலைப்பாட்டை சரிவர உணராது விட்டால் இந்த மாற்றங்களின் பாதிப்புக்கள் எம் ஒவ்வொரு வரையும் பாதிக்கும் நாள் வெகு தூரத்தில் இல்லை.

பல் வேறு இன மொழி பேசும் மக்கள் வாழும் நாடாக கனடாவை மாற்றிய பங்கு அதன் அரசியல் யாப்பை வகுத்த முன்னோடிகளுக்கு போய்ச்சேரும். அப்படிப்பட்ட சட்ட பாதுகாப்பே எமையும் எம் போன்றவர்களையும் இந் நாடு ஏற்கவும் இந்த நாட்டில் சம உரிமை பெற்ற குடி மக்களாக வாழவும் வழி செய்தது. தற்போது இந்த நாட்டில் இடம்பெற்று வரும் அரசியல் ரீதியான சீர்திருத்தங்கள் குறிப்பாக குடிவரவுத் துறையில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் எம் போன்ற புதிய குடிவரவாளர்களையும் எம் போன்ற அகதிகளாய் தஞ்சம் கோரும் அனைத்து மக்களையும் பாதிக்கும்.

இதன் தாங்கங்களை எமது சமூகத்தில் உள்ளவர்கள் வேதனையோடு அனுபவித்து வருகின்ற போதும் அதன் வெளிப்பாடுகளும் இதன் பிரதிபலிப்புக்களும் எம் மத்தியில் உள்ள நிறுவனங்களோ அன்றி எமது சமூகம் சார்ந்த அமைப்புக்களோ பிரதிபலிக்க தவறுகின்றனர். அரசியல் ரீதியாக அரசை சார்ந்து வேலை செய்ய முனையும் தமிழ் பிரமுகர்கள் கண் மூடி அரசுக்கு சேவகம் செய்வது விரும்பத்தக்கது அல்ல.

மாறாக அரசின் சமூக விரோதக் கொள்கையை முறையாக எதிர்க்க வல்ல சமூகம் தழுவிய பிரச்சாரத்திற்கு நாம் எம்மை தயார்படுத்த வேண்டும். எமது சமூகம் கற்பனை வாத அரசியலுக்கு முடிவு கட்டி ஓர் கனடியச் சமூகமாய் மிளிர எமையும் எமைச் சார்ந்தோரையும் நாம் புடம் போட முன்வரவேண்டும்.

உண்மையுள்ள தெளிவுபட்ட அரசியலுக்கு எமது இளம் சந்ததியினரை இட்டுச் செல்ல நமது குடும்பங்கள் திடசங்கற்பம் பூணுவது நல்லது. இதன் மூலமே ஓர் தெளிவுபெற்ற சமூகம் ஒன்றை நாம் உருவாக்க முடியும். வலது சாரி அரசின் மக்கள் விரோத கொள்கைகள் குறிப்பாக குடிவரவு சம்பந்தமாக ஏற்படுத்தப்படும் மாற்றங்கள் இந்த மண்ணில் பாரிய விளைவுகளை செய்து வருகையில் நாமே கனடிய அடையாளத்தை மறந்து தமிழ் என்ற முத்திரையோடு சவாரி செய்வது சும்மா குதிரையில் அல்ல, குருட்டுக் குதிரையில் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.


Photocopies
From 4 cents

Palm Print
1345 Morningside Ave#8



தனித்து நிற்கும் விளம்பரங்கள்

வாசகர் கண்களில் படும்!

தாயகத்திலிருந்து எமது செய்தியாளரின் நேரடிச் செய்திகள், சிந்தைக்கு இன்பம் தரும் சுவாரஷ்யமான ஆக்கங்களின் நடுவே

உங்கள் விளம்பரம்!

உங்கள் சேவைகள், விற்பனைப் பொருட்கள் எதுவாயினும்

பூபாளம் வார இதழில் விளம்பரம் செய்யுங்கள்!

416 284 4004

# தூக்கம் கலைக்கும் தூள்!

பேரறுஞர் கல்லாநிதி கியூறியஸ் ஜி

அம்மையப்பனை எல்லாம் ஊரில் அம்போ என்று விட்டு விட்டு, உலகத்தையும் அதில் உள்ள சகல ஜீவராசிகளையும் சுத்தோ சுத்தென்று சுத்தி வரும் தமிழனுக்கு இரண்டு விடயங்கள் தெரியாது.

முதலாவது உலகம் உருண்டை என்ற உண்மை.

இரண்டாவது, தூள் என்ற சொல்லுக்கு பல அர்த்தங்கள் உண்டு என்ற விடயம்.

முதலாவது, உலகம் உருண்டை என்பதால், ஒரு பக்கத்தில் பகலாக இருக்கும் போது அதன் மறுபுறத்தில் இரவாக இருக்கும் என்ற உண்மை ஈழத்தமிழனுக்குத் தெரியாது. தெரிந்தால், நள்ளிரவில் போன் அடித்து 'என்ன நித்திரையாய் இருக்கிறியோ?' என்று நலன் விசாரிப்பானா?

பின்னே என்னவாம்?

ஊரில் நித்திரை தவிர்ந்த மற்ற நேரம் எல்லாம் செல்போனும் மோட்டோர் பைக்குமாய், அல்லது ஆட்டோவுமாய் திரியும் தமிழனுக்கு காசு இல்லாமல் அரிப்பு எடுக்கும் நேரம் எல்லாம் வெளிநாட்டில் உள்ள உறவுகளின் எண்ணம் ஒரு நாளும் இல்லாமல் வரும்.

சரி, வந்தால் வந்து விட்டுப் போகட்டுமே? இவன் எங்களை சுக நலன் விசாரிக்க வேண்டும் என்று நாங்கள் அவனது கோலை எதிர்பார்த்துக் கொண்டு நித்திரையில்லாமலா இருக்கிறோம்? தேவை என்றால் நாங்களே போன் அடித்து, அதுவும் அவன் தூங்காத நேரமாய் பார்த்து, 'சரி, என்னை சுக நலம் விசாரி' என்று சொல்ல மாட்டோமா?

வேறு நேரம் எதுவும் கிடைக்காமல், நட்ட நடுச்சாமமாய் பார்த்து, நித்திரை விட்டெழுப்பி, சுகநலம் விசாரிப்பான்... 'என்ன நித்திரையாய் இருக்கிறியோ?'.

ஊரில் கடன்காரனைப் பிடிப்பதென்றால் நித்திரைப் பாயில் வைத்துப் பிடிக்கும் பாரம்பரியத்தை நன்றாகத் தெரிந்த இந்த ஈழத் தமிழன், தூக்கம் கலைத்து... நித்திரையாய் இருக்கிறியோ?

அட, 'நித்திரையைக் குழப்பிப் போட்டனோ?' என்று தவறுக்கு வருந்துவோம் என்று கூடக் கிடையாது. அவன் போன் அடிக்கும் போது, நித்திரையாய் இருந்தது எங்களுடைய பிழை என்ற மாதிரி... நித்திரையாய் இருக்கிறியோ?




அதிலும் கியூறியஸ் நித்திரையாய் இருக்கும்போது, அவனை தூக்கம் கலைக்கக் கூடாது என்பதற்காக, அபிதகுஜாம்பாள் அவர் நித்திரை என்று சொன்னாலும், 'எப்ப கேட்டாலும் அவன் நித்திரையாம். அவள் அவனைக் கதைக்க விடாமல் ஒளிக்கிறாள்' என்று குடும்பத்திற்குள்ளேயே கலகம் விளைவித்து விடுகிறார்கள்.

இந்த விசயத்தில் கியூறியஸ்க்கு ஈன இரக்கம் கிடையாது.

'நான் இப்ப நித்திரையாய் இருக்கிறன். பிறகு அடி!'

ஒருநாள் இப்படித் தான் கியூறியஸின் அண்ணன் வாங்கிக் கட்டினான்... என்ன நான் எடுக்கிற நேரம் எல்லாம் நித்திரை எண்டிறாய்?

'நீ இருபத்தைஞ்சு வருசமாய் எனக்கு போன் அடிக்கிறாய். உனக்கு இப்பவும் கனடாவில என்ன நேரம் எண்டு தெரியாதோ?'

அதன் பின்னால் கியூறியஸ்க்கு அவனிடம் இருந்து போன் வந்ததாய் ஞாபகம் இல்லை.

ஈழத்தமிழன் தூக்கம் கலைத்து தொ(ல்)லை பேசுவது ஒன்றும் பாசத்தினால் அன்று. வெளிநாட்டுக்கு பேசும்போது மட்டும் உலகத்தில் இல்லாத துன்பம் எல்லாம் அவனைச் சூழும். அவனுக்கு செல்போனுக்கு காசு இருக்கும். ஆட்டோவில் அரைக் கிலோ மீட்டர் போகவும் காசு இருக்கும். பிள்ளைகளை பிரைவேட் ஸ்கூலில் விடவும் காசிருக்கும். ஆனால் வீட்டில் சாப்பாட்டுக்கு மட்டும் காசிருக்காது.

சாப்பாடு வாங்குவதற்கு என்றே திறைசேரியில் தனியாக காசு அடிக்கிறார்களோ தெரியாது. அந்தக் காசு மட்டும் இந்த தமிழனுக்கு கிடையாது.

சரி, கேட்பது தான் பிச்சை, அதைக் கூட பவ்வியமாகக் கேட்போம்? அதுவும் கிடையாது. ஏதோ தன்னுடைய பிள்ளைகள் பட்டினி கிடப்பதற்கு நாங்கள் தான் காரணம் என்று குற்ற உணர்வு வர வேண்டும் என்பதற்காக, வீட்டில் உள்ள பாட்டன், பூட்டன் எல்லாரையும் கூப்பிட்டு, கஷ்டத்தைச் சொல்லியழுவான்.

அதை நாங்கள் அதிகாலை இரண்டு மணிக்கு கேட்க வேண்டுமாம்!

இரக்கம் இல்லா விட்டாலும், பணம் கொடுக்காவிட்டால் பீடை நிறுத்தாது என்று தெரிந்து, 'சரி, போ, நாளைக்கு விடிய அனுப்பி விடுறன்' என்று சொல்லியாவது முறிந்த நித்திரையை ஒட்டலாம் என்றால்... பிறகெப்படி நித்திரை வரும்?

பணம் கிடைத்தால் அது கிடைத்ததைக் கூடச் சொல்லாத இந்த ஈழத் தமிழனுக்கு, அடுத்த தடவை அரிப்பு எடுக்கும் வரைக்கும் சுகநலன் விசாரிக்கும் ஆசையே வராது.

இந்தப் பீடைகளின் தொல்லையைக் குறைக்க வேண்டும் என்பதற்காகத் தான் பூபாளம் தனது இணையத் தளத்தில் தமிழர்கள் வாழும் முக்கிய நாடுகளின் நேரங்களை ஒரே இடத்தில் பார்க்க வழி செய்திருக்கிறது. இந்த இணைப்பை நீங்கள் தாராளமாகவே ஈழத்தமிழனுக்கு அனுப்பலாம்,

'உதைப் பாத்திட்டு எண்டாலும் நேரத்தைப் பாத்து போன் அடி'.

அந்தத் தமிழன் அந்த நேரத்தைப் பார்க்க, தனக்கு கம்பியூட்டரும் இணைய இணைப்பும் இல்லை, அதற்கும் காசு வேண்டும் என்று மூக்கால் அழுதால் அதற்கு கியூறியஸ் எந்த விதத்திலும் ஜவாப்தாரி அல்ல.

இப்படியாகத் தான், ஒரு நாள் நள்ளிரவு தூக்கம் கலைத்து கியூறியஸ்க்கும் ஒரு போன் வந்தது, உறவு ஒன்றிடமிருந்து.

'உனக்கு தூள் அனுப்பியிருக்கிறன்'.

கியூறியஸ் சட்ட விரோத நடவடிக்கைகள் எதிலும் ஈடுபடுவதில்லை. அதிலும் இந்த தூள் கடத்தல் என்றெல்லாம் போய் ஆயுட் தண்டனையில் போய் முடியும் எண்ணம் கியூறியஸ்க்கு இருந்ததில்லை. இருந்தாலும் அனுப்பியிட்டான், வந்து கிடைத்தது என்றால் ஒரு பெருந்தொகை தேறும். கடன்களை ஆவது கொடுக்கலாம் என்று மூளையின் ஒரு மூலையில் ஒரு நப்பாசை வராமலும் விடவில்லை.

ஆனால் அதைச் சந்தைப்படுத்த ஆபிரிக்க சகோதரர்கள் வேண்டுமே, கியூறியஸ்க்கு தெரிந்த ஆபிரிக்க சகோதரர்கள் எல்லாம் ஒரிஜினல் ஆபிரிக்க சகோதரர்கள், இந்த விடயங்களை கையாலும் தொடாதவர்கள். நடைபாதை வியாபாரிகளோடு கியூறியஸ்க்கு எந்த சகவாசமும் இல்லை.

நம்ம தமிழர்கள் இதில் பெரிய சாகசம் காட்டுகிறார்கள் என்று கேள்வி. ஆனால் தமிழனை நம்ப கியூறியஸ் தயாராக இல்லை.

இதையெல்லாம் விசாரிக்காமல் எதற்கு இந்தத் தூளை அனுப்பினான்? யார் மூலமாக அனுப்பினான்? வந்தவன் விமான நிலையத்தில் பிடிபட்டு, கியூறியஸிடம் கொடுக்கச் சொன்னார்கள் என்று உண்மையைக் கக்கினால் க(தி)தை என்ன?

நித்திரை மயக்கம் வேறு. மூளை சரியாக வேலை செய்ய மறுத்தது.

'ஆரிட்ட குடுத்து விட்டனி?'

'உவன் சின்னத்தம்பி வந்தவனல்லே, அவனிட்டத் தான்'

நாசமாய் போச்சு. இங்கே இருக்கும்போது, கியூறியஸை விட தான் ஏதோ பணக்காரன் என்று தம்பட்டம் அடிக்கிறவன் அவன். ஊருக்குப் போய், 'உவர் எனக்கு எவ்வளவு காலத்துக்கு முன்னம் கனடாவுக்கு வந்தவர், நான் இப்ப மில்லியன் டொலர் வீடு வைச்சிருக்கிறன்' என்று ஊரில் கதை சொல்லி, கியூறியஸின் உறவுகள் எல்லாம் போன் அடித்து... பிறகென்ன... நள்ளிரவில் தான்... 'உங்க உவன் சின்னத்தம்பி கோடீஸ்வரனாம், நீ உங்க என்ன பண்ணிறாய்?' என்று திட்டு வாங்க வைத்த உந்தச் சின்னத்தம்பியிட்ட தூள் குடுத்து விட்டிருக்கினம்...

சரி... ஆர் உங்க நல்ல லோயர்?

பக்கத்து வீட்டுக்காரர்களுக்கு முன்னாலே, பளிச்சிடும் சிவப்பு, நீல வெளிச்சத்தோடு வீட்டை முற்றுகையிட்டு, கைவிலங்கு சகிதம், டிவியில் முகம் வருவதற்கு முன்னாலேயே, முதலிலேயே போய் சரணடைவோம்.

'என்னத்துக்கு அவனிட்ட அனுப்பினனீ? நான் உந்த தூளை வைச்சு என்ன செய்யிறது?'

'ஏன் நீயும் வீட்டில சமையல் காட்சி இல்லையே?'

பரதேசி... மிளகாய்த்தூளே?

கியூறியஸின் மச்சான் முன்பு ஒரு தடவை ஊருக்குப் போய் வந்த போது, அழைத்து வர கியூறியஸ் விமான நிலையம் போயிருந்தான். வந்த மச்சான் பெரிய பெட்டிகளுடன் வந்திறங்கினான். பெட்டிகளை ஒருவாறாக காருக்குள் ஏற்ற, மச்சான் சொன்னான்... உந்தப் பெட்டி முழுக்க மிளகாய்த் தூள்!

இதென்ன அநியாயம்?

முன்பு இப்படித் தான் ஒருமுறை கியூறியஸ் கொழும்பில் உள்ள தன் அக்காவுக்கு போன் அடித்தான். அக்காவுக்கு போன் கிடையாது. பக்கத்து வீட்டுக்குத் தான்.

'ஐயோ, அவுங்க வீட்ட பெறிய பிறச்சனை?'

கியூறியஸ்க்கு திகில் பிடித்தது. நெஞ்சம் துணுக்குறக் கேட்டான் கியூறியஸ் 'என்ன பிரச்சனை?'.

'இல்லை, அவங்க தம்பி கனடாவில இருக்கிறாங்களாம். அவங்களுக்கு அனுப்ப மிளகாய்த்தூள் இடிக்கிறாங்களாம்'.

பரிநாசமாய் போச்சு! கனடாவில் இருக்கிற தம்பிக்காக, பக்கத்து வீட்டுக்காரன் தும்மித் தொலைக்க வேண்டியிருக்கிறது.

உடனே அக்காவைக் கூப்பிட்டு 'என்ன வேலை செய்யிறியள்?' என்று கோபமாய் கேட்க...

'ஐயோ, ராசா, உனக்கு நாங்கள் ருசியாய் சமைச்சுத் தர முடியேலை. நீயும் வர மாட்டன் எண்டிறாய். அதுதான் மிளகாய்த் தூள் இடிச்சு அனுப்புறம்'

'அக்கா, உங்கட மிளகாய்த் தூளை எல்லாம் தூக்கிச் சாப்பிடுற மாதிரி இங்க நிரு பிராண்ட் மிளகாய்த் தூள் கிடக்குது. நாங்கள் அந்தக் காலம் தொடக்கம் அது தான் வாங்கிச் சமைக்கிறனாங்கள். உந்த மிளகாய்த் தூள் அனுப்பிற வேலை வைச்சுக் கொள்ள வேண்டாம்'.

அக்கா கொஞ்ச நேரம் பேசவே இல்லை. 'சரி, அப்ப என்ன அனுப்பிறது, ராசா?'

'அக்கா, இங்க எனக்கு எல்லாம் கிடக்குது. உங்க இருந்து ஏதும் அனுப்பிறதெண்டால், பற்றிக் சேட், சாரம், பாகல் விதை... மற்றும்படி எனக்கு வேற ஒண்டும் வேண்டாம்'.

இப்படியாக அக்கா வீட்டு 'பெறிய பிறச்சனை' முடிவுக்கு வந்தது.

இந்தத் தமிழனுக்கு அப்படி என்ன பிரச்சனை? இங்கே கடை முழுவதும் மிளகாய்த் தூள் என்ன, பத்தியத் தூள் வரைக்கும் கிடைக்கிறது. (நிரு பிராண்ட் தான்! நிரு பிராண்ட் ரசத் தூள் மான்மியம் பற்றி கியூறியஸ் எப்போதாவது சொல்வான்!) இதற்குள் எப்படி 'தாயகத்திலிருந்து வருவிக்கப்பட்ட' மிளகாய்த் தூளில் அப்படி ஒரு ருசி?

இதையெல்லாம் மினக்கெட்டு வறுத்து இடிச்சு, யாரோ ஒருத்தனிடம் கொடுத்து விட்டு, அவனும் வேலை மினக்கெட்டு தூக்கி வந்து, சுங்க வரி கடந்து, விமானம் ஏறி... பாதுகாப்புப் படைக்கு விளக்கம் சொல்லி... இதெல்லாம் தேவையா?

இங்கே இருந்து சும்மா கண்டதுக்கும் காசை அனுப்பி சனத்தைப் பழுதாக்கிற தமிழனுக்கும், அங்கே வேலை வெட்டியில்லாமல் சும்மா வெளிநாட்டுப் பணத்தில் சொகுசு காட்டுகிற தமிழனுக்கும்... இந்த மிளகாய்த் தூளாலே... கண்ணில் அடிக்க வேண்டும்.

இது வரை காலத்தில் ஒரு தமிழனும் அங்கே போன் அடித்து 'என்ன அனுப்ப?' என்று கேட்பவனிடம் சொல்வதில்லையா நிரு பிராண்டின் பெருமையை?

இங்கே மட்டும் என்ன வாழுதாம்? இங்கேயும் வீட்டில் மிளகாய் வறுத்து மில்லில் இடிப்பவர்கள் இருக்கிறார்கள். பக்கத்து வீட்டுக்காரன் பாவம்... தீயணைக்கும் படைக்கு feeling hot! hot! என்று அவசர அழைப்பு விடுத்தாலும், தீயணைப்பவன் வந்து 'எங்கேயப்பா நெருப்பு?' என்று தேடித் திரிவான். அப்புறமாய் எரிவு தாங்காமல் கொண்டு வந்த தண்ணீரிலேயே முழுகித் தோய்வான்.

நெருப்பில்லாமலேயே எரியப் பண்ணும் இந்த கொடுந் தீ மேல் தமிழர்களுக்கு காதல் வந்ததற்கு காரணம் இருக்க வேண்டும். சும்மா இல்லை.

அங்கே இருந்து பணம் வாங்குபவனுக்கும் வாங்குகிற பணத்திற்கு பிராயச்சித்தமாக எதையாவது கொடுத்து கடன் கழிக்க வேண்டும். அதற்கு பெறுமதியான பொருள் ஒன்றை அனுப்ப வேண்டும். அந்தப் பொருளை கனடாவில் உள்ளவன் விற்று காசாக்குவான், தன் கடன் கழியும் என்பது தான் ஈழத்தமிழன் கணக்கு.

அதற்காகத் தான் அவன் தூள் அனுப்புகிறான்.

ஆனால் அவன் அதை அனுப்புவதற்கும் ஒரு வரலாற்றுப் பின்னணி இருக்கிறது. கியூறியஸின் நீண்ட கால ஆராய்ச்சியின் பின்னான ஊகப்படி இதற்கு ஒரு சாத்தியமான விஞ்ஞான விளக்கம் ஒன்றுண்டு.

எழுபதுகளின் இறுதிப் பகுதியில் பேர்லின் சுவரைக் கடந்து சில பல தமிழர்கள் புலன் பெயர்ந்தனர். வந்தவர்களில் சிலர் போதைப் பொருள் வியாபாரத்திலும் ஈடுபட்டனர். சிலர் இதற்காகவே பாகிஸ்தான் வரைக்கும் போய் வயிற்றுக்குள் போதைப் பொருளை மறைத்து கடத்தி வந்து (எப்படி என்று கேட்கக் கூடாது!) பெரும் பொருள் சம்பாதித்தனர். சிலர் இதனால் சிறையும் சென்றனர்.

முன்பு கியூறியஸ் சிங்கமாய் சிங்கிளாக இருந்த காலத்தில், அடிக்கடி பார்ட்டிகளில் புதியவர்களைக் காண்பதுண்டு. அப்போது வந்தவர்களை அறிமுகப்படுத்துவார்கள்.

'இவர் பேர்ளினில தூள் செய்தவர்'

'இவர் பரிஸில உள்ளுக்க இருந்தவர்'.

இந்த சிறை மீண்ட செம்மல்கள் எல்லாம் கியூறியஸைப் பார்த்து, அர்த்த புஷ்டியோடு சிரிப்பார்கள். ஏதோ ஹார்வாட், ஒக்ஸ்போட்டில் படித்த மாதிரி, தங்களுடைய தராதரத்தின் பெருமை உனக்கெல்லாம் விளங்காது என்பது போல!

இப்படியாகப் பிடிபட்டு சிறை மீண்டு, நாடு கடத்தப்பட்ட யாரோ தமிழ்த்திருமகன் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்திருக்க வேண்டும். பெல்பொட்டம், ஹிப்பித் தலை, கையில் ஓடியோ கசட் சகிதம் வேம்படிப் பாடசாலை முடியும் நேரமாய் பஸ் நிலையத்தில் வந்துலாவியவர்களில் ஒருவராக இருக்கக் கூடும்.

இவரைக் கன காலத்தின் பின்னால் கண்ட யாரோ சுக நலம் விசாரித்திருக்க வேண்டும்.

'என்னடாப்பா, கன காலமாய் காணேலை? நீ எங்கயோ வெளிநாட்டுக்கு போட்டியாம் எண்டாங்கள்?'

'ஓமோம், திரும்பி வந்திட்டன்'

சிறை மீண்ட கதையைச் சொல்லியிருக்க மாட்டார்.

'அப்ப நல்லா உழைச்சிருக்கிறாய் போல'

'ஓம், தூள் செய்தனான்'.

தூள் விற்றவரும் கிடையாது, கடத்தியவரும் கிடையாது. தூள் செய்தவராம்!

ஏதோ தமிழ்ப் படத்தில் வருகின்ற முனிவர்கள் குகைக்குள் சோதனைக் குழாய்களும் குடுவைகளும் வைத்து மூலிகை ஆராய்ச்சி செய்து 'சக்சஸ்' என்று கத்துவது போல, இவரும் ஏதோ பரிசோதனைச் சாலை வைத்து தூள் செய்தவராம்.

கேட்ட யாழ்ப்பாணக் கிராமவாசிக்கு தூள் என்றால் என்ன என்றே தெரியாது. போதைப் பொருள் என்றாலும், தக்காளிக்கு நடுவில் நட்ட கஞ்சா, புளிக்குள் வைத்து விற்ற அபின், தினகரன், வீரகேசரி இரண்டிலும் முன்பக்கத்தில் பத்திரிகைப் பெயரின் பக்கத்தில் பெரிதாகப் போடுகின்ற லேகியம்... இவற்றைத் தவிர வேறு வகையறாக்களைக் கேள்விப்பட்டே இருக்க மாட்டார்.

கள்ளும் கசிப்பும் அடித்த கூட்டத்திற்கு கொக்கெய்ன், ஹெரோயின் பற்றி என்னதான் தெரியும்?

'அப்ப என்ன, தூள் அங்க நாய் பேய் விலையோ?'

யாழ்ப்பாணத்தில் நாய், இரவில் அதில் ஏறுகின்ற பேய் இரண்டும் மிகவும் மலிவு. இருந்தாலும் பிரமிப்போடு கேட்டிருப்பார்.

'அது ஒரு கிராம் இத்தனை ஜேர்மன் மார்க்'

இது இரண்டு பேருக்கும் இடையில் நடந்திருக்கக் கூடிய உரையாடல். இதை இந்த பஸ் ஸ்ராண்டில் நின்ற அத்தனை பேரும் காதை எறிந்து விட்டு கேட்டுக் கொண்டிருந்திருப்பார்கள். ஆள் மைனர் மிடுக்காய்... நெஞ்சைத் திறந்து காட்டி, கழுத்தில் தொங்கும் சங்கிலி, கையில் அம்மிக் குளவி பாரத்தில் மணிக் கூடு. ஆறங்குலம் உயர்த்தும் பிளட்போர்ம் சப்பாத்து, பெல் பொட்டம்...

'வெளிநாட்டில நல்லா அள்ளியிட்டு வந்திருக்கிறான்'

கேட்டுக் கொண்டிருந்த அத்தனை பேரும் வாய் ஊறியிருப்பான்.

இந்தக் கதை இப்படியே குடாநாடெங்கும் பரவியதால் தான் குடாநாட்டுத் தமிழன் இன்றைக்கும் வெளிநாட்டுக்கு வரும்போது மறக்காமல் இரண்டு கிலோ தூள் கட்டிக் கொண்டு வருகிறான். கொண்டு வந்தால் நாய் பேய் விலைக்கு விற்கலாம் என்று. இதனால் தான் அங்கிருந்து போன் அடித்துப் பணம் வாங்கியதற்கு பிராயச்சித்தமாய் 'அலுகோசுகளின் ஆட்சியில் கலர் காட்டி வரும்' ஒவ்வொருவரிடமும் தூள் கொடுத்து விடுகிறான்.

இப்படியாகத் தான் தமிழன் பாரம்பரியத்திலும் வரலாற்றிலும் தூள் என்ற சொல் திரிபடைந்திருக்க வேண்டும்.

அந்தத் தூளின் மான்மியம் தெரிந்ததால் தான் தமிழன், நட்ட நடுநிசியில் போன் அடித்து 'தூள் அனுப்பிய' கதையை மிகவும் உற்சாகத்தோடு சொல்லி தூள் கிளப்புகிறான்.

இப்போது பூபாளம் இணையத் தளத்தில் உலகில் தமிழர்கள் வாழும் நாடுகளில் நேரங்கள் பார்க்க வசதி செய்யப்பட்டுள்ளது.

இனிமேல், ஆழ்ந்த உறக்கத்தில் கிடக்கும் கியூறியஸை மவனே... எவனாவது இன்னொரு வாட்டி நித்திரைப் பாயில் எழுப்பி, 'தூள் அனுப்பியிருக்கிறன்' என்ற இனிப்பான செய்தியை... சே... உறைப்பான செய்தியைச் சொன்னால்... நடக்கிறதே வேறை!

